வாசனா சம்பத
இன்றைய சுப்பர் பரிசு
ரூ. 101 இலட்சம்
[10,183,768.40]
வாழ்வின் களவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

# உதயன்

விலை: 20/-
பக்:28
சுடர் 31 | கதிர் 259 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 27, வியாழக்கிழமை 11.08.2016

போராளிகள் ஊசி விவகாரம்

## வெளிநாட்டு மருத்துவ சோதனைக்கு கொழும்பு அரசு தயார்

கொழும்பு, ஓக. 11
விச ஊசி ஏற்றிய குற்றச்சாட்டுத் தொடர்பில், முன்னாள் போராளிகள் உள்நாட்டு மருத்துவப் பரிசோதனையில் நம்பிக்கை இழந்தால், பன்னாட்டு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கின்றது. இவ்வாறு தெரிவித்தார் சுகாதார

>> 25ஆம் பக்கம்

முச்சந்தி முரளி



*சபாஷ்! சரியான போட்டி. பார்ப்பம் யார் முதலில விசாரிக்கினம் எண்டு....!*

சண்டை முடிந்த பின்னும்

## 12 போர் விமானங்கள் வாங்க நேற்று அனுமதி

கொழும்பு, ஓகஸ்ட். 11
நாட்டின் தேசிய பாதுகாப்பையும் கடற்பாதுகாப்பையும் உறுதி செய்யும் நோக்கில் 8 தொடக்கம் 12 வரையான போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக, அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்கில் ஓர் அரசிடமிருந்து பிறிதொரு அரசுக்கு பொருள் கொள்வனவு செய்யும் அடிப்படையின் கீழ் போர் விமானங்களைக்

>> 24ஆம் பக்கம்

## 15 வருடங்கள் கடுழியச் சிறை

வாய்பேசாத பெண்ணை வன்புணர்ந்த நால்வருக்கு மேல் நீதிமன்று நேற்றுத் தீர்ப்பு

வாய்பேச முடியாத இளம் பெண்ணைக் கடத்திச் சென்று துன்புறுத்திக் கூட்டு வன்புணர்வு புரிந்த 4 பேருக்கு யாழ். மேல் நீதிமன்று நேற்று தலா

>> 23ஆம் பக்கம்

எங்கள் நிலமும் எங்கள் வீடும்



இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கும் தமது காணிகள், வீடுகளை விடுவிப்பது தொடர்பாக இராணுவத்தினரிடம் கலந்துரையாடுவதற்கு நேற்றைய தினம் குறித்த இடத்திற்குச் சென்ற தாயொருவர் தனது மகனுக்குத் தாங்கள்

>> 24ஆம் பக்கம்

வித்தியா படுகொலை

## ஆரம்ப விசாரணை நிறைவு

*யாழ். மேல் நீதிமன்றில் நேற்று அறிவித்தார் சட்டமா அதிபர்*

யாழ்ப்பாணம், ஓக. 11
புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் பொலிஸ் விசாரணைகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.
விசாரணை அறிக்கைகள் சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டு, அவற்றை சட்ட மா அதிபர் திணைக்களம் பரிசீலிக்கிறது என்று யாழ். மேல் நீதிமன்றில் நேற்று அறிவித்தார் அரச சட்டத்தரணி ஸ்க்கி இஸ்மாயில்.
புங்குடுதீவு மாணவி

>> 23ஆம் பக்கம்

## விக்கியுடன் கலந்துரையாடியே மீள்குடியமர்வு குறித்த முடிவுகள்

*செயலணி குறித்து ரணில் நாடாளுமன்றில் அறிவிப்பு*

கொழும்பு, ஓக. 11
வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளில் தலையிடவோ அல்லது அதனுடன் முரண்படவோ கொழும்பு அரசு தயாரில்லை. மீள்குடியேற்றச் செயலணி குறித்து வடக்கு மாகாண சபை யோசனைகளை முன்வைத்தால் கருத்திற் கொள்ளப்படும். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் கலந்துரையாடியே செயலணி முடிவுகளை எடுக்கும்.
இவ்வாறு நேற்றுச் சபையில் அறிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மீள்குடியேற்ற செயலணிக்குள் வடக்கு முதலமைச்சர் உள்வாங்கப்பட வேண்டும். அவர் இணைத்துக் கொள்ளப்படுவாரா? எனத் தொடுத்த வினாவுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது பிரதமர் தெரிவித்ததாவது:
நடுவண் அரசானது தனது பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்கும் வகையிலேயே இந்தச் செயலணியை அமைத்துள்ளது.

>> 24ஆம் பக்கம்

அமரசேகரவின் மனுவை

## நிராகரித்தது உயர் நீதிமன்றம்

கொழும்பு, ஓக. 11
போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு பன்னாட்டு நீதிபதிகள் அழைக்கப்படுவார்களா என்பது குறித்து தெளிவுபடுத்தும்படி அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க முடியாதென்று

>> 24ஆம் பக்கம்



## அமெரிக்கா தொடர் ஆதிக்கம்

ரியோ ஒலிம்பிக் பதக்கப் பட்டியலில் நேற்று இரவு வரை இலங்கை நேரப்படி அமெரிக்காவின் வலுவான ஆதிக்கம் நீடிக்கிறது. 10 தங்கம், 8 வெள்ளி, 9 வெண்கலம் என 27 பதக்கங்களைப் பெற்றது. 8 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலம் என 17 பதக்கங்களுடன் சீனா அடுத்த இடத்தில்.

## நல்லூரில் சிக்கினர் திருடர்கள்

யாழ், ஓக. 11
நல்லூர் ஆலயச் சுற்றாடலில் திருட முற்பட்ட குற்றச்சாட்டில் நேற்று மட்டும் ஒன்றன்பின் ஒன்றாக 7 பேர் கைது

>> 24ஆம் பக்கம்

காணாமற்போனோர் அலுவலகம்

## நாளை வாக்கெடுப்பு

கொழும்பு, ஓக. 11
காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டவரைவு மீது நாளை மாலை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படவிருக்கிறது.
சட்டவரைவுக்கு ஆதரவாக அரசும், பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வாக்களிக்கவுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள

>> 23ஆம் பக்கம்

## பெற்ற குழந்தையை வீதியில் வீசிய பெண் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஓக. 11
இளவாலை-வடலியடைப்பில் ஆண்குழந்தையைப் பெட்டியில் வைத்துவிட்டுத் தலைமறைவான குற்றச்சாட்டில் பெண் ஒருவரும், அதற்குக் காரணமானவர் என்று குற்றஞ்சாட்டப்படும் இளைஞன் ஒருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த பெண் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது, அதற்குக் காரணமானவர் என்று இளைஞன் ஒருவர் மீது அவர் குற்றஞ்சாட்டினார்.
பிறந்து 20 நாள்களேயான ஆண் குழந்தை ஒன்று வீடு ஒன்றின் முன்பாக பெட்டியில்

>> 24ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண உதவிப் பதிவாளர் நாயகமாக பிரபாகர் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 11

வடக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகமாக பி.பிரபாகர் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை பதவியேற்கிறார்.

யாழ். மாவட்ட காணி மேலதிக மாவட்டப் பதிவாளராக கடந்த 11 ஆண்டுகளாக பி.பிரபாகர் கடமையாற்றி வருகின்றார். இந்த நிலையிலேயே அவருக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகமாக பதவி உயர்வு கிடைக்கப் பெற்றது.

வடக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகமாக கடமையாற்றி வரும் செல்வி அனந்தி ஜெயரட்ணம், பதிவாளர் திணைக்களத்தின் தலைமையகத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். வெற்றிடமாகியுள்ள யாழ். மாவட்ட காணி மேலதிக பதிவாளர் பதவிக்கு, முல்லைத்தீவு மாவட்டத்தின் காணி மேலதிக பதிவாளர் செல்வி குணாஜினி கோபாலரட்ணம் நியமிக்கப்பட்டார்.

(வ-5)

# ஒருவரைக் கடத்திக் கொலை செய்த குற்றவாளிக்கு 20 வருட கடூழியச் சிறை

*வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு*

வவுனியா, ஓக. 11

வவுனியாவில் ஒருவரைக் கடத்திச் சித்திரவதை செய்து கொலை செய்தவருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று 20 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

வவுனியா- செட்டிகுளம் பகுதியில் 2013ஆம் ஆண்டு லெட் சுமணன் குலராசா என்பவர் கடத்திக் கொலை செய்யப்பட்டார். அந்தக் குற்றச்சாட்டில் ஆறுமுகம் சசிகுமார், காளிமுத்து சுரேஸ் ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் 2013ஆம் ஆண்டு சட்டமா அதிபரினால் வழக்கத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணை இடம்பெற்று நேற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்கின் இரண்டாம் எதிரியான காளிமுத்து சுரேஸ் என்பவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு சாட்சிகள் இல்லாத காரணத்தினால் இந்த வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். முதலாம் எதிரியான ஆறுமுகம் சசிகுமார் என்பவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு குற்றவாளியாக மன்றினால் அறிவிக்கப்பட்டார். இதனையடுத்து அவருக்கு 20 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து, வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் தீர்ப்பளித்தார்.

(வ-4)

# வவுனியா மாணவி படுகொலை; சந்தேகநபர் பிணையில் விடுவிப்பு

வவுனியா, ஓக. 11

வவுனியாவில் பாடசாலை மாணவி வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் நேற்று வவுனியா மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வவுனியா-உக்கிளாங்குளத்தில் பதின்ம வயதுடைய பாடசாலை மாணவி, கடந்த பெப்ரவரி மாதம் 16ஆம் அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரியின் விசாரணை அறிக்கையில் மாணவியின் உடலில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்மைக்கான தடயங்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து மாணவியின் அயல் வீட்டைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தப்படுகொலைதொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிவான் மன்றில் இடம்பெற்று வருவதனால் சந்தேக நபர் கடந்த 5 மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இதனால் பிணையில் விடுவிக்கக் கோரி வவுனியா மேல் நீதிமன்றில் சந்தேகநபர் விண்ணப்பம் செய்தார்.

அந்தப் பிணை விண்ணப்பம் மீதான விசாரணை நேற்று வவுனியா மேல் நீதிமன்றினால் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சட்டமா அதிபர் சார்பில் தோன்றிய அரச சட்டவாதி நிஷாந்த் நாகரட்ணம், சந்தேகநபருக்கு பிணை வழங்குவதற்குக் கடும் ஆட்சேபணையை தெரிவித்தார். எனினும் இந்த வழக்கிலே தொடர்புடைய சந்தேக நபர் ஆறு மாதகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதையும் குற்றச்சாட்டு ஒன்று நிரூபிக்கப்படும் வரை எந்த ஒரு நபரும் குற்றம் அற்றவர் என்ற காரணத்தினாலும் பிணை மன்றினால் வழங்கப்பட்டது. அதன்படி 2 லட்சம் ரூபா காசுப்பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள்பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன் நீதிமன்ற வளாக பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் 9 மணிக்கும் 12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் சந்தேகநபர் கையொப்பமிடவேண்டும் என்ற நிபந்தனையும் வவுனியா மேல் நீதிமன்றினால் விதிக்கப்பட்டது.

(வ-4)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தை நேற்று விடுவித்தது இராணுவம்

*தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்துக்குச் சொந்தமானது*

யாழ்ப்பாணம், ஓக. 11

காங்கேசன்துறைப் பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த எரிபொருள் நிரப்பு நிலையம் வலி.வடக்குப் பிரதேச செயலகத்திடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

வலி. வடக்கின் நடேஸ்வராக கல்லூரி விடுவிக்கப்பட்ட பின்னர் இறுதியாக விடுவிக்கப்பட்ட 201 ஏக்கர் நிலப் பரப்பில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று தொடர்ந்தும் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது.

இந்த எரிபொருள் விற்பனை நிலையம் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தினரால் நடத்தப்பட்டு வந்தபோதும், இடப்பெயர்வின் பின்னர் படையினர் வசமே இருந்தது. அதனை மீள வழங்குமாறு விடப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் எரிபொருள் விற்பனை நிலையம் நேற்று வலி.வடக்குப் பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்டது. அது மீளவும் ப.நோ.கூ. சங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

(வ-5-101)

# தேன் வியாபாரி சிக்கினார்

தேனில் கலப்படம் செய்து மோசடியில் ஈடுபட்டு வந்த தேன் வியாபாரி ஒருவர் வகையாக மாட்டிக் கொண்டார். நீதிமன்றில் நிறுத்தப்பட்ட அவருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த வவுனியா நீதிவான் எல்.லெனின் குமார், கைப்பற்றப்பட்ட 59 தேன் போத்தல்களை அழிக்குமாறும் உத்தரவிட்டார். வவுனியா-நெடுங்குளத்தைச் சேர்ந்த ஒருவர் சீனியைப் பயன்படுத்தி தேன் தயாரித்து மக்களை ஏமாற்றி வந்தார். இவர் இரவில் தயாரிக்கும் தேனைப் பகல் நேரங்களில் கிராமப்புறங்களில் விற்பனை செய்வது வழக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(வ-115)

# தடை நீடிப்பு

யாழ்ப்பாண ஆலயங்களில் இடம்பெறும் வேள்விக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு எதிர்வரும் ஒக்ரோபர் 26ஆம் திகதிவரை யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று நீடிக்கப்பட்டது. வேள்விகளை தடுத்து நிறுத்துமாறு கோரி சைவ மகா சபையினரால் தாக்கல் செய்த வழக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தவர் முன்னாள் போராளியல்ல

*கறுக்காய் தீவு மக்கள் தெரிவிப்பு*

சுகவீனம் காரணமாக உயிரிழந்த பூநகரியைச் சேர்ந்த நபர் முன்னாள் போராளி அல்ல, அவர் பண மோசடி தொடர்பான வழக்கொன்றுக்காகவே சிறையில் அடைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறானவை.

இவ்வாறு தெரிவித்தனர் பூநகரி - கறுக்காய் தீவைச் சேர்ந்த மக்கள்.

காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் கடந்த 7ஆம் திகதி சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்த நடராஜா கலியுகராஜா முன்னாள் போராளி எனவும், அவர் தடுப்பில் இருந்து வந்தவர் எனவும் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தன. இந்த விடயம் தொடர்பாக குறித்த நபர் வசித்த பூநகரி- கறுக்காய் தீவு மக்கள் 'உதயன்' பத்திரிகையிடம் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

"குறித்த நபருடைய தாய் தந்தை மற்றும் சகோதரர்கள் வெளிநாட்டில் (பிரான்ஸ்) வசித்து வருகின்றனர். இவருடைய நடத்தைகள் பிடிக்காமலயே அவர்கள் இவரைக் கைவிட்டுவிட்டார்கள். இவருடைய மனைவி மற்றும் பிள்ளைகள் முரண்பாடு காரணமாக கடந்த 12 வருடங்களுக்கு மேல் பிரிந்து வாழ்கின்றனர். தாய் தந்தை மற்றும் சகோதரர்கள் வெளிநாட்டில் வசித்து வரும் காரணத் தால், அவர்களுடைய பெயரைப் பயன்படுத்தி கிளிநொச்சி மற்றும் வவுனியா பகுதிகளில் உள்ள பலரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து, அவர்களிடம் இருந்து பெருந்தொகையான பணத்தை பெற்றுள்ளார். பணத்தைப் பெற்றுக்கொள்ளும் போது பெண் ஒருவருடைய வங்கி இலக்கத்தையே பலரிடம் வழங்கியுள்ளார். இவரை நம்பி ஏமாந்தவர்களும் குறித்த பெண்ணினுடைய வங்கி இலக்கத்துக்கே பணத்தை வைப்புச் செய்தனர். அந்தப் பெண் தற்போது வவுனியாவில் உள்ளார். இவ்வாறு பணத்தைப் பெற்று ஏமாற்றியவர்கள் பொலிஸில் முறையிட்டதை அடுத்தே அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இவர் முன்னாள் போராளி என்று கூறுவது போராளிகளை அவமதிக்கும் செயல் என்றுதான் கூறவேண்டும். பண மோசடியில் ஈடுபட்டவர் எவ்வாறு முன்னாள் போராளியாவார். ஊடகங்கள் தவறாக செய்தியைப் பிரசுரித்துள்ளன என அந்த மக்கள் தெரிவித்தனர்.

கலியுகராஜா கொழும்பில் தங்கிருந்த போது, அவருக்கு நோய் ஏற்பட்டுள்ளது. இவருக்கு நோய் இருப்பதாக தெரிவித்த கொழும்பில் இருக்கும் எனது நண்பர், அவருடைய பாவனைப்பொருள்களை தனியாகவே வைக்குமாறு தெரிவித்தார். இதன்படியே நான்னும் பாத்திரங்கள் உட்பட அனைத்தையும் தனியாகவே பயன்படுத்தினேன், அது மாத்திரமன்றி நானும் இவரிடம் 75 லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பணத்தைக் கொடுத்து ஏமாற்றப்பட்டுள்ளேன். இவர் முன்னாள் போராளி என்பது தவறு, அவ்வாறு இருக்க முடியாது. இவர் உயிரிழந்தபோது இவருடைய மனைவி, பிள்ளைகள் இவரது உடலை பொறுப்பேற்க முன்வரவில்லை. நானும், யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது சித்தப்பா ஒருவருமே பொறுப்பேற்றோம். வைத்தியசாலையிலும் இவர் முன்னாள் போராளி அல்ல என்றுதான் தெரிவித்திருந்தோம் என உயிரிழந்த நபர் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

(வ-21)

# பட்டப்பகலில் வீடுடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 11

வீட்டில் யாருமில்லாதவேளை ஜன்னல் கம்பிகளை அறுத்து உள்நுழைந்த திருடர் பெருமளவு நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட வங்கியின் அதிகாரி தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தை அண்மித்த சேர்.பொன்.இராமநாதன் வீதியிலுள்ள வீட்டில் திருட்டு இடம்பெற்றது. நேற்றுக்காலை 8 மணிக்கும் மதியம் 1.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் திருட்டு இடம்பெற்றது. வங்கியிலிருந்து மதிய உணவுக்காக வீட்டுக்கு வந்தபோதே திருட்டுப் போயுள்ளமை தெரிய வந்தது. பொலிஸார் வீட்டில் நேற்று விசாரணை மேற்கொண்டனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(வ-4)

# மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்த முதியவர் சாவு

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென்ற முதியவர், சறுக்கி விழுந்து படுகாயமடைந்த நிலையில் நேற்று சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

யாழ். நாவலர் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் யாழ்ப்பாணம்-பலாலி வீதியைச் சேர்ந்த தங்கவேல் குழந்தைவேலு (வயது -71) என்பவரே நேற்று உயிரிழந்தார். நாவலர் வீதியூடாக நடந்து சென்ற குறித்த முதியவரை, அந்தவழியே சென்ற இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றார். முதியவருக்குத் தலைக்கவசம் இல்லாத நிலையிலேயே ஏற்றிச் சென்றார். சிறிது தூரம் சென்றதும் அந்த முதியவர் மோட்டார் சைக்கிளிலிருந்து வழுக்கி நிலத்தில் விழுந்து காயமடைந்தார். அதன் போதே அந்த வழியே சென்றபடி வாகனத்தை மறித்த இளைஞர் காயமடைந்துவிட்டார் ஏற்றிக் கொண்டு வைத்தியசாலைக்குச் செல்லுங்கள் நான் பின்னால் வருகிறேன் என்றுகூறிய படி வாகனத்தில் ஏற்றிவிட்டு அவர் தப்பிச் சென்றுவிட்டார். வைத்தியசாலையில் சிகிச்சை பயனளிக்காது முதியவர் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வாதாரத்துக்காக

# பணிப் பெண்களாக வெளிநாடுகளுக்கு செல்வோரால் சிறுவர்களுக்குப் பாதிப்பு

***கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவிப்பு***

கொழும்பு, ஓக. 11

போர்ப்பாதிப்பினால் ஏற்பட்ட வறுமை காரணமாக கிளிநொச்சியிலுள்ள அதிகளவிலான பெண்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இதன் காரணமாக மாவட்டத்தில் சிறுவர் பிரச்சினை அதிகரித்துச் செல்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

தென்னிலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் பணிப் பெண்களின் எண்ணிக்கை கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளது. வெளிநாட்டு முகவர்களின் பார்வை வடக்கின் பக்கம் திரும்பியுள்ளது.

தற்போது கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரின் பரிந்துரைகளின் பிரகாரமே பணிப்பெண்கள் வெளிநாடு செல்ல முடியும் என்ற சட்டம் உள்ள போதிலும், அவர்களுக்குத் தெரியாமலே அதிகமானோர் தொடர்ந்தும் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகின்றனர்.

வன்னியில் போர்ப்பாதிப்பினால் நிலவும் அதிகரித்த வறுமையைப் பயன்படுத்திப் பெண்கள் உள்ளீர்க்கப்படுகின்றனர். மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்களின் குடும்பங்கள் சவாலை எதிர்கொள்கின்றனர். கணவனை இழந்த பெண்கள் சிறு பிள்ளைகளை பேத்தியாரின் பராமரிப்பில் விட்டுச் செல்லும்போது, வயது முதிர்ந்த பேத்தியினால் பெண் குழந்தைகளின் விடயத்தில் முழுமையான கவனம் செலுத்த முடிவதில்லை. அதேபோன்று நோய் வாய்ப்பட்ட கணவரை விட்டு குடும்பத்தின் வறுமையைப் போக்கப் பெண்கள் முன்வருகின்றபோதும் குடும்பத்தைப் பராமரிப்பதில் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொள்கின்றனர்.

இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியிலும் வெளிநாடு செல்லும் பெண்கள், அங்கும் பல நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவே தெரிகின்றது. போதிய பயிற்சியோ, மொழிப் பயிற்சியோ இன்றி செல்வதாலும் நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர்.

எதிர்காலத்தில் பணிப்பெண்களாகச் செல்ல எண்ணும் பெண்கள் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதோடு, முடிந்தளவு இவ்வாறு செல்வதைத் தவிர்ப்பதே சிறந்தது. அங்கு சென்று இன்னல்களுடன் திரும்பி இங்கு வந்து முறையிட்டு எம்மால் போதிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது கடினம். இவற்றைக் கருத்திற்கொண்டு இரகசியமான முறையில் செல்லும் செயற்பாட்டை முற்றாகத் தவிர்ப்பதோடு, சட்டமுறையாகச் செல்வது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இரகசியமான முறைகளில் வெளிநாட்டுக்குப் பெண்களை அனுப்பும் முகவர்கள் இனம் காணும் சந்தர்ப்பத்தில் கடும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறான செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் விரைவில் ஓர் செயலமர்வும் இடம்பெறவுள்ளது - என்றார். (வ-5-101)

**தவறிவிட்டது**

அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த முத்துகுமாரசாமி ஆகிய எனது 372902043V இலக்க தேசிய அடையாள அட்டை, தில்லையம்பலம் பத்மாவதி என்பவரது பெயரிலுள்ள கொமர்ஷல் வங்கிக்கணக்குப் புத்தகம்(சுன்னாகம் கிளை), மின்சாரக்கட்டணப் பட்டியல் அடங்கலான கைப்பை ஒன்று 2016.07.28 ஆந் திகதி சுன்னாகம் கொமர்ஷல் வங்கிக்கும் இணுவில் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்பு.0771856135

**PART TIME JOBS**

* Data Entry
* Web Site Developers

கணினி, ஆங்கில அறிவுள்ள சனி, ஞாயிறு தினங்களில் வீட்டில் இருந்தவாறே பகுதிநேரமாக பணியாற்றி அதிக வருமானத்தினைப் பெற விரும்புவர்கள் இன்றே பதிவினை மேற்கொள்ளுங்கள்.

(பதிவுக் கட்டணம் உண்டு)

முடிவு திகதி : 13.08.2016

**WINSTAR JOB BANK**

106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.

076 5450539

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2790 திகதி 10.08.2016

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து

15 26 47 63 H

போனஸ் இல, சனிக்கிழமை ஜக்பொட்

20 ரூ.11,753,300/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB-space-LOT-space-SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

2016.08.13 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.

Galaxy Star

வெற்றி வாரம் 082 திகதி 10.08.2016

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்

10 15 18 48 55

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB-space-LOT-space-GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919

அடுத்த ஞாயிற்றுக்கிழமை

சுப்பர் பரிசுப் பொதி

ரூ. 31,81,820/-

2016.08.14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.**

**அறிவித்தல்**

**கலை முதற்தேர்வு - 2013 (வெளிவாரி) (மீள்பரீட்சை)**

மேற்படி மீள்பரீட்சைக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி 12.08.2016 (வெள்ளிக்கிழமை) வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன், இப்பரீட்சையை எதிர்வரும் 27.08.2016 (சனிக்கிழமை) தொடக்கம் 17.09.2016 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 24.08.2016 (புதன்கிழமை) தொடக்கம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்

09.08.2016

**காணவில்லை**



கதிர்வேல் ஒழுங்கை அரியாலையைச் சேர்ந்த இலகுப்பிள்ளை மோகனதாஸ் என்பவரை 09/08/2016 செவ்வாய்க்கிழமையில் இருந்து காணவில்லை. நீல நிற சாரமும், மஞ்சள் நிற சேட்டும் அணிந்திருந்தார் மனநோயால் பாதிக்கப்பட்டவர் இவரைக் கண்டவர்கள் உடன் அறியத்தரவும்.

தொடர்பு.0775130641

**கேள்வி அறிவித்தல்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

கீழ்க்காணும் உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாண பல்கலைகழக பதிவாளர் பணிமனையில் 26.08.2016 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| இல | உணவகங்கள் |
|---|---|
| 1) | பிரதான உணவகம் 1-யாழ்ப்பாண பல்கலைக்கழகம், திருநெல்வேலி |
| 2) | பிரதான உணவகம் 2-யாழ்ப்பாண பல்கலைக்கழகம், திருநெல்வேலி |
| 3) | RAFA உணவகம் -மருதனார்மடம் |
| 4) | பொறியியல் பீட உணவகம்- அறிவியல் நகர், கிளிநொச்சி |

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 2000/- உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/- உம் தனித்தனியாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மக்கள்வங்கி கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்கு செலுத்தி அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையிலிருந்து அல்லது கிளிநொச்சி அறிவியல் நகர வளாகத்தில் அமைந்துள்ள பிரதிப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாண பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம். 11.08.2016



**காரைநகர் மணற்காடு அருள்மிகு தேவி கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆடித்திருக் குளிர்த்தி மகா சங்காபிஷேகம்**

அம்பிகையின் மகா சங்காபிஷேகம் (1008) உற்சவநாயகி எழுந்தருளி அம்பாள் மகா சங்காபிஷேகம் (1008) பரிவார மூர்த்திகள் ருத்ராபிஷேகம் மங்கலகரமான துர்முகி வருடம் ஆடித்திங்கள் 28ஆம் நாள் (12.08.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் தேவியின் திருவருள் துணைகொண்டு வெகு சிறப்பாக நிகழும்.

**தேவஸ்தான பிரதமகுரு**

சிவஸ்ரீ.நா. ஞானசம்மந்தக்குருக்கள்

**சங்காபிஷேக பிரதமகுரு**

சிறிகுமார சரவணபவக்குருக்கள்-இணுவில்

**மங்கல இசை**

K.நாகதப்பன் குழுவினர்-தாவடி

மணற்காடு, காரைநகர்

வை.கா.தவராசனும் அம்பிகை அடியவர்களும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பனை அபிவிருத்திச் சபை
## PALMYRAH DEVELOPMENT BOARD

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு
Ministry of prison Reforms, Rehabilitation, Resettlement and Hindu Religious Affairs

### Vacancies

Applications are invited from citizens of the Democratic Socialist Republic of Sri Lanka for the following post of Palmyrah Development Board

Employee Category:

1. **Development Assistant**
2. **Production Assistant**

**Qualifications**

**1.Educational**

a) Having passed G.C.E.(O/L) examination in six subjects in one sitting with credit passes for four subjects including
   i) Sinhala /Tamil
   ii) Mathematics

b) Having achieved the performance level required to follow a tertiary education course by passing the required number of subjects other than the "General Paper" at the G.C.E. (A/L) Examination.

**2.Vocational :**

Having successfully completed a Diploma or Certificate Course not below the N.V.Q. Level 5, conducted by a Recognized Institute of Technological Training in Agricultural Sector for Development Assistant and Food & Technology for Production Assistant.

Salary Scale: Rs.14,610 – 10x145-7x170-240-20x320 -24610/= & Other approved government allowances will be paid.

**Age Limit** : Should not be less than 22 years and not more than 45 years.

Applicants should forward their curriculum vitae with the copies of certificates and testimonials together with the names and address of two non-related referees under registered post to reach Chairman, Palmyrah Development Board, National Housing Secretariat Authority Building, 1st Floor, Kandy Road, Jaffna on or before 25th August,2016. Late applications will not be considered.

Applications from officers in Government Departments/ Corporations/ Statutory Boards should be forwarded through their Head of the Department. A copy may be sent directly. Please mark the post applied for on the top left hand corner of the envelope.

Chairman
Palmyrah Development Board

## திருக்கேதீச்சரம் சிவன் அருள் இல்லம்

### பணியாளர்கள் வேண்டுகை

மன்னார் திருக்கேதீச்சரம் சிவன் அருள் இல்லம் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கு மனிதநேயப் பணியாளர்கள் தேவை.

| | | |
|---|---|---|
| நிர்வாக அலுவலர் (பெண்) | - | 01 |
| இல்லமேற்பார்வையாளர்(ஆண்) | - | 02 |
| நிர்வாக உதவியாளர்(பெண்) | - | 01 |
| சமையலாளர்(பெண்) | - | 01 |

**தேவையான தகைமைகள்**

**நிர்வாக அலுவலர்:**

இளைப்பாறிய அரச அலுவலர்கள் அல்லது அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்கள், சிறுவர் இல்லத்தை நிர்வகிக்கக் கூடிய ஆற்றல் உள்ளவர்கள்.

**நிர்வாக உதவியாளர்:**

குறைந்தது க.பொ.த(உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். வர்த்தக பிரிவு விரும்பத்தக்கது.

**மேற்பார்வையாளர்கள்:**

குறைந்தது க.பொ.த(சாதாரணதரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**பொதுவான தகைமைகள்:**

வயது 22 - 50 இற்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும். அரச சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கு வயதுக் கட்டுப்பாடு தளர்த்தப்படும். சிறுவர் ,சிறுமியர்களுடன் அன்பாகவும் பாசமாகவும் பழகக்கூடியவர்களாகவும் நல்லொழுக்கம் உடையவர்களாகவும் இருப்பதுடன் சைவசமய விழுமியங்களில் ஈடுபாடு உள்ளவர்களாகவும் அதற்கேற்ப சிறுவர், சிறுமியரை வழி நடத்தக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். முன் அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது. இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- தங்குமிட வசதியும் சைவ உணவும் இலவசமாக வழங்கப்படும்.
- ஏனைய விடயங்கள் பேசித் தீர்மானிக்கப்படும்.
- தாங்கள் விண்ணப்பிக்கும் பணிநிலையைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**முடிவு திகதி: 19.08.2016**

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
பணிப்பாளர், சிவன் அருள் இல்லம்
திருக்கேதீச்சரம், மன்னார்.
071 619 3459, 071 254 6815


# தாதியர் போராட்டத்துக்கு தடையை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 11

யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் சங்கம் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை நீடிக்கப்பட்டது.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

வைத்தியசாலையில் தாதியர் ஒருவருக்கும் மருத்துவர் ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட தனிப்பட்ட முரண்பாட்டால் தாதியர் சங்கமும், மருத்துவ சங்கமும் ஏட்டிக்குப் போட்டியாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன.

தாதியர் சங்கம் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டபோது, மருத்துவர் ஒருவரால் மேல் நீதிமன்றில் இடைக்காலத்தடை கோரப்பட்டது. அதன்படி விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையே தற்போது நீடிக்கப்பட்டது.

குறித்த தாதியர் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிய குறிப்புக்களையும் அடுத்த வழக்குத் தவணைக்கு முன்னர் பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

தடை உத்தரவு தொடர்பில் நீதிபதிக்கும் தாதியர் சங்கம் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிக்கும் இடையே காரசாரமான விவாதம் நடந்தது.

தனிப்பட்ட விடயங்களுக்காக பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவது சட்டவிரோதமானது என்று தெரிவித்த நீதிபதி வழக்கை எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

வைத்தியசாலைப் பணிப்பாளர், தாதிய பரிபாலகர் உள்ளிட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். (ற-4)


## University of Jaffna
## Sri Lanka
### Faculty of Agriculture
### Commencement of Lectures

The academic programme for all the academic years will be commenced on **15.08.2016**, Monday at 8.30 am at the **Faculty of Agriculture, Ariviyal Nagar, Kilinochchi.**

10.08.2016 (c.24590) (13.18.17) **Registrar.**

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
## பசுப்பால் உற்பத்திப் பொருள் விற்பனை

| | |
|---|---|
| * பால் | * யோக்கட் |
| * சுடுபால் | * ஐஸ்கிறீம் |
| * சுவைப்பால் | * மில்க்லொலி |
| * பதனிடப்பட்ட பால் | * மில்க்ரொபி |
| * சர்பத் | * பனீர் |
| * தயிர் | * நெய் |
| * கப்தயிர் | * மோர் |

யாழ்கோ விற்பனை நிலையங்களில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். முற்கூட்டியே பதிவுசெய்தால் நேரில் விநியோகிக்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**
(சி.24305) (13.18.17)

021 321 2926
077 386 8572
077 990 0074
077 621 9434

## Chundikuli Girls' College, Jaffna

### WANTED

Applications are invited from suitable female candidates to teach the following subjects in the Advanced Level Classes.

01. Economics (English medium)
02. Biology (English medium)
03. History

Applications close on 30.08.2016 Only Short listed Candidates will be Called for an interview.

**Principal**

(ஜே3236)(2.8)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
## ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் : 09
ஆதன இல : 192(புதிய பிரிவு)
வீதி : பிப்பிலி வீதி
கிராமசேவையாளர் பிரிவு: J/134 நவாலி வடக்கு

வட்டாரம் 09. பிப்பிலி வீதி. ஆதன இல 192(புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி. இறை " சூத்தியம்பத்தை வளவு " என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 8.23 கொண்ட) இவ்வாதனம் யாழ்ப்பாணம் நவாலி வடக்கைச் சேர்ந்த நற்குணநாதன் பெண் நாகேஸ்வரி ஆகிய இவர்களால் தங்கள் மகளான செல்வி. சந்திரவதனி இராசரத்தினம் என்பவருக்கு நன்கொடை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. M. தியாகராஜா அவர்கள் முகநாவில் நிறைவேறிய 618 ஆம் இலக்க 2003.07.30 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக(ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு K.கனகசிங்கம் அவர்களால் வரையப்பட்ட 501 ஆம் இலக்க 1985.09.06 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " சூத்தியம்பத்தை வளவு " நிலப்பரப்பு 01 குளி 8.23 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்வி.சந்திரவதனி இராசரத்தினம் என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்.
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.
மானிப்பாய்.


## மகிந்த கால திட்டங்களில் 35 பில். ரூபா நிலுவை

கொழும்பு, ஒக.11

மகிந்த ராஜபக்ச அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கு சுமார் 35 பில்லியன் ரூபா வரை செலுத்தப்படாமல் உள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு 500 திட்டங்களுக்கான நிலுவைகள் செலுத்தப்படாமல் உள்ளன என்று மூன்று பேரைக் கொண்ட அமைச்சரவைக் குழு தெரிவித்தது.

53 அமைச்சுகளால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்காகவே இந்தக் கொடுப்பனவுகள் செலுத்தப்படவேண்டியுள்ளன.

இந்தக் கொடுப்பனவுகளில் சுமார் 3 பில்லியன் ரூபா வரை புதிய அரசு செலுத்தியுள்ளது என்று திறைசேரியின் செயலாளர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)


### வேலைக்கு ஆள் தேவை

ஆண்கள் பெண்களின் ஆடைகள் தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள் உடன் தேவை.

077 868 5402

### தனியார் கட்டடங்களை வாடகைக்கு பெறல்

காணி உரித்து நிர்ணயத் திணைக்கள பிரதேச அலுவலகத்திற்கு வாடகைக்குப் பெறக் கூடிய வீடுகள்/ கட்டடங்கள் யாழ்ப்பாணம், நல்லூர், பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட இடங்களில் தேவை.

தொடர்புகளுக்கு: 021 205 2225/
077 869 3370
(அலுவலக நாள்களில் தொடர்பு கொள்ளவும்)

### பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறித்துதிக்கின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாயிருப்பினும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.- ஆமென்

அடியார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சா சந்தேகநபருக்கு பிணை

தென்மராட்சி, ஓக.11

20கிலோ 900 கிராம் கஞ்சா வைத்திருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கின் இரண்டாவது சந்தேகநபரை பிணையில் செல்ல யாழ். மேல் நீதிமன்று வழங்கிய பணிப்பின் பேரில் நேற்றுமுன்தினம் வழக்கின் இரண்டாவது சந்தேக நபரைப் பிணையில் செல்ல அனுமதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

கொடிகாமம், மிருசுவில் பகுதியில் கடந்த 2015 ஒக்ரோபர் 21 ஆம் திகதி 20 கிலோ 900 கிராம் கஞ்சா வைத்திருந்த போது கொழும்பு போதைப் பொருள் தடுப்புப் பணியக பிரிவினரால் இருவர் பிடிக்கப்பட்டு, சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கின் இரண்டாம் சந்தேக நபரை 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல அனுமதித்து, மாதத்தின் இறுதி வியாழக் கிழமையில் சாவகச்சேரி நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும், நீதிமன்றின் அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது என்ற நிபந்தனைகளுடன் யாழ். மேல் நீதிமன்றால் பணிப்புரை விடுக்கப்பட்டது. (ந-9)

## பெருந்திருவிழா

தென்மராட்சி, ஓக.11

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 17ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ந-9)

## போதையில் சாரத்தியம் 25 ஆயிரம் ரூபா அபராதம்

ஆவணங்களின்றி மது போதையில் வாகனம் செலுத்திய வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று முன்தினம் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் சாரதிக்கு அபராதம் விதித்தார்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்களைச் செலுத்தினர் என பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து வழக்குகளில் இரு சாரதிகளுக்கு தலா 10 ஆயிரத்து 500 ரூபா வீதமும், இரு சாரதிகளுக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதமும் ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ந-9)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சிவபாக்கியநாதன் சுதாகரன்**

(கரன்/ பாண்டியன்)

எங்கள் குல விளக்கே!
நீங்கள் எம்முடன் வாழ்ந்த மகிழ்ச்சி நிறைந்த
அந்தக் காலங்கள் என்றுமே எமது மனதைவிட்டு
நீங்கமுடியாதவை எதிர்பாராத நிகழ்வினால்
எம்மை துயரக்கடலில் மூழ்க வைத்துச் சென்றீர்களே!
ஆண்டு ஒன்று என்ன
எத்தனை சென்றாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எங்களுடன் இருக்கும்

பிறப்பு 02.05.1979
இறப்பு 24.07.2015

குடும்பத்தினர்.
இல. 643/6, இராமநாதபுரம்,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**சின்னையா மகேஸ்வரி**

கடந்த 12.07.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (11.08.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர் -சி.துரைராசா (மகன்)
28/16, மணல்தரை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.



மண்ணில் மலர்ந்தது 02.06.1937
விண்ணில் கலந்தது 12.07.2016

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**நீற்றம்மா தர்மசகாயம்பிள்ளை**


தோற்றம் 31.07.1945
மறைவு 11.08.2015

கள்ளமில்லா உள்ளமும் கபடமில்லா மனமும்
வேசமில்லா புன்னகையும் கொண்ட தாயே!
அள்ள அள்ளக் குறையாத உங்கள் அன்பை இழந்து
சொல்லொண்ணாத் துயர் கொண்டு
ஆண்டொன்று ஆனதுவே!
ஆறாது உங்கள் பிரிவு என்றும் மாறாது உங்கள் பாசம் - எம்
கண்கள் உள்ளவரை கண்ணீராய் சொரியும் உங்கள் நினைவு
உங்கள் ஆத்மா இறைவனில் அமைதிபெற
பிரார்த்திக்கின்றோம் அன்னையே!

3ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 16.11.1932
மறைவு 12.07.2016

கடந்த 12.07.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

**அமரர் திருமதி இராசேஸ்வரி இரத்தினம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.08.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கற்பகப் பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்

குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி
**தமிழினி உமாசந்திரன்**

மலர்வு 26.10.1977
உதிர்வு 13.07.2016



கடந்த 13.07.2016 புதன்கிழமை இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.08.2016) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் அதிகாலை 4.00 மணியளவில் நடைபெற்று ஊறணி சமுத்திரத்தில் அஸ்தி கரைக்கப்படும். மதியம் சபிண்டீகரணக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பலவழிகளிலும் உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு:**

எமது செல்வம் நோயுற்ற காலங்களில் உதவி செய்த வைத்தியர்கள், தாதிய, தாதி உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட
அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

உ. ஜனனன் - மகன்,
ஆனந்தியப்பா - தந்தை.
077 617 1506


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்கா உடன்படிக்கை குறித்த இரு தரப்புப் பேச்சு ஆரம்பம்

கொழும்பு, ஓக. 11
எட்கா எனப்படும் பொருளாதார மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பான பேச்சை இந்தியாவும் இலங்கையும் ஆரம்பித்துள்ளன.
இந்திய வர்த்தக அமைச்சின் இணைச் செயலாளர் பூமிந்தர் சிங் பல்லா தலைமையிலான நான்கு பேர் கொண்ட இந்திய பிரதிநிதிகள் கடந்த திங்கட்கிழமை பேச்சில் பங்கேற்றனர். இரு தரப்பு பேச்சு இரண்டு நாள்களுக்கு நடைபெறும் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் இணையத்தளம் தெரிவித்தது.
பரந்த வரையறைகளைக் கொண்ட எட்கா உடன்படிக்கையில் எவ்வாறான விடயங்கள் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் எவ்வாறான விடயங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது குறித்து கலந்துரையாடப்படுகின்றது என்று இந்திய பிரதிநிதியொருவர் கூறினார்.
பொருளாதார மாற்றங்களால் ஏற்படும் கவலை அளிக்கும் விடயங்கள் மற்றும் தேவைகள் குறித்தும் இருநாட்டு பிரதிநிதிகளும் கலந்துரையாடவுள்ளனர்.
2000ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ள இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இருந்து பெறப்பட்ட அனுபவங்களையும் இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளும் பகிர்ந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**பேரின்பராசா சிறிரஞ்சன்**
(ரஞ்சா)



பிறப்பு
21.05.1980

இறப்பு
28.06.2016

**காலங்கள் எவ்வளவு வேகமாக நகர்கிறது கண்ணயர்ந்த வேளையில் நாற்பத்து ஐந்து நாள் கடந்தும் - முள்ளாக எம் மனதில் உன் நினைவுகள் இன்னும் பல வருடங்கள் கடந்தாலும் அழியாது**

உன் நினைவுகளுடன்...!

முத்துமாரி அம்மன் கோயில் வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
19 . 05 . 1922

மறைவு
12 . 07 . 2016

அமரர் **சின்னப்பா செல்லத்துரை**

கணபதியப்புலம், கோப்பாய் மத்தியைச் சேர்ந்த அமரர் சின்னப்பா செல்லத்துரை அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.08.2016) வியாழக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தங்களது குடும்பத்தினர் சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் அமரத்துவம் அடைந்த வேளை உடன்வந்து சகல வழிகளிலும் எமக்கு உறுதுணை புரிந்தோருக்கும், அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும் மற்றும் தேவைப்பட்ட உதவிகள் அனைத்தையும் வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கணபதியப்புலம், கோப்பாய் மத்தி,
கோப்பாய்.


குடும்பத்தினர்.

# பொன்னாலையில் ஆண்டிறுதியில் ஒரு லட்சம் பனைகள் நடுகை

யாழ்ப்பாணம், ஓக. 10
இந்த ஆண்டு இறுதியில் பொன்னாலை வெளியில் ஒரு லட்சம் பனை விதைகள் நடப்படவுள்ளன என்று வேள்ட்விசன் லங்கா தன்னார்வத் தொண்டு நிறுவன சங்கானைப் பிரதேச திட்டமுகாமையாளர் ஜி.ஜே.அனுராஜ் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வலி.மேற்கில் பொன்னாலை வெளியில் ஒரு லட்சம் பனை விதைகளை நடுகை செய்வதற்கான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இத்திட்டம் பொன்னாலை வெளியை பசுமைத் திட்டத்தின் கீழ் கொண்டுவரும் ஓர் ஆரம்ப கட்டமுயற்சியாகும்.
இந்தத் திட்டத்தை முன்னெடுக்க வலி. மேற்கு பிரதேச செயலாளர் முன்வந்து உதவியளிக்கத் தயாராக உள்ளார். வேள்ட் விசன் நிறுவனம் ஒரு லட்சம் பனை விதைகளைத் தயார் செய்து வருகின்றது.
உரிய காலத்தில் மேற்படி திட்டம் அந்தப் பிரதேசபொதுமக்கள், பொதுஅமைப்புக்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுடன் இணைந்த வகையில் முன்னெடுக்கப்படும். நடுகையின் பின்னரான நீடித்த அபிவிருத்தி ஒருங்கிணைந்த பங்களிப்புத் தேவை – என்றார். (ற-50)

## 22ஆம் ஆண்டு நினைவுப்பூக்கள்

அச்சுவேலியூர்
அமரர்
**ஆறுமுகம் லோகேஸ்வரன்**
(இளைப்பாறிய ஆசிரியர்- அச்சுவேலி மத்திய கல்லூரி)
திதி: 11.08.2016



அவசியப்பிறப்பு
12.03.1932


அவசர அழைப்பு
14.08.1994

ஆண்டுகள் இருபத்திரண்டு
அகன்றேதான் போனதப்பா
ஆற வழியின்றி அழுகின்றோம் கேளுமப்பா
ஆசையாய் நீங்கள் வளர்த்த
உறவுகள் நாங்களப்பா
ஆறாமல் துடிக்கின்றோம்
எம்மிடமே வாங்களப்பா

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தேடும் நெஞ்சங்கள்
மனைவி, மகள், மகன், மருமகன்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவுகளுடன்



மலர்வு
1949.06.19

உதிர்வு
2016.07.12

**அருளம்பலம் சிவலிங்கம்**
(ஓய்வு பெற்ற அலுவலக உத்தியோகத்தர் - கிளிநொச்சி மகாவித்தியாலயம், பரந்தன் மகாவித்தியாலயம்)

வையத்துள் வாழ்வாங்கு
வாழவைத்த தெய்வமே !
எம் இல்லத்தின் ஒளி விளக்காய்
குடும்பத்தின் கோபுரமாய்
வாழ்ந்த நாள்களை
எண்ணி ஏங்குகின்றோம்

இல.75,
உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பெரியதாயாராகிய
**நடராசா அன்னம்மா**
(வாரிவளவு, காரைநகர்)

அவர்கள் 07.08.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

383, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

E.S.P. நாகரத்தினம்
குடும்பத்தினர்.

# ஐ.தே.கவுக்குள்ளும் பிரச்சினைகள் இருக்கின்றன

சுஜீவ சேனசிங்க
ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு சில பிரச்சினைகள் இருக்கின்றன. சில தவறுகளும் நடக்கின்றன. அதனை ஏற்றுக் கொள்கின்றேன்.
இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோது இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
ஜனாதிபதியுடன் அண்மையில் நடந்த பேச்சுவார்த்தையின்போது என்னுடன் இரண்டு பக்கங்களில் அமர்ந்த இரண்டு அமைச்சர்களும் கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தவர்கள். கொழும்பு மாவட்டத்தில் இரண்டாவது அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற எனக்கு இராஜாங்க அமைச்சர் பதவியே கிடைத்தது.
பொது நோக்கத்துக்காக நாட்டில் நடந்த கொள்ளை, குடும்ப ஆட்சியை அழிப்பதற்குச் சிறிய பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளாது தொடர்ந்தும் செயற்படுவேன் – என்றார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா நகரசபை சுகாதார சிற்றூழியர்கள் பணிப் புறக்கணிப்பு

## தமது பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டும் என வலியுறுத்தி

வவுனியா, ஓக 11
வவுனியா நகர சபை சுகாதார சிற்றூழியர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
கடந்த மூன்று வருடங்களாக எமது பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை. எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் வழங்க வேண்டும் - என்று அவர்கள் வலியுறுத்தினர்.
நகர சபை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் சீரமைக்கப்பட வேண்டும், பணி நீக்கப்பட்ட நான்கு ஊழியர்களை மீண்டும் இணைத்துக் கொள்ள வேண்டும், உள்ளக வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும், மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும், காணாமற்போன பணியாளர்களின் கோவைகள் கண்டு பிடிக்கப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர்.
வவுனியா பிரதான பொலிஸ் நிலைய அத்தியட்சகர் டபிள்யூ. ஏ. சோமரட்ன விஜயமுனி நகர சபை ஊழியர்களின் பிரச்சினையைக் கேட்டறிந்தார். சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா நகரசபைச் செயலாளர் த. தர்மேந்திராவிடமும் அவர் ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.
உயர் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு ஊழியர்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்ட அவர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட நகரசபை ஊழியர்களிடம் பணிப்புறக்கணிப்பைக் கைவிடுமாறு கோரினார். ஊழியர்கள் தமது பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது பணிக்கு செல்லமுடியாது என்று தெரிவித்தனர்.
"கடந்த மூன்று வருடமாக நாம் போராடி வருகின்றோம், எந்தவொரு அதிகாரியும் எமது பிரச்சினையில் தலையிட்டு தீர்வைப் பெற்றுக்கொடுக்கவில்லை. தற்போதைய நகரசபைச் செயலாளர் பதவிக்கு வந்த பின்னரே ஏழு பணியாளர்களின் கோவைகள் காணாமல் போயின. அது குறித்து எந்தவொரு நடவடிக்கையும் நகரசபைச் செயலாளரால் மேற்கொள்ளப்படவில்லை. எமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் வரையில் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம்" - என்று அவர்கள் தெரிவித்தனர்.
"நகரசபை ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு மக்களின் சுமைகளை அதிகரிக்கும் செயற்பாடாகவே கருதவேண்டியுள்ளது. தொழிலாளர்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ள முடியும். அனைத்துக்கும் பணிப் புறக்கணிப்பை மேற்கொள்வது எவ்விதத்திலும் நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கப்போவதில்லை. பணி நீக்கத்துக்கான காரணம் தெளிவாக பணி நீக்கப்பட்ட ஊழியர்களிடம் தெரிவிக்கப்பட்டு விட்டது. நியாயமற்ற முறையில் பணிநீக்கம் செய்யப்படவில்லை. தொடர்ச்சியாக அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவித்தலின் அடிப்படையிலே பணி நீக்கம் செய்யப்பட்ட னர். அது தவறு என்றால் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்களை திரும்பவும் பணியில் இணைத்துக் கொள்ள முடியாது என்பதைத் தெளிவாகத் தெரிவித்துவிட்டோம்.
பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அனைவரும் பணிக்கு வந்து கையொப்பம் இட்ட பின்னரே பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர். அதற்கு எதிராக நான் நடவடிக்கை எடுத்தால் உடனே என்னைப் பொல்லாதவன் என்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர். பணிப் புறக்கணிப்பைக் கைவிட்டு பணிக்குத் திரும்புமாறு தெரிவித்துள்ளேன்" - என்று நகரசபைச் செயலாளர் தர்மேந்திரா தெரிவித்தார்.
(ρ-21)

> தொழிலாளர்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ள முடியும். அனைத்துக்கும் பணிப் புறக்கணிப்பை மேற்கொள்வது எவ்விதத்திலும் நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கப்போவதில்லை. என நகர சபைச் செயலாளர் தெரிவித்தார்

### 1,185 கி.மீ. வீதிகள் விரைவில் சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11
வடமாகாணத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ஏடிபி) நிதிமூலம் ஆயிரத்து 185 கிலோ மீற்றர் வீதிகள் ஐ-ரோட் திட்டத்தின் காபெற் வீதிகளாகச் சீரமைக்கப்படவுள்ளன.
கிளிநொச்சி மாவட்டத்தில் 228 கிலோ மீற்றரும், மன்னார் மாவட்டத்தில் 176 கிலோ மீற்றரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 177 கீலோ மீற்றரும், வவுனியா மாவட்டத்தில் 246 கிலோ மீற்றரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 358 கிலோ மீற்றருமாக மொத்தம் 1185 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன.
இதற்கான ஒப்பந்தங்கள் ஏற்கனவேசெய்யப்பட்டுள்ளன என்று வடக்கு உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்தது. (ρ-50)

## ஓமந்தையில் பொருளாதார வலயம்; போராட்டத்தில் இறங்கினார் தனிநபர்

யாழ்ப்பாணம், ஓக. 11
ஓமந்தையிலேயே பொருளாதார வலயம் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பொதுமகன் ஒருவர் நேற்றுக் காலை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்.
தா.மகேஸ்வரன் என்ற பொது மகனே நேற்றுக் காலை 7 மணிக்கு, வவுனியா தமிழ் பிரதேச சபை உப அலுவலகத்திற்கு முன்பாகப் போராட்டத்தை ஆரம்பித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அரசு சகல விடயங்களிலும் கால இழுத்தடிப்புச் செய்கின்றது. பொருளாதார வலயம் எங்கே அமைக்க வேண்டும் என்பது தொடர்பில் 2010 ஆம் ஆண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்த வேண்டும். பொருளாதார வலயம் ஓமந்தையில் அமைவது தான் பொருத்தமானது.



அரசியல் காரணங்களுக்காக அவரவர் வசதிக்கு ஏற்ப இதனை மாற்றுவதை அனுமதிக் முடியாது. எதிர்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக முதலமைச்சர் கருத்துக் கணிப்பை நடத்தியிருந்தார். இந்தக் கருத்துக்கு கணிப்பில் பெரும்பாலானவர்கள் ஓமந்தையில் அமைய வேண்டும் என்றே விரும்பினார்கள். எந்த வகையிலும் தட்டிக் கழிக்க முடியாத தெரிவாக ஓமந்தை உள்ளது.
இனியும் காலம் தாழ்த்தாமல் ஜனாதிபதியும், பிரதமரும் உடனடியாக முடிவு எடுத்து தமிழ் மக்களுக்கு அனுகூலம் கிடைக்கக் கூடிய ஓமந்தையில் பொருளாதார வலயத்தை அமைக்க வேண்டும் - என்றார். (ρ-5-402)

# வெற்றிச் சமர்களைப் படைப்புக்களால் உலகுக்குக் காட்டியோர் கலைஞர்கள்

## சிவமோகன் எம்.பி. பாராட்டு

முல்லைத்தீவு, ஓக. 11
தமிழ் மக்களுக்கு 1948ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசால் திட்டமிட்டு இழைக்கப்பட்ட அநீதிகளையும் அதை எதிர்த்து போராடிய வீரர்களின் தியாகங்களையும் விடுதலைப் புலிகளின் வெற்றிச் சமர்களையும் தமது உன்னத படைப்புக்களால் உலகுக்கு எடுத்துக் காட்டியவர்கள் கலைஞர்கள்.
இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்தார்.
வன்னி குறோஸ் கலாசார பேரவையின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு சிலாவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை கலைஞர்கள் கௌரவிப்பு நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இறுதிப் போரின்போது விடுதலைப்புலிகள் தோற்றுவிட்டனர் என்று கருத முடியாது. விடுதலை போர் வீரர்களுக்கு இறப்பு மட்டும்தான் ஏற்பட்டது. ஒருபோதும் தோல்விகள் ஏற்படாது. விடுதலைப் புலிகளை இறுதிப் போரின்போது இந்த மண்ணில் விதைத்துள்ளார்களே தவிர அழித்து விடவில்லை.
தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். அதன்பின்னர் கைவிடப்பட்டனர். வன்னி குரோஸ் கலாசாரப் பேரவை மீண்டும் அவர்களை ஒன்று சேர்த்துள்ளது. அதன் வெளிப்பாடாகத்தான் கலைஞர்கள் இன்று கௌரவிக்கப்படுகின்றார்கள்-என்றார். (ρ-ரி7)

### பெருந்திருவிழா

சாவகச்சேரி, ஓக. 11
சாவகச்சேரி டச்சு வீதி செருக்கல்பதி சித்திவிநாயகர் ஆலய பெருந் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.
(ρ-9)

### நீதிமன்றுக்குள் அலைபேசியை ஒலிக்க விட்டவருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஓக.11
வழக்கைப் பார்வையிட வந்தவரின் அலைபேசி வழக்கு நடை பெற்றுக் கொண்டிருந்த வேளையில் திடீரென ஒலித்ததால் அவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம் பெற்றது.
சாவகச்சேரி நீதிமன்றில் உறவினரின் வழக்கைப் பார்வையிட வந்தவரின் அலைபேசி நீதிமன்றில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரென ஒலித்தது. நீதிவானின் பணிப்பின் பேரில் நீதிமன்றப் பொலிஸாரால் அதனை வைத்திருந்தவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கையைக் குழப்பும் வகையில் நீதிமன்ற விதிமுறைகளை மீறி, தொலைபேசியை ஒலிக்க விட்டார் என வழக்குத் தொடரப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எச்சரிக்கை செய்த நீதிவான் அபராதம் விதித்தார்.
சாவகச்சேரி நீதிமன்ற பிரதான வாசலில் உள்ள பாதுகாப்பு நிலையத்தில் தொலைபேசிகள் உள்ளே கொண்டு செல்லத் தடை என அறிவித்தல் போடப்பட்டுள்ளது. பிரதான வாசலை கடப்போர் வைத்துள்ள தொலைபேசிகளை வாங்கி வைத்துவிட்டு அதற்கான இலக்கங்களை வழங்குகின்றனர். (ρ-9)

### கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக.11
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச சைவப் பிரசாரகர்களுக்கான மூன்று மாத கால சான்றிதழ் பயிற்சி கற்கை நெறி மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.செந்தூரன் தெரிவித்தார்.
கற்கை நெறியைத் தொடர விரும்புவோர் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள குருகுலம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆரம்ப தின வைபவம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
(ρ-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காங்கேசன்துறை மாவட்ட சாரணர்களுக்கும், குருளைச் சாரணர்களுக்கும் மூன்று நாள் வதிவிட கலைக்கூறு பயிற்சி நெறிகள் அண்மையில் தெல்லிப்பழையில் நடத்தப்பட்டது. அதில் சாரணத் தலைவர்கள், மாவட்ட ஆணையாளர் எனப் பலர் கலந்து கொண்டனர்.(ற-9)

## வரலக்ஷ்மி விரத சிறப்பு பூசை

யாழ்ப்பாணம், ஓக. 11
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர், கண்ணகியம்மன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு வரலக்ஷ்மி விரத சிறப்பு பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நூல் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். (ற-5)

## இரணைமடுக்குளம் திருத்தத்துக்கு மண் பெறுவதில் கடும் நெருக்கடி

யாழ்ப்பாணம், ஓக. 11
இரணைமடுக் குளத்தின் வாய்க்கால் மற்றும் குளக்கட்டு சீரமைப்புப் பணிகளுக்கு மண் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி காணப்படுகின்றது என்று கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்பில் மேற்கொள்ளப்படும் இரணைமடுக் குளப் புனரமைப்பு மற்றும் நீர் விநியோக வாய்க்கால் திருத்தப் பணிகள் தற்போது மிக வேகமாகமுன்னெடுக்கப்படுகின்றன. அவற்றின் கட்டுமானத்துக்காக ஆற்று மணலும் குளம் புனரமைப்புக்காக காட்டு மண்ணும் பெறப்படுகின்றது. அவற்றைப் பெறுவதிலேயே தற்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டுகிறது.
குளப் புனரமைப்புக்காக குளத்தை அண்மித்த பகுதியில் உள்ள காட்டுப் பிரதேசத்தில் மண் அகழ்வதை நிறுத்துமாறு வனவளப் பகுதியினர் நெருக்குதல் கொடுக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. அதனால் மண் பெறுவது மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.
மண்பெற்றுக் கொள்வதற்கு உரிய அனுமதிகளைப் பெற்றிருந்தால், இவ்வாறான தடங்கல்கள் ஏற்படாது என்று வனவளத் திணைக்களத் தரப்பினர் தெரிவித்தனர்.
"ஆற்று மணல் பெறுவதில்கூட சிரமங்கள் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயங்கள் என்து கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் திணைக்களங்களால் மக்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றது. அதில் எந்தத் தடைகள் ஏற்பட்டாலும் அவை விவசாயிகளைத்தான் பாதிக்கும். இதனைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்"- என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். (ற-5-101)

> ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்பில் மேற் கொள்ளப்படும் இரணைமடுக் குளம் புனரமைப்பு மற்றும் நீர் விநியோக வாய்க்கால் திருத்தப் பணிகள் தற்போது மிக வேகமாக முன்னெடுக்கப் படுகின்றன. அவற்றின் கட்டுமானத்துக்காக ஆற்று மணலும் குளம் புனரமைப்புக் காக காட்டு மண்ணும் பெறப்படுகின்றது.

## இதழியல் அடிப்படைகள் நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 11
மூத்த இதழியலாளர் ஆர். திருச்செல்வம் எழுதிய இதழியல் அடிப்படைகள் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
வைத்தியர் வை.யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், தலைமை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் கலந்து கொள்வார்.
வரவேற்புரையைப் பேராசிரியர் இரா.சிவசந்திரன் நிகழ்த்துவார். நூலின் முதற் பிரதியை, மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன் பெற்றுக் கொள்வார். நூலின் மதிப்பீட்டு உரையை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய இயக்குநர் தே.தேவானந்த் நிகழ்த்துவார். (ற-5)

## மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படும் திகதிகள் அறிவிப்பு

தென்மராட்சி, ஓக. 11
தென்மராட்சி பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் காசநோய் புற்றுநோய் ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகள், முதியோர்களுக்கான கொடுப்பனவு போன்றவை வழங்கப்படும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் கொடுப்பனவுகள் வழங்கப்படும், தினங்கள் தொடர்பான அறிவித்தல்கள் வழங்கப்பட்டு அஞ்சல் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
ஒவ்வொரு மாதமும் பிரதி 4ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை பொதுசன மாதாந்த உதவிப் பணம் காசநோய், புற்று நோய், தொழு நோய் ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளும், பிரதி 15 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம்திகதி வரை 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படுகிறது எனவும் அஞ்சல் அலுவலகத்தினர் தெரிவித்தனர். (ற-9)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு பிணை வழங்க மன்று மறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11
141 கிலோகிராம் கஞ்சா வைத்திருந்தவருக்கு பிணை கோரி யாழ். மேல்நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மன்றால் நிராகரிக்கப்பட்டு, விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.
இளவாலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அதைப் பரிசீலித்த நீதிபதி பரீட்சைகள் நடைபெறும் காலம், திருவிழாக் காலம் போன்ற பல காரணங்களாலும், 'கஞ்சா கடத்தல் சமூகவிரோதக் குற்றம் என்பதாலும், பிணை மறுக்கப்படுகின்றது என்று தெரிவித்து மறியலை நீடித்தார். (ற-4)

## இறுதிப் போரில் கொத்துக்குண்டுகள் வீசப்பட்டதை கண் எதிரே கண்டோம்

### மக்கள் கருத்தறியும் செயலணியிடம் மக்கள் தெரிவிப்பு
### சர்வதேச விசாரணை தேவை எனவும் வலியுறுத்து

வவுனியா, ஓக.11
இறுதிப் போரில் கொத்துக் குண்டுகள் வீசப்பட்டன. அவற்றை நாம் கண்களால் கண்டோம். போரில் இடம் பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பில் சர்வதேச விசாரணை நடைபெறவேண்டும். தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா கொண்டு வந்த நீதிப் பொறிமுறை தொடர்பில் எமது நாட்டிலும் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு மக்கள் கருத்தறியும் நல்லிணக்க செயலணியிடம் வவுனியா வடக்கு மக்கள் தெரிவித்தனர்.
போர்குற்ற விசாரணைகளை எவ்வாறு முன்னெடுப்பது மற்றும் காணாமற்போனோர் தொடர்பான அலுவலகங்களை அமைப்பது தொடர்பாக மக்களிடம் கருத்துக்களைக்கேட்டறியும்நல்லிணக்க செயலணியின் வவுனியா வலயத்தின் அமர்வு நேற்று முன்தினம் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அதில் மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.
அவர்கள் தெரிவித்ததாவது:
அரசு மனிதாபிமான போர் எனக் கூறி, மனிதாபிமானம் அற்ற போர் ஒன்றை நடத்தியது. அதில் மோசமான முறையில் அரச படைகள் நடந்து கொண்டன.அரசுடன்இணைந்து பல நாடுகள் விடுதலைப் புலிகளை அழிக்கின்றோம் என்று கூறி இந்த போருக்கு உதவின. போரில் கொத்துக் குண்டுகள் வீசப்பட்டன. அவற்றை நாம் கண்களால் கண்டோம்.
1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னிருந்து இந்த நாட்டில் பௌத்த தேசிய வாதம் வளர்ந்தது. மகாவம்சம் ஓர் இதிகாசம். அது வரலாற்று நூல் இல்லை. அதை அடிப்படையாகக் கொண்டு இங்கு ஆட்சி மேற்கொள்ளப்படுகிறது. பௌத்த தேசியவாதத்தை இரும்பு கோட்டை போன்று அவர்கள் கருத்துகிறார்கள். அதனால் தான் பௌத்த பிக்குகள் கூட அத்துமீறிச் செயற்படுகிறார்கள். அந்த நிலை மாற வேண்டும். அனைத்து மதங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு மதச் சார்பற்ற அரசு நிறுவப்படவேண்டும்.
வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம். இது திம்பு கோட்பாட்டில்கூட ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதை உறுதிப்படுத்த வேண்டும். இறந்தவர்கள் தொடர்பில் நினைவு கூர அனுமதி வேண்டும். மாவீரர் துயிலும் இல்லங்கள் காணப்பட்ட இடங்களில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு, மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைக்கப்பட்டு இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த அனுமதி வழங்கவேண்டும். இதன் மூலம்தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். - என்றனர். (ற-21)

> வடக்கு – கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம். இது திம்பு கோட்பாட்டில் கூட ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதை உறுதிப் படுத்த வேண்டும். இறந்தவர்கள் தொடர்பில் நினைவு கூர அனுமதி வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் கேரளக் கஞ்சா மீட்பு



ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாப் பொதி மன்னார் காட்டாஸ்பத்திரிக் கிராமத்திலுள்ள வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டது. அவற்றைப் பதுக்கி வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் ஒருவர் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அங்கு விரைந்த பொலிஸார் வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கஞ்சாவைக் கைப்பற்றினர். அங்கிருந்த ஒருவரையும் கைது செய்தனர். மீட்கப்பட்ட கஞ்சாப் பொதி மன்னார் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-5-56)

## கஞ்சா வைத்திருந்த மூவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 11

அச்செழுவில் கஞ்சாவை தமது உடைமையில் வைத்திருந்த மூவரைச் சந்தேகத்தில் அச்சுவேலிப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட அச்செழுப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய மூவரைப் பொலிஸார் சோதனை செய்தனர். மூவரிடமும் கஞ்சாப் பொட்டலங்கள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களிடம் 7 கிராம், 30 கிராம், 10 கிராம் ஆகிய கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-5-101)

## கனகாம்பிகை ஆலயக் காணியில் விகாரை; தடுக்கும் வழிவகைகளை ஆராய அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

கிளிநொச்சி கனகாம்பிகை ஆலயச் சுற்றாடலில் விகாரை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதைக் கண்டித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கையை ஆராய்வதற்காக நாளைமறுதினம் சனிக்கிழமை கலந்துரையாடுவதற்கு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செ.கஜேந்திரன் இது தொடர்பில் விடுத் துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கை அரசு இராணுவ மற்றும் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற் கொள்ளும் அத்துமீறிய பௌத்த மயமாக்கல் நடவடிக்கையைக் கண்டிக்கின்றோம். கட்டமைப்புசார் இன அழிப்பை மேற்கொள்வதன் மூலம் தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாது அழிக்கும் செயற்பாடுகளை அரசு கடந்த ஏழு தசாப்தங்களாகத் தீவின் வடக்கு-கிழக்கில் எல்லைக் கிராமங்களில் தீவிரமாக மேற் கொண்டு வந்துள்ளது.

> ஒட்டுமொத்த கிளிநொச்சி மாவட்டத்தையும் சிங்கள மயமாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் விகாரை அமைக்கும் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்த அனைவரும் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக ஓரணியில் திரள வேண்டிய தருணம் இதுவாகும்.

தமிழர் தாயகத்தின் வடக்குப் பிரதேசத்தின் இதயப் பகுதியாகவும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியாகவும் உள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுப் பிரதேசத்தில் தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை அழித்து பௌத்த மேலாதிக்கத்தை ஏற்படுத்தி படிப்படியாகச் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் இராணுவக் குடியேற்றங்களை ஏற்படுத்தி தமிழர்களது சனத் தொகைப் பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கில் மேற்படி விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது.

மக்களின் உணர்வுகளை கணக்கி லெடுக்காது, தமது மேலாதிக்க மனோ பாவத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளின் தொடர்ச்சிதான் இந்த ஆக்கிரமிப்பு. ஆட்சிகள் மாறியபோதும் சிங்களதேசத்தின் அணுமுறை மாறுவதில்லை என்பதை இது மீண்டும் எடுத்துரைக்கிறது. இராணுவத்தினரைப் பயன் படுத்தி தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் கட்ட மைப்புசார் இனவழிப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமான மேற்படி விகாரை அமைக்கும் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெரும் பான்மையான மக்களின் வாழ்வாதாரத்தின் உயிர் நாடியாக அமைந்துள்ள இரணைமடுக் குளத்தைச் சிங்கள ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வருவதன் மூலம் ஒட்டுமொத்த கிளிநொச்சி மாவட்டத் தையும் சிங்கள மயமாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் விகாரை அமைக்கும் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்த அனைவரும் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக ஓரணியில் திரள வேண்டிய தருணம் இதுவாகும்.

விகாரை அமைப்பதற்கு எதிரான பொதுமக்களது நடவடிக்கை தொடர்பான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடை பெறவுள்ளது- என்றுள்ளது. (ற-5)

## ஆலோசனைக் குழு உறுப்பினராக நியமிக்காமைக்கு வருந்தவில்லை

### சி.வி.கே.சிவஞானம் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஓக. 11

உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆலோசனைக் குழு உறுப்பினராக என்னை நியமிக்காமை தொடர்பில் நான் கவலையடையவில்லை. அந்தக் குழு சட்ட வலுவற்றது. அதனால்தான் என்னவோ முதலமைச்சர் என்னை அதற்கு நியமிக்காமல் விட்டிருக்கலாம். அதற்கு முதலமைச்சருக்கு நன்றிகள் பல. இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி சமர்ப்பித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாகாணசபை உறுப்பினர்களை பொறுப்பாக நியமிப்பது தொடர்பான பிரேரணை மீது விவாதம் இடம்பெற்றது. இறுதியாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவைத் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நானும் ஒரு மாகாண சபை உறுப்பினர். என்னை ஆலோசனைக் குழு உறுப்பினராக எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்துக்கும் நியமிக்கவில்லை. இந்தக் குழுவுக்கு மாத்திரமல்ல வேறு குழுக்களுக்கும் நியமிக்கவில்லை. இதனூடாக எனது அரசியலை முடிவுக்குக் கொண்டு வரமுடியாது.

இந்த ஆலோசனைக் குழுக்கள் சட்டவலுவில்லாதவை. அதனால்தான் என்னவோ முதலமைச்சர் இதற்கு எனது பெயரை குறிப்பிடாமல் விட்டிருக்கக் கூடும். அதற்கு முதலமைச் சருக்கு நன்றிகள் பல. இறுதிக் காலம் வரையில் நான் அரசி யலில் இருப்பேன் - என்றார்.

அதற்கு முதலமைச்சர், நாங்கள் உங்களை உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்க விரும்புகின்றோம். உங்களைக் கீழிறக்க விரும்பவில்லை. உங்களைப் புறக்கணிக்கவில்லை - என்றார். (ற-5)

## கிளைக்குழு தேர்தல்கள் ஞாயிறன்று

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையங்களுக்கான கிளைக் குழுத் தேர்தல்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

சங்கத்தின் 44 கிளை நிலையங்களுக்கும் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தல் அந்தந்தக் கிளை நிலையங்களிலும் இடம்பெறும் என்று சங்கத் தலைவர் ந.உமாகரன் தெரிவித்தார்.

இயங்காமல் உள்ள கிளை நிலையங்களுக்கான தேர்தல்கள் யாவும் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம் பெறும். உறுப்பினர்கள் யாவரும் குறித்த நேரத்திற்கு தவறாமல் சென்று வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க வேண்டும்.

கிளைக்குழுத் தெரிவில் சகல உறுப்பினர்களும் கலந்து கொள்ள முடியும். பெரும்பான்மை ஆதரவைப் பெறுபவர்கள் கிளைக்குழு உறுப் பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

இதன் காரணத்தினால் சகல கிளை நிலையங்களினதும் உறுப்பினர்கள் தவறாது கலந்து கொண்டு தேர்தலில் பங்குபற்ற வேண்டும் - என்று அவர் தெரிவித்தார். (ற-17)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா கதிரவேலு



தோற்றம் 17 . 03 . 1930

மறைவு 10 . 08 . 2016

காரைநகர், களபூமி, சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவில் வசித்து வந்தவருமான திருமதி நாகம்மா கதிரவேலு நேற்று (10.08.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு செட்டியார் அவர்களின் அன்பு மனைவியும், கிருபானந்தம் (டென்மார்க்), அருணகிரிநாதன் (அம்பாள் களஞ்சியம் - கொக்குவில்), பரமானந்தம் (தாரணி ஸ்ரோர்ஸ் மாடசாமி கோயிலடி), விக்கினேஸ்வரன் (தோணிக்கல்), நித்தியானந்தம், அருளானந்தம், சரஸ்வதிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், மகேஸ்வரி (டென்மார்க்), யோகேஸ்வரி, இந்திராணி, மலர்விழி, வசந்தேஸ்வரி, ஜெயமாலா, காலஞ்சென்ற வன்னியசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி செல்வநாயகம் மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானேஸ்வரி, அன்னலட்சுமி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.29/6, மாடசாமி கோவில் வீதி,
பண்டாரிக்குளம்,
வவுனியா.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

077 558 8143

(வி.80) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு மாதத்தில் 8 லட்சம் பேர் ஐ.தே.க. உறுப்பினராயினர்

கொழும்பு, ஓக. 11
ஒரு மாத காலத்தில் எட்டு லட்சம் பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்தவர்களாக இணைந்தனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர்பாடல் பிரிவு பொறுப்பாளர் சுதத் சந்திரசேகர தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இலங்கை வாக்காளர்களில் மூன்றில் இரண்டு பங்கினரை கட்சியின் அங்கத்தினர்களாக உள்வாங்கிக் கொள்வதே ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாக உள்ளது. கட்சியின் 70 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வை முன்னிட்டு 30 லட்சம் அங்கத்தினரை இணைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
வரலாற்றில் முதற் தடவையாக இணையத்தின் ஊடாகக் கட்சி அங்கத்துவ முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. பெரும் எண்ணிக்கையிலான அங்கத்தவர்கள் இதனூடாக இணைந்து கொண்டுள்ளனர் - என்றார். (ந-5)

## மிக் விமானக் கொள்வனவின் முக்கிய ஆவணங்கள் மாயம்

கொழும்பு, ஓக. 11
கடந்த ஆட்சிக் காலத்தில் இலங்கை விமானப் படைக்கு மிக் விமானங்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பான முக்கிய ஆவணங்கள் காணாமல் போயுள்ளன.
இவ்வாறு கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் பொலிஸார் அறிவித்தனர்.
கடந்த ஆட்சிக் காலத்தில் மிக் விமானங்களைக் கொள்வனவு செய்யும் போது, மோசடிகள் நடைபெற்றுள்ளன என்று தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பெரிய நிதி மோசடிகள் தொடர்பாக ஆராயும் சிறப்புப் பொலிஸ் குழுவினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.
மிக் விமானங்களைக் கொள்வனவு செய்யும்போது, உக்ரைன் நாட்டு நிறுவனமொன்றுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் முதல் பிரதி உட்பட முக்கிய ஆவணங்கள் காணாமல் போயுள்ளன என்று பொலிஸார் நீதிமன்றத்தில் அறிவித்தனர்.
கருத்துக்களை ஆராய்ந்த நீதிபதி ஆவணங்கள் காணாமற் போனது தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.
சதித் திட்டம் காரணமாக சம்பந்தப்பட்ட ஆவணங்கள் காணாமற் போயிருந்தால், அதற்குப் பொறுப்பாகும் நபர்களை கண்டறிந்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டது. (ந-5)

## இலங்கை - அமெ. இராணுவ உறவு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 11
அமெரிக்கா - இலங்கை இடையிலான இராணுவ உறவுகள் வளர்ச்சியடைந்து வருவது, தேசிய பாதுகாப்புக்கு முக்கிய அச்சுறுத்தலாக அமையும்.
இவ்வாறு லங்கா சமசமாசக் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.
கொழும்பில் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
அமெரிக்கா - இலங்கை இடையே இராணுவ ஒத்துழைப்பு அதிகரித்து வருவதை அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் உறுதிப்படுத்தினார்.
அமெரிக்காவுடனான இராணுவ உறவுகளை இலங்கை தற்போதுள்ளது போல வளர்த்துக் கொண்டால், பிலிப்பைன்ஸ் போன்று, அமெரிக்காவின் பொம்மையாகத் தான் மாற வேண்டியிருக்கும். திருகோணமலைத் துறைமுகத்தைப் பயன்படுத்த அமெரிக்கக் கடற்படையின் 7ஆவது கப்பல் படைப் பிரிவுக்கு அனுமதித்தன் மூலம் அரசு, இலங்கையின் இறையாண்மையை விட்டுக் கொடுத்திருக்கிறது.
முழு இந்தியப்பெருங்கடலையும் பாதுகாக்குமாறு எமது கடற்படையிடம் அமெரிக்கா கேட்டிருக்கிறது.



இலங்கைக் கடற்படை மிகப் பெரிய சாதனைகளை நிகழ்த்தியிருந்தாலும் அதன் வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை.
இந்தியப் பெருங்கடல் பாதுகாப்பில் கவனம் செலுத்தும்போது, இந்தியமீனவர்களின் ஊடுருவல் உள்ளிட்ட இலங்கையின் கடல் எல்லைக்குள் நிலவும் பிரச்சினைகளை அவர்களால் கவனிக்க முடியாது.
இலங்கையின் சிறிய கடற்படையிடம் பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால், அமெரிக்கக் கப்பல்கள்தான் இலங்கையில் நங்கூரமிடும் - என்றார். (ந-5)

## காஷ்மீர் கலவரங்கள் தொடர்பில் பாக். தளபதி மைத்திரிக்கு விளக்கம்

கொழும்பு, ஓக. 11
இந்திய ஆளுகையில் உள்ள காஷ்மீரில் தற்போது நடந்து வரும் கலவரங்கள் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் சொஹைல் அமான் விளக்கமளித்தார்.
விமானப்படைத் தளபதியின் அழைப்பின் பேரில், இரண்டு நாள் அதிகாரபூர்வப் பயணமாக பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி கொழும்பு வந்தார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து அவர் பேச்சு நடத்தினார்.
போரின்போது இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்கியமைக்கும், விமானப்படைக்குப் பயிற்சிகளை வழங்குவதற்காகவும், அனைத்துலக அரங்கில் வழங்கி வரும் ஆதரவுக்காகவும், பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.
இலங்கை - பாகிஸ்தான் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்துப் பேசப்பட்டதுடன், இந்திய ஆளுகையின் கீழ் உள்ள காஷ்மீர் விவகாரம் குறித்தும் பேசப்பட்டது.
காஷ்மீரின் தற்போதைய கலவரங்கள் குறித்து ஜனாதிபதிக்கு, பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி விளக்கமளித்தார் என்று கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்தது. (ந-5)

## மக்களுக்குப் பாதிப்பில்லாது அரச வருமானம் அதிகரிக்கப்படும் -துமிந்த

கொழும்பு, ஓக. 11
மக்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் அரசின் வருமானத்தை அதிகரிப்பது அவசியம். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.
ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் துமிந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
வற்வரி திருத்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவது அரசின் கடமை. மக்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் அதனை மேற்கொள்ள வேண்டும் என்று துமிந்த தெரிவித்தார். (ந-5)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி துரைரத்தினம்



தோற்றம்
10 . 08 . 1946

மறைவு
08 . 08 . 2016

சங்கானை, பழைய தபாற்கந்தோர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி துரைரத்தினம் 08.08.2016 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - அன்னமுத்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இரத்தினம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற துரைரத்தினத்தின் அன்பு மனைவியும் மகேஸ்வரி , பாக்கியவதி ஆகியோரின் சகோதரியும் ஜெயபாலகிருஷ்ணன் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் செல்வமலர், மகாதேவன், தவமலர் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் லோகதாசன், பத்மாவதி, கமலாதேவி, விமலாதேவி, குகதாசன், ஜீவதாசன், சுபத்திராதேவி, சுசீலாதேவி, சசிகலாதேவி, புஸ்பாதேவி, சுரேஸ்குமார் ஆகியோரின் சிறியதாயாரும் கிரிஜா, பொன்ராசா, இராசரத்தினம், சண்முகநாதன், வனஜா, கஜனி, இந்திரகுமார், சுந்தரலிங்கம், அருளானந்தம், சிவானந்தன், ஷர்மிளா ஆகியோரின் மாமியாரும் அபிராமி, தனுஜா, கம்சா, விதுசன், நிரோஜன், பிரகாஷ், நிர்த்தனா, துஷாந்தன், ஆதவி, அபிலன், யாருசன், ஹரணி, டிவாகர், பூஜா, டினேஸ், டிசேந்தன், அபிராமி, ஜெனனி, ஜெனீபன், லக்சிகா, கிரிசான், சோபியா, காவியா, அக்ஷியா, அமிர்தராஜ் ஆகியோரின் பேர்த்தியும் வாகேனின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.08.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை.

குடும்பத்தினர்.

## பரீட்சை முறைகேடுகளை விசாரிக்கச் சிறப்புக் குழு

கொழும்பு, ஓக. 11
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் இடம்பெற்ற முறை கேடுகளை விசாரணை செய்வதற்குச் சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பரீட்சை மோசடிகள் மற்றும் ஒழுங்கீனங்கள் மீண்டும் இடம்பெறுவதற்கு வாய்ப்பு வழங்கப்படாது.
இதனை உறுதிப்படுத்துவதற்குச் சிறப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பிலான பரீட்சைச் சட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.
சில நாள்களுக்கு முன்னர் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பான சம்பவங்களைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது - என்றார். (ந-5)

## கஞ்சா விநியோகித்த தந்தை, மகன் கைது

கொழும்பு, ஓக. 11
ஒரு தொகைக் கேரளக் கஞ்சாவை விநியோகித்துக் கொண்டிருந்த தந்தையும், மகனும் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.
இரத்மலானைப் பிரதேசத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
49 வயதான தந்தையும், 22 வயதான மகனுமே கைது செய்யப்பட்டனர்.
மகன் நிதி நிறுவனம் ஒன்றில் பணம் வசூலிப்பு வேலையில் ஈடுபட்டுக் கொண்டே, கஞ்சா விற்பனையிலும் ஈடுபட்டார் என்று பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்தது. (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகள் இறப்பில்
# பாதுகாப்பு அமைச்சுக்குப் பங்கு இல்லை
### அமைச்சின் செயலாளர் கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 11
முன்னாள் போராளிகள் புற்றுநோயாலோ அல்லது மர்மமான முறையிலோ உயிரிழந்தால் புனர்வாழ்வு அமைச்சும் அதனுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களுமே செயற்பட வேண்டும். பாதுகாப்பு அமைச்சுக்கு எந்தவிதமான பங்கும் கிடையாது.
இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.
புனர்வாழ்வின் போது தடுப்பு ஊசி ஏற்றப்பட்டது என்று முன்னாள் போராளிகள் நல்லிணக்கப் பொறிமுறையின் அமர்வில் கருத்துத் தெரிவித்திருந்தனர். புனர்வாழ்வு பெற்று விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளில் 107 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. புனர்வாழ்வு நடவடிக்கையின்போது ஏற்றப்பட்ட ஊசியின் காரணமாகவே இவர்கள் உயிரிழந்தனர் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.
இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே பாதுகாப்பு அமைச்சின் செயலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளின் தற்போதைய நிலைமை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு எவ்விதமான கண்காணிப்பு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. முன்னாள் போராளிகள் புற்றுநோயாலோ அல்லது மர்மமான முறையிலோ உயிரிழந்தால் அது தொடர்பில் புனர்வாழ்வு அமைச்சும் அதனுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களுமே செயற்பட வேண்டும். இதில் பாதுகாப்பு அமைச்சுக்குப் பங்கு இல்லை – என்றார். (ற-5)

> “முன்னாள் போராளிகள் புற்று நோயாலோ அல்லது மர்மமான முறையிலோ உயிரிழந்தால் அது தொடர்பில் புனர்வாழ்வு அமைச்சும் அதனுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களுமே செயற்படவேண்டும்.”

## இளைஞர் கடத்தப்பட்ட விவகாரம் ஹிருணிகாவுக்கு அழைப்பாணை




கொழும்பு, ஓக. 11
இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்கினர் என்று குற்றம் சுமத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உட்பட எட்டுப் பேருக்கு எதிராகச் சட்டமா அதிபர் திணைக்களத்தால் தொடரப்பட்ட வழக்கு செப்ரெம்பர் 21 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
அன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.
2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி தெமட்டகொடவில் அமில பிரியங்க அமரசிங்க என்பவர் கறுப்பு டிபெண்டர் வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டார் என்று முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஹிருணிகா உள்ளிட்ட எட்டுப் பேரும் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.
தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தால் எட்டுப் பேருக்கும் எதிராகக் குற்றப்பத்திரிகை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ற-5)

## மௌனம் உரிய நேரத்தில் கலையும்
### – ரத்ன தேரர்

கொழும்பு, ஓக. 11
உரிய தருணத்தில் நீண்ட மௌனத்தை நான் கலைப்பேன். இவ்வாறு ஜனாதிபதி ஆலோசகரான அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.
மூலோபாய நிறுவன முகாமைத்துவ நிலையத்தின் தேசிய நுகர்வோர் வலையமைப்பை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
ராஜபக்ச அரசைக் கவிழ்ப்பதற்கு பங்களிப்பை வழங்கியது போல் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தலையீடு செய்வேன். சாதாரண மக்களுடன் இருப்பதற்கும், நாட்டை பாதுகாப்பதற்கும் எப்போதுமே தயாராகவே இருக்கின்றேன். ஏன் மௌனமாக இருக்கின்றீர்கள் என்று பலர் என்னிடம் வினவுகின்றனர். எனது மௌனம் உரிய தருணத்தில் கலையும். விசம் மற்றும் நஞ்சு இல்லாத நாட்டை உருவாக்கும் நோக்கத்தில் நான் செயற் படுகின்றேன் – என்றார். (ற-5)

# ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கொலை வழக்கு விசாரணை
## 8 ஆண்டுகளின் பின்னர்

கொழும்பு, ஓக.11
2008ஆம் ஆண்டு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு 8 வருடங்களின் பின்னர் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
கம்பஹா, வெலிவேரிய காந்தி விளையாட்டு மைதானத்துக்கு முன்பாக 2008ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதியன்று காலை 7.40 மணிக்குக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி கேமா சுவர்ணாதிபதி முன்னிலையில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது. ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஹெக்டர் தர்மரத்ன முதல் சாட்சியத்தை வழங்கினார்.
செல்வராஜா பிரபாகரன், முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் குரே மற்றும் தம்பையா பிரசாத் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டனர். வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.
குண்டுத் தாக்குதலில் அமைச்சர் உட்பட 15 பேர் உயிரிழந்தனர். 96 பேர் படுகாயமடைந்தனர். 2008 ஆம் ஆண்டு, சிங்கள – தமிழ் புதுவருடத்தையொட்டி, வெலிவேரிய அதிர்ஷ்டான விளையாட்டுக் கழகம் விளையாட்டுப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அதன் முன்னோடி நிகழ்ச்சியாக நடைபெறவிருந்த மரதன் ஓட்டப்போட்டியை ஆரம்பித்து வைப்பதற்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அழைக்கப்பட்டிருந்தார். மரதன் ஓட்டப் போட்டியை ஆரம்பிப்பதற்காக அமைச்சரிடம் கொடி வழங்கப்பட்டு அமைச்சர் கொடியை கீழே இறக்கியபோது குண்டு வெடித்து உயிரிழந்தார். (ற-4)



மூன்றாம் நாள் உள்வீதியுலா

## நான்காம் திருவிழா
### வெள்ளி வேலாயுதன்

அன்னை உமை பாலகன் ஆறுமுகவேலவன்
இன்னல் களைபவன் ஈடிணை அற்றவன்
உண்மைப் பொருளானவன் ஊழ்வினைகள் தீர்ப்பவன்
எல்லாம் உணர்ந்தவன் ஏகமாய் உறைபவன்

ஒன்றாய்ப் பலவாய் நின்றவன் “ஓம்” காரமானவன்
ஐந்து கரன் சோதரன் ஔவைக்கருள் செய்தவன்
ஆடுமயில் வாகனன் அன்பர் துயர் தீர்ப்பவன்
அகத்திய முனி காதில் அரும் தமிழைச் சொன்னவன்

ஆறுபடை வீடு கொண்ட ஆறுதலை ஆண்டவன்
ஆவினன் குடிவாழும் ஆதிசிவன் புத்திரன்
திருத்தணிகை தன்னில் சேவிப்பார்க்கருள்பவன்
திருவேரகம் தன்னில் குருவாய் நிற்கும் வேலவன்

திருப்பரம் குன்றமதில் சிலையாய் நின்றருள்பவன்
செந்தூரில் வாழும் சேவற்கொடி ஆண்டவன்
பழனி மலை மீதில்பண்டாரமாய் நின்றவன்
பக்தர்தமைக்காத்தருளும் பரந்தாமன் மருமகன்

சூரனைவதைத்தவன் சூழும் வினை தீர்ப்பவன்
நாளும் எமைக்காத்தருளும் நல்லூர் மயில்வாகனன்
தந்தைக்கு மந்திரத்தைத் தானறிந்து சொன்னவன்
தகப்பன் சாமி யென்று தனிப் பெயர் பெற்றவன்

நல்லோரைக் காப்பவன் நற்கருணைநாயகன்
வள்ளி தெய்வயானையை வலமிடமாய்க் கொண்டவன்
பொல்லாங்கு தீர்ப்பவன் புள்ளிமயில்வாகனன்
நல்லூரில் வாழ்கின்ற வெள்ளி வேலாயுதன்.

*- கந்த பேரின்பம், காவலூர்க்கவிஞன்*

### நல்லூர்க்கந்தா

நல்லைப்பதியுறை வடிவேல் அழகா
தில்லைக் கூத்தனின் செல்வக்குமரா
மால் வண்ணன் மாதவனின் மாண்புமிகு மருகனே
வல்வினையகற்றிடும் வண்ணமயில் வாகனனே
பல்கிப் பெருகி வரும் பக்தர்கள் புடைசூழ
எல்லோர் நாவிலும் அரகரா முருகா கோசம்
தொல்லைகள் போக்கி துயர்தனைக்களைவாய்
நல்லவை எல்லாம் நடந்திட அருள்வாய்
அமுதா கிருபாகரன், *சுண்டுக்குளி மகளிர்கல்லூரி.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வாழ்வாதாரம் தட்டிப் பறிக்கப்படுவது நல்லாட்சிக்கு உவப்பானதா…?

மாதச்சம்பளம் பெறும் இராணுவத்தினரால் குறைந்த கட்டணத்துக்கு சேவை வழங்க முடியும். ஆனால் வருமானத்துக்காக இந்தத் தொழிலையே நம்பி வாழும் எங்களால் அவ்வாறு குறைந்த கட்டணத்தில் சேவை வழங்க இயலாது. மேற்கண்ட தமது நிலைப்பாட்டை மனம் திறந்து வெளிப்படுத்தி உள்ளார்கள் கிளிநொச்சி மாவட்டச் சிகை அலங்கரிப்பாளர்கள்.

இயக்கச்சி, கிளிநொச்சி நகரம், இரணைமடு மற்றும் முறிகண்டி ஆகிய பகுதிகளில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடத்துகின்றனர். அவர்கள் குறைந்த கட்டணங்களை அறவிடுகின்றனர் என்று அந்தப்பகுதிகளின் சிகை அலங்கரிப்பாளர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் சங்க மண்டபத்தில் மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கத் தலைவர் க.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விவகாரம் வெளிக்கொணரப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் அதில் கலந்து கொண்டார்.

ஆட்டைக்கடித்து, மாட்டைக்கடித்து, கடைசியாக மனிதனையும் கடித்ததென்ற உவமானம் எங்கள் பிரதேசங்களில் பிரபலமானது. அதற்கு மெருகு ஊட்டும் வகையிலேயே கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றி வரும் இராணுவத்தினர் செயற்படுகின்றனர் என்று கொள்ளும் விதத்தில் காரியங்கள் ஒப்பேறுவது-- எந்த வகை சார்ந்தும் ஏற்புடைத்தல்ல.

சிகை அலங்கரிப்பாளர்களின் வாழ்வாதாரமான தொழிலை இராணுவத்தினர் தட்டிப் பறிக்கும் “அதர்மத்துக்கு” யார் முற்றுப்புள்ளி வைக்க வல்லவர்கள் என்றால் நல்லாட்சி அரசினரே என்பதில் எவருக்கும் மறுகருத்து இருக்காது எனலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கூறியது போன்று--

கூட்டுறவுச் சங்கப் பதிவுக்கு உட்பட்ட சிகை அலங்காரத் தொழிலின் பாதுகாப்பு, அவர்களின் தொழிற்கௌரவம் உறுதிப்படுத்தப்பட்டாக வேண்டும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாதுகாப்புப் படையினர் என்ற போர்வையில் தமிழ்த் தொழிலாளர்களின் ஜீவாதாரம் கொள்ளை அடிக்கப்படுகிறது என்று அவர் சுட்டிக்காட்டி உள்ளமை மிகப் பொருத்தமே.


தமிழ் மக்களில் ஒருசாராரின் வாழ்வாதாரங்கள் தட்டிப்பறிக்கப்படுவதைத் தடுக்கும் “வல்லமை” நல்லாட்சி அரசுக்கு உண்டா என்ற வினாவும் இங்கே எழுந்து நிற்கிறது.

தமிழ் மக்களைக் கிள்ளுக்கீரைகளாக மைத்திரி - ரணில் அரசு கருதுகிறதா என்ற பென்னம் பெருவினாவுக்கு விடை காண்பதற்குக்கூட அனைத்துலக நாடுகளின் உதவி, ஒத்தாசை தேவைப்படுகிறதோ…?

தங்களது வாழ்வாதாரப் பாதிப்பு நிலை குறித்துதமிழ்த் தொழிலாளர்கள் எவரிடம்தான் சொல்லி அழமுடியும்…?

இந்தக்கேள்விக்கு என்ன பதில் என்று ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் வெளிப்படுத்துவார்களா…?





> பொதுவாக நல்லாட்சி என்பதற்கான வரைவிலக்கணம் பற்றி அரசியல் விஞ்ஞானம், பொருளாதாரம் என்பவை விளக்குகையில், நல்லாட்சியானது பங்கேற்பு, ஒளிவுமறைவின்மை, பயனுறுதித் தன்மை, சிக்கனம், பொறுப்புக் கூறல், சமத்துவம், தொடர்பாடல் என்ற அடிப்படை அம்சங்களை மையப்படுத்தியே தீர்மானங்கள் முழுமைப்படுத்தப்படும்

செ.ரமேஷ்

நடுவன்ஆட்சியும், மாநில ஆட்சியும் ஒருங்கே ஒன்றிணையும்போது அங்கே நல்லாட்சி இடம்பெறும்.

ஆனால் இன்று ரணில்– மைத்திரி தலைமையிலான ஜனநாயக ரீதியிலான தேசிய அரசு, அனைத்து மக்களுக்கும் சமவுரிமை, சமவுடமை தத்துவத்தின் கீழ் நல்லாட்சி செய்வதாக அரசுத் தலைவர்களும் தென்னிலங்கை ஊடகங்களும் முன்னிலைப்படுத்துகின்றன.

மத்திய அரசு, மாநில அரசுக்களுக்கான (வடமாகாண) ஒதுக்கீடுகளை, ஆட்சேர்ப்புக்களை, உட்கட்டுமானங்களை ஏனைய மாகாணங்களுக்கு நிகராக செயற்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

ஆனால் ஒட்டுமொத்தமான புள்ளிவிவரங்களை பகுப்பாய்வு செய்கின்றபோது, வடக்கு மாகாணத்துக்காக ஒதுக்கீடு, அதன் பலாபலன்களை அனுபவித்தல் என்ற செயல் நிலைகளில் 10வீதமான செயற்பாடுகள்தானும் அடையப் படவில்லையென்பது வெளிப்பாடு.

பொதுவாக நல்லாட்சி என்பதற்கான வரைவிலக்கணம் பற்றி அரசியல் விஞ்ஞானம், பொருளாதாரம் என்பவை விளக்குகையில், நல்லாட்சியானது பங்கேற்பு, ஒளிவுமறைவின்மை, பயனுறுதித் தன்மை, சிக்கனம், பொறுப்புக் கூறல், சமத்துவம், தொடர்பாடல் என்ற அடிப்படை அம்சங்களை மையப்படுத்தியே தீர்மானங்கள் முழுமைப்படுத்தப்படும்.

ஆனால் அண்மைய காலங்களில் ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில், ஆகியோர் வடக்குக்குப் பயணம் செய்து, வடக்கின் அபிவிருத்தி, உட்கட்டுமானம் மற்றும் கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்ற துறைகளின் முன்மொழிவுகளையும் பெற்றுச் சென்றுள்ளனர்.

எனினும் இதுவரையான காலப் பகுதியில், வடக்கின் உட்கட்டுமானத்திலோ, கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்ற துறைகளுக்கான நிதி ஒதுக்கீட்டு சேவைகளோ நிறைவேற்றப்பட்டதாக இல்லை.

அதேவேளை, நல்லாட்சி அரசின் கீழ் வடமாகாணத் தலைவரான க.வி.விக்னேஸ்வரன் நல்லாட்சித் தத்துவங்களை எடுத்து இயம்புகின்றார். அதற்கான அடைமொழிகளை வைத்துப் பேசுகின்றார்.

வடக்கின் பிரதம செயலாளர் மத்திய அரசின் தேவைகளை நிறைவேற்ற, மத்திய அரசினால் நியமிக்கப்பட்டவர்–என்கிறார்.

மத்திய அரசோ தனித்துவமாக இயங்கப் பார்க்கிறது. வடக்கின் முதலமைச்சரையோ, அன்றி வடக்கு மாகாணசபையின் தேவைகளை, கருத்துக்களை உள்வாங்கி செயற்படுத்துகின்ற நிலையில் மத்திய அரசின் மனோநிலை இல்லை.

வடமாகாணத்தை அவர்கள் ஒரு கருவியாக முன்வைத்து, சகல செயற்பாடுகளையும் மத்திய அரசே முன்னெடுத்து செல்கின்ற மூலோபாயத்தை முன்னெடுத்துச் செல்வதாக முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் வெளிநாட்டு தூதுவர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும், துறைசார்ந்தவர்களுக்கும் அடித்து கூறிவருகின்றார். ஊடகங்களிலும் அவரது கருத்துக்கள் வெளியாகி உள்ளன.

இதனால் நடக்கப்போவது என்ன? இதுவரை நடந்தது என்ன? என சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

இதற்கு உதாரணமாக, உள்ளூராட்சி சபைகளில் தேர்தல் இடம் பெற்றவுடன், தவிசாளரும், அதன் உறுப்பினர்களுமாக இணைந்து சபை (Council) உருவாகின்றது. பின்னர் தவிசாளர் கூறுகையில், நிதியீட்டங்கள் எமக்கு கிடைக்கப் பெறவில்லை, சபையில்நிதியில்லை, போதிய அதிகாரமில்லை எனவும், சபை உறுப்பினர்கள் தமக்கு தவிசாளர் அதிகாரங்களை தருகின்றார் இல்லை, எதனையும் செய்ய அனுமதிக்கிறார் இல்லை எனவும் கூறி காலத்தை நீட்டி முடித்துள்ளனர். இருக்கின்ற சட்டங்களோடு மக்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளை, திட்டங்களை வரையறுத்து செய்யாது காலத்தைக் கடத்தி, தேவையற்ற தீர்மானங்களை முன்னிறுத்தி முடித்தது தான் உண்மை. (இதில் பெற்றுக்கொண்ட சிலதலைவர்களை தவிர, உறுப்பினர்களைத் தவிர)

இதேபோல க.வி.விக்னேஸ்வரன், தலைமையிலான வடமாகாண சபையிடம் தமிழ் மக்கள் சுபீட்சத்தை எதிர்பார்த்திருக்கின்ற நிலையில், 2 வருடங்கள் கழிந்த நிலையில் வடமாகாண சபை தல்லவர் க.வி, தொடர்ந்து மத்தி கவனிக்கிறது இல்லை, மத்தி தனித்துவமாக இயங்குகிறது. எம்மிடம் ஆலோசனை பெறுகிறார்கள் இல்லை என கூறுவது பொருத்தமான ஒன்றாகி விடுமா? இன்றைய கால கட்டத்தில்.

அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் இந்தியக் கிராமப் பாடல்களைப் பாடும் அனிதா குப்புசாமி பேசிய வரிகள் சிலவற்றை இங்கே ஞாபகப் படுத்துகின்றேன்.

பிரதமர் நரேந்திர மோடி உலகம் முழுவதும் சுற்றிவந்து ஒன்றரை லட்சம் (1.5) கோடி ரூபாய்க்கான முதலீட்டைக் கொண்டு வந்தார். ஆனால் முதல்வர் ஜெ.அம்மாவோ, உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே 2 லட்சம் கோடி ரூபாய்க்கான முதலீட்டை இந்தியாவுக்குக் கொண்டு வந்தார் எனவும், லண்டனில் உள்ள ஆங்கில ஊடகமான Irish என்ற பத்திரிகை, இதற்குத் தாய்த்திட்டம் என அடைமொழி வைத்து ஊக்கம் கொடுத்துச் செய்தி வெளியிட்டதாகவும் கூறினார்.

இவ்வாறாக மத்திய மாநில அரசுகளின் செயற்பாடு இந்தியாவில் மேலோங்கி உள்ளது. அதே போல வடக்கின் முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் ஐயாவும் வெளிநாடுகள் சுற்றி வந்தார். எத்தனை ஆயிரம் கோடி பெறுமதியான முதலீடுகளை வடக்குக்குக் கொண்டு வந்தார்? அவர் மக்களுக்கு வெளிப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார முரண்பாடுகளால் அபிவிருத்தி பாதிப்படையும்

படைத் தன்மை அடிப்படையில் இது குறித்து ஏதாவது கூறமுடியுமா?

இல்லாவிடில் மத்திய அரசிடம் எத்தனை முன்மொழிவுகளை முன்வைத்தார், எத்தனை முதலீட்டுத் திட்டங்களை, தொழில் திட்டங்களை, கைத்தொழில் திட்டங்களை, வேலைவாய்ப்புக்களை பொறிமுறைத் திட்டங்களை, விவசாயம், கைத்தொழில் சேவைகள், கல்வி, சுகாதாரம் போன்ற தலைப்புக்களில் எவற்றை முன்வைத்து செயற்படுத்தினார் எனக் கூறமுடியுமா?

வந்த கடிதங்களுக்குப் பதில் எழுதுவதும், வெறும் மாகாண சபை தீர்மானங்களை நிறைவேற்றுவதும், பிரதேச மாவட்ட, மாகாண கூட்டங்களிலும் பங்குபற்றி பொது மேடைகளில் பேசுவதால் மட்டும், தமிழ் மக்களது மூன்று தசாப்தகால பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமா?

உதாரணமாக வெறும் 200 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட வேண்டிய பொருளாதார மத்திய நிலையம் தொடர்பாக, எவரேனும் கள ஆய்வு கற்கை நெறிகளை (Feasibly Study) மேற்கொள்ளாது எழுந்தமானத்தில் ஓமந்தை, தாண்டிக்குளம், மதவாச்சி என கூறுவது பொருத்தமாகிவிடுமா? எது எப்பிடியிருப்பினும், இதில் வடக்கு மாகாண தலைவரின் (முதல்வர்) ஒரு மித்த கருத்துக்கு எல்லோரும் பங்களித்திருக்க வேண்டும். எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் என பலரும் பேண்தகு நிலையை நோக்காது, எழுந்தமான கருத்துக்களை முன்வைத்து ஒரு சிறிய விடயத்தை குழப்பியடித்து விட்டனர்.

இதேபோல, வடக்கின் மக்கள் குடிக்கின்ற யாழ்.குடாநாட்டுக் குடிதண்ணீரில் மலக்கழிவு, நைத்திரேற் செறிவு, எண்ணெய் செறிவு என ஆய்வுகள் வெளிக்கிளம்பிய நிலையில், இரணைமடு என்ற யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டம் (164.04) மில்லியன் ரூபாய்க்கு மேலதிகமான நிதி ஒதுக்கீட்டை கொண்ட பெரிய திட்டம் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமை எதிர்த்ததால் நிறை வேற இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதனை விடுத்து சுன்னாகம் எண்ணெய் கழிவு குடிதண்ணீர் திட்டத்துக்கு மாற்று திட்டம் இல்லை. மருதங்கேணி கடல் நீரை சுத்திகரித்து நன்னீராக வழங்க முடியாத ஏதுநிலை, திணைக்களங்களினூடான திட்டங்களின் வளர்ச்சி அற்ற நிலை, பொருளாதார ரீதியில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் 34 ஆயிரம் பேர் வேலையற்ற நிலை, போரினால் பாதிக்கப்பட்டு ஆயிரக் கணக்கான மாற்றுத் திறனாளிகளாக்கப்பட்டவர்களுக்கு (ஊனமடைந்தவர்களுக்கு) உரிய நிவாரணம் இல்லை, தொழில் இல்லை, 65 ஆயிரம் வீட்டுக்கு பதில் 65 ஆயிரம் கல்வீட்டு திட்டமுமில்லை. சுற்றுலா அபிவிருத்தி மிகமந்தநிலை, வடக்கின் இனம் காணப்பட்ட நகரங்களின் அழகுபடுத்தல் அபிவிருத்தியில்லை, கைத்தொழில் பேட்டைகள், புதிய கைத்தொழில்சாலைகள், நவீன சிறுவர் வைத்தியசாலைகள், ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் 300க்கும் மேற்பட்ட சபை வீதிகள் மீள்புனரமைப்பு அற்றநிலை, மீள்குடியேற்றமில்லை, மீள்குடியேறியவர்களுக்கு வீடு, மலசலகூடம், வாழ்வாதாரமற்ற நிலை, கைதிகள் போராட்டம் மழுங்கடிக்கப்பட்டு அவர்கள் தொடர்ந்து சிறையில் வாடும் நிலையில் மீளகொண்டுவர முடியாத நிலை, வேலையற்ற பட்டதாரிகள், ஜீ.சி.ஈ.உயர் தரம்கற்று தேறியோர் வீதியில் நிற்கும் நிலை, அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அலுவலர்கள், அதிகாரிகளுக்கான பதவி உயர்வுகள் இன்மை, நிலுவைக் கொடுப்பனவுகள் வழங்காமை, வடக்கின் ஆசிரியர்கள் பதவி உயர்வு பறிப்பு, நிலுவைகள் வழங்காமை, அதிபர் சேவை மழுங்கடிப்பு என வடக்கில் எந்தத் துறைகளும் முன்னேற்றமடைய முடியாத நிலையில், பொருத்தமற்ற விவசாய பொறி முறைகள், உற்பத்திகள் வாயிலாக தன்னிறைவு பொருளாதாரமாக வளர முடியாத நிலையில் வட மாகாணம் ஊசலாடுகிறது. இந்த நிலையில் நாம் எவரைக் குறை கூறுவது?

> கடந்த காலங்களில் வடமாகாண சபையின் கூட்டம், அமைச்சர் வாரிய கூட்டம் என்றால் அதன் முடிவுகளை எதிர்பார்த்து அதன் ஊடாக ஏதேனும் தமிழ் மக்களுக்கு நன்மை கிட்டும் என எதிர்பார்த்து செய்திகளை திட்டங்களை முண்டியடித்துப் பார்த்தனர்.

கடந்த காலங்களில் வடமாகாண சபையின் கூட்டம், அமைச்சர் வாரிய கூட்டம் என்றால் அதன் முடிவுகளை எதிர்பார்த்து, அதன் ஊடாக ஏதேனும் தமிழ் மக்களுக்கு நன்மை கிட்டும் என எதிர்பார்த்து, செய்திகளை, திட்டங்களை முண்டியடித்துப் பார்த்தனர். இன்று வடமாகாண சபை செய்திகளை வாசிப்பதற்கே ஆள்கள் திராணியற்று வெறுப்புணவுடன் உள்ளதை உணரக் கூடியதாக உள்ளது. இன்று என்ன நடக்கிறது? 36 மாகாண சபை உறுப்பினர்கள். மாகாண முதல்வர்,பேரவை, நான்கு பிரதான அமைச்சர்கள்.

இவ்வாறாக தனித்துவமாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் (தமிழரசு) தலைமையின் உள்ள மாகாணசபை உறுப்பினர்கள் இதுவரை ஒன்றுபடவில்லை. ஒன்று சேரவில்லை, ஒவ்வொருவரும் தனித்துவமாக சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை மட்டும் கொண்டவர்களாக வலம் வருகின்றனர். CBG நிதியை மட்டும் பகிர்ந்து வழங்கி, அதில் இன்பங்காணுபவர்களாக உள்ளனர். சபைக்கூட்டங்களில் மாகாணத்தின் கீழ் உள்ள மாவட்ட, பிரதேச , கிராம வளர்ச்சியில் அக்கறையற்று அரசியல் பேசுகின்றனர்.

பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்துகின்ற ஏதேனும் விடயதானங்கள், பெரும் திட்டங்கள் பெரிய ஆஸ்பத்திரி, பெரிய தொழிற்சாலை, வேலைவாய்ப்பு, திட்டம், ஒருலட்சம் வீடமைப்பு திட்டம், காணி யற்றோருக்கான காணிவழங்கல் திட்டம், பெரிய வீதியமைப்பு, ரயில்வே போக்குவரத்தில் மறுமலர்ச்சி, கடல் சார் அபிவிருத்தி, மீள்பொருளாதாரத்தில் ஒரு புரட்சி என ஏதாவது ஒரு கருத்திட்டத்தை, முன்மொழி வுகளை (Proposals, concent Papers) மாகாண உறுப்பினர்கள் தயாரித்து முன்மொழிந்துள்ளனரா?

36 உறுப்பினர்களில், எவராவது ஓர் உறுப்பினர், தான்வரைந்து சபைக்குச் சமர்ப்பித்து நிதியைப் பெற்று வடக்கில் செயற்படுத்திய திட்டமாக ஏதாவது இருந்தால் கூறுங்கள். அதற்குச் சபை, வலுச்சேர்க்காவிடில், அதற்கு வெளி நாட்டில் உள்ள புலம்பெயர்ந்தோர் முதலீட்டை மேற்கொள்ள துணிவாய் நிற்கிறார்களா? உடன் வெளிப் படுத் துங்கள். இவ்வாறாக தமிழ் மக்கள் எதுவும் அடைய முடியாத ஏதிலிகளாக இன்று மற்றையவர்களிடம் கை ஏந்தும் நிலைக்கு மாற்றப்பட் டுள்ளனர். இதற்கு மாற்றம் ஏதாவது ஏற்படாத நிலையில் எதுவும் இடம்பெறப் போவதில்லை. வடக்கு மத்தியை குறை கூறுவதும், மத்தி வடக்கை புறக்கணிப்பதும், அருவருக்கத்தக்க செயல்நிலை. மூன்று தசாப்தகால போர் முடிவுற்று இரண்டாவது மாகாணசபை தோற்றம் பெற்று 2 வருடங்கள் முடிவடைந்தும், போர் பாதித்த பிரதேசம் அபிவிருத்தி இன்றி உள்ளது.

இதனால் சிறந்த அறுவடையைப் பெறுவதற்கு மத்தியுடன் மாகாணம் இணைந்து செல்ல வேண்டும். அவ்வாறு மத்தியுடன் மாகாணம் இணைந்து செல்லாவிடத்து மீண்டும் வடக்கின் பிரதம செயலாளர்களால் அரசின் நியாயப்படுத்தல்களோடு அபிவிருத்திகள் சிறிய அளவிலேனும் முன்கொண்டு செல்லப்படும். இதுவே இன்றைய நிலை. இதில் மாற்றம் என்பது முக்கியமானது. ஒருங்கிணைந்த செயற்பாடு மாகாணத்தை அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும்.

## நல்லூரானுக்கே வெளிச்சம்!

வருடாந்தம் நல்லூரான் பெருந்திருவிழா ஆரம்பமாகும் போதெல்லாம் வாகனப் பாதுகாப்பு நிலையங்கள் அறவிட வேண்டிய கட்டணங்கள் தொடர்பாக யாழ். மாநகர சபை பத்திரிகை மூலம் அறிவித்து வருகிறது. இந்த முறையும் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 10, சைக்கிளுக்கு ரூபா 5 என மாநகரசபை அறிவித்திருந்தது. ஆனாலும் சைக்கிளை பாதுகாப்பு நிலையம் ஒன்றில் நிறுத்தி வைத்தபோது, அவர்கள் வழங்கிய ரிக்கற் றில் ரூபா 5 என அச்சிடப்பட்டதற்கு மேலாக ரூபா 10 என மாக்கர் பேனாவால் அடித்து எழுதப்பட்டிருந்தது.

கோயிலுக்குச் சென்றுவிட்டு, சைக்கிளை எடுக்கும்போது ரூபா 20ஐக் கொடுத்த போது, ரூபா 10 சில்லறை இல்லை என சிறிது நேரம் அலைக்கழித்த பின்னர், லாச்சியைத் துழாவி சேடம் இழுக்கும் நிலையில் இருந்த 10 ரூபாத் தாள் ஒன்றைத் தந்தார் அந்தப் பாதுகாப்பு நிலையத்தில் இருந்த இளைஞன். அதையும் அவர் தரமனம் இல்லாமல்தான் தந்தார் இதில் பிரச்சினை என்ன வென்றால் ரூபா 10, 5 நாணயம் என்பது மருந்துக்கும் காணமுடியாத நிலையில், நல்லூரான் திருவிழாநாள்கள் போகப் போக சைக்கிளுக்கும் ரூபா 20 ஆகினாலும் ஆச்சரியப்படமுடியாது. இதில் காலை, மாலை இரண்டு வேளைகளிலும் கோயிலுக்குச் செல்வோர் பாடு சிக்கல்தான். சாதாரணமாகவே சில்லறைத் தட்டுப்பாடு அன்றாடம் வியாபாரச் செயற்பாடுகளின்போது, கொள்வோர் கொடுப்போரிடையே நெருக்கடிகளைத் தோற்றுவித்திருக்கும் நிலையில், பாதுகாப்புக் கட்டணம் தொடர்பான மாநகரசபையின் அறிவிப்பும் அதனை உதாசீனம் செய்யும் பாதுகாப்பு நிலையங்களின் செயற்பாடுகளும் அப்பாவிப் பொதுமக்களைச் சீண்டிவிடும் ஒன்றாகவே உள்ளது.

சொல்லுக்குப் பெறுமதி அது செயல் வடிவம் பெறும்போதுதான் என்பார்கள். இங்கே அவர்கள் ஒன்றைச் சொல்லுகிறார்கள், இவர்கள் ஒன்றைச் செய்கிறார்கள். இடையில் இன்னும் இருபது நாள்கள் இருக்கின்றன. மாநகர சபையின் இந்த அறிவிப்பை வைத்து, எத்தனை அடியவர்கள் பாதுகாப்புநிலையம் நடத்துவோருடன், முரண்படப்போகிறார்களோ அந்த நல்லூரானுக்குத் தான் வெளிச்சம்!

காலாதிகாலமாக அர்ச்சனை ரிக்கற்றுக்கு ஒரு ரூபாவை மட்டுமே வாங்கும் முருகா! உன்னை வழிபட வரும் அடியவர்களிடம் சீசன் வியாபாரம் மேற்கொள்வோரது மனங்களை மாற்றமாட்டாயா?

**சி.வே.கிருஷ்ணானந்தன்**
**சிவன்பண்ணை வீதி**

## ஆங்கிலம் கற்றுக்கொள்ள வழிவிடுவீர்களா?

இருபது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலம் கதைப்பவர்கள், சமுதாயத்தில் உயர் அந்தஸ்தில் உள்ளவர்களாகவே இருந்தனர். அவற்றை மீறி சாதாரண மக்கள் ஆங்கிலத்தில் பேச முற்படும் போது, ஆங்கிலம் தெரிந்தவர்களால் அவர்களது தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு விமர்சிக்கப்பட்டன. இதனால் ஆங்கிலம் பேசும் ஆற்றலும் ஆவலும் நலிந்து போயின. ஆங்கிலம் எட்டாத கனியாக மாறியது. ஆனால் ஆங்கிலம் பேச ஆரம்பிக்கும் எவருமே ஆரம்பத்தில் தவறுகள் இன்றிப் பேசுவதில்லை. ஆனால் ஆங்கிலம் பேசுபவர்கள், தமது சமூகம் சார்ந்தவர்கள், தங்களுடைய பிள்ளைகள், உற்றார் உறவினர்கள் என தமது வட்டத்தில் இருப்பவர்களின் தவறுகளை உரிய முறையில் சுட்டிக்காட்டி மனம் உடையாமல் திருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றை மீறி முயற்சி செய்த ஒரு சிலர், யாழ்நகரின் பிரபல ஆங்கில ஆசிரியர்களாக வலம் வருகின்றனர். ஆனால், தற்போது ஆங்கிலப் புலமை தொடர்பான எண்ணக்கருக்கள் தகர்க்கப்பட்டு வருகின்றன.

தமிழ் பேசப் பழகுவதற்கு என எவருமே தமிழ் வகுப்புக்குச் செல்வதில்லை. பேச்சு வழக்குத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் வித்தியாசம் உண்டு என்பதை உணர வேண்டும். தமிழ்ப் பாடத்தில் சித்தியடையத் தவறும் தமிழ் மாணவர்களும் நம்மிடையே உள்ளனர். அவர்கள் தமிழில் பேசத் தெரியாதவர்களா? யதார்த்தத்தை உணர்ந்து தலைமுறைகளுக்கு உதவுவோம். இலங்கையில் உள்ள பிரபல சர்வதேச நிறுவனங்கள் இலக்கணத் தவறுகள் தொடர்பான ஆரோக்கியமான கருத்தை வலியுறுத்திக் கூறுவதன் மூலம் மக்களுக்கு ஆங்கிலம் தொடர்பான அச்சம் தவிர்க்கப்படுகின்றது. தென்னாசிய நாடுகளில் ஆங்கில மோகம் அதிகம். எமது தலைமுறை ஆங்கிலத்தில் தலை நிமிர ஆதரவு கொடுங்கள். தவறுகள் திருத்தப்படவேண்டியவை தான். ஆனால், தவறுகளையே சுட்டிக்காட்டி அவர்களது ஆங்கிலம் கற்கும் ஆர்வத்தை மழுங்கடிக்க முயலாதீர்.

**ஷனா, யாழ்ப்பாணம்.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப [illegible] அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் பந்துப் போட்டி; ஆஸியிடம் ரஷ்யா சரண்

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு தண்ணீர்ப் பந்துப் போட்டிகள் நேற்று நடைபெற்றன. 'ஏ' பிரிவு ஆட்டமொன்றில் ஆஸ்திரேலியா அபார வெற்றிபெற்றது. இந்த வெற்றியே நேற்றையதினம் பதிவான ஆகச் சிறந்த வெற்றியாக அமைந்தது.

இதன்படி ஆஸ்திரேலியா 14:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் ரஷ்யாவை வீழ்த்தியது. மற்றுமொரு 'ஏ' பிரிவு ஆட்டத்தில் இத்தாலி, பிரேஸிலை 9:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வீழ்த்தியது.

'பி' பிரிவு ஆட்டங்களில் ஹங்கேரி, சீனாவை 13:11 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், அமெரிக்கா, ஸ்பெய்னை 11:4 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வீழ்த்தின. (ம-ரி4)





# ஓர் ஒலிம்பிக் பத

# பன்னாட்டு அங்க

## உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு ஜூடோப் போட்டியில், 52 கிலோ எடைப்பிரிவில் கொசொவோ வீராங்கனை மஜ்லிந்தா கெல்மென்டி தங்கப் பதக்கம் வென்றார். பதக்கப்பட்டியலில் பல நாடுகள் ஆதிக்கம் செலுத்துகின்ற போதிலும், கொசொவோ வென்ற ஓர் பதக்கமே பெரிதும் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது. சேர்பியாவிலிருந்து 2008 ஆம் ஆண்டு பிரிந்து தனி நாடானது கொசொவோ. உலகில் உள்ள பல நாடுகளைப் போன்றே கொசொவோ மக்களதும் தனிநாட்டுக் கோரிக்கை ஆயுத முனையில் நசுக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு, சைபீரியப்படைகளை வெளி யேற்றுவதற்காக நேட்டோ படைகள் கொசொவோவில் 78 நாள்கள் குண்டு மழை பெழிந்தன. பலர் சாவடைந்தனர். பல போர் குற்றங்கள் அரங்கேறின. இத்தகைய பின்னணியிலேயே கொசொவோ உருவானது.

தசாப்த காலமாக கொசொவோ ஒலிம்பிக் சம்மே
னம் உள்ள போதிலும் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மே
னம் 201 ஆம் ஆண்டே அதை உத்தியோகபூர்வம
அங்கீகரித்தது. இதனால் ரியோ ஒலிம்பிக் தொ
தான் அந்த நாட்டு வீர, வீராங்கனைகளின் முதல் ஒ
பிக் தொடராக அமைந்தது. அவ்வாறு களமிறங்
வீராங்கனைகளில் ஒருவர்தான் மஜ்லிந்தா கெல்மெ
இவர் தன்னை எதிர்த்த இத்தாலிய வீராங்கனை
வீழ்த்தி தங்கம் வென்றார். உலகில் உள்ள பல நாடு
கொசொவோவாவை ஓர் நாடாக அங்கீகரிக்கவில்ல
இந்த நிலையில் இந்தப் பதக்கம், ஓர் பதக்கம் ம
மல்ல. ஓர் நாட்டின் கனவும், கொசோவோவுக்கா
பன்னாட்டு அங்கீகாரமுமாகவே பார்க்கப்படுகிற
"நாங்கள் போர்களை மட்டுமே கண்டுவளர்ந்தவர்க
எங்கள் நாடு வெறும் போர்களை மட்டும் சந்தித்

# 25 மீற்றர் துப்பாக்கிச் சூட்டில் ஒலிம்பிக்கின் தாயகம் தங்கம்



ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு 25 மீற்றர் துப்பாக்கிச் சூட்டுப் போட்டியில் ஒலிம்பிக்கின் தாயகமான கிரீஸுக்குத் தங்கம் கிடைத்தது. கிரீஸின்சார்பாகக்களமிறங்கியஅன்னா ஹெராக்கி ஒட்டுமொத்தமாக 8 புள்ளிகளைப் பெற்று, தங்கப் பதக்கத்தையும், ஜேர்மனின்மௌனிகா ஹார்ஸ் 6 புள்ளிகளைப் பெற்று, வெள்ளிப் பதக்கத்தையும், சுவிட்சர்லாந்தின் ஹெய்டி கெர்பர் 5 புள்ளிகளைப் பெற்று வெண்கலத்தையும் கைப்பற்றினர். (ம-ரி4)

## சாதிப்பாரா கருணாரத்ன



ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு பூப்பந்தாட்டப் போட்டியில், இலங்கையின் நிலுக்க கருணாரத்ன இன்று களமிறங்குகிறார். இதன்படி இன்று நடைபெறவுள்ள தகுதி ஆட்டத்தை அவர் சீனாவின் சென் லோங் என்ற வீரரை எதிர்க்கிறார். இலங்கையின் பதக்கக் கனவை மத்தியூ அபய சிங்க நிறைவேற்றத் தவறிய நிலையில், கருணாரத்னவின் மீது எதிர்பார்ப்புக்கள் அதிகமாகியுள்ளன. (ம-ரி4)

## டைவிங்
## இலக்கு

ரியோ ஒலிம்பிக் தொ
டைவிங் போட்டியில்
எட்டுத்தங்கப்பதக்கங்
இலக்கு வைத்துள்
அறியவருகிறது. 10
உயர டைவிங் போ
தங்கம் வென்ற சீ
ரான சென் ஆய்ச
பவரே இதை வெளிப்
னார்.
நேற்று நடைபெற்ற
றர் டைவிங் போ
ஆண்கள் இரட்டை
வில் சீனாவின் செ
சன், லிக்யூ வொன்
தங்கம் வென்றது.
பின்னர் கருத்துத் தெ
கையிலேயே ஆ
இவ்வாறு தெரிவித்
எட்டு விதமான
போட்டியில் கலந்து
சினாவிலிருந்து நா
ருக்கிறோம். ஏராள
மேற்கொண்டுள்ளே
போட்டிகளிலும் தங்

# மூன்றாவது தங்கத்தை வென்றார் ஹங்கேரியின் 'இரும்புப் பெண்'




ஹங்கேரியின் 'இரும்புப் பெண்' என்று அறியப்படும் நீச்சல் வீராங்கனை கதின்கா ரியோ ஒலிம்பிக் தொடரில் ஹற்றிக் தங்கம் வென்றார்.

ஹங்கேரியின் தேசியமட்டத் தொடர்களிலும், ஐரோப்பியத் தொடர்களிலும் கதின்கா பதக்கங்களைக் குவித்திருந்தாலும், ஒலிம்பிக் தொடரில் பதக்கம் வெல்வதென்பது அவருக்கு நிறைவேறாத கனவாகவே இருந்தது. ஆனால் ரியோ ஒலிம்பிக் தொடரில் தான் இதுவரை களமிறங்கிய மூன்று போட்டிகளிலும் அவர் தங்கம் வென்றதுடன், இரண்டில் சாதனையையும் படைத்தார். 100 மீற்றர் புற நீச்சலில் 58 செக்கன்கள் 45 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தைக் கைப்பற்றிய கதின்கா, 400 மீற்றர் நீச்சலில் 4 நிமிடங்கள், 26 செக்கன்கள், 36 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து, உலக சாதனையுடன் தங்கத்தை வென்றிருந்தார். இந்த நிலையில் தனது மூன்றாவது போட்டியான 200 மீற்றர் நீச்சலில் நேற்றுக் களமிறங்கிய அவர், 2 நிமிடங்கள், 6 செக்கன்கள், 58 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து உலக சாதனையுடன் தங்கம் வென்றார். (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதக்கமும்
# அங்கீகாரமும்

## ...பட்டது கொசொவோ

...பிக் சம்மேள
...பிக் சம்மேள
...பாகபூர்வமாக
...ம்பிக் தொடர்
... முதல் ஒலிம்
...களமிறங்கிய
... கெல்மெண்டி.
...ங்கனையை
... பல நாடுகள்
...க்கவில்லை.
...தக்கம் மட்டு
...வோவுக்கான
...கப்படுகிறது.
...ார்ந்தவர்கள்.
...ம் சந்திக்கும்


நாடு மட்டுமல்ல. திறமையாளர்கள் நிறைந்த நாடு என்பதை இந்த உலகுக்கு உணர்த்த வேண்டும் என்று நினைத்தேன். வாழ்க்கை சிதைந்துபோன நிலையிலும், எங்களால் சாதிக்க முடியும் என்று நம்பினேன், தற்போது அதனை நிறைவேற்றியுள்ளேன். எங்கள் நாட்டுக்கு இது மிகப்பெரிய வெற்றி. ஒட்டுமொத்த கொசொவோவும் நான் வெற்றி பெற வேண்டுமென விரும்பியது, வேண்டியது, வாழ்த்தியது. அதுவே என்னை மிகவும் ஊக்கப்படுத்தியது'' என தெரிவித்தார் மஜ்லிந்தா கெல்மெண்டி.

கொசொவோவின் அயலுறவுத்துறை அமைச்சர் பெற்றிட் செமிலி, "எமது நாட்டுக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொடுத்த மட்டில், மஜ்லிந்தா நாட்டில் உள்ள ஏனைய ராஜதந்திரிகளுடன் ஒப்பிடுகையில் மிகச்சிறப்பாக செயற்பட்டுள்ளார்" எனப் பாராட்டியுள்ளார். (ம-ரி4)

## ...விங் போட்டியில் தங்கத்தை ...க்கு வைத்துள்ளதாம் சீனா

...ம்பிக் தொடரில்
...பாட்டியில் சீனா
...ப்பதக்கங்களை
...வைத்துள்ளதாக
...கிறது. 10 மீற்றர்
...விங் போட்டியில்
...வன்ற சீன வீர
... ஆய்சன் என்
...த வெளிப்படுத்தி

...டைபெற்ற 10 மீற்
...ங் போட்டியில்
... இரட்டையர் பிரி
...வின் சென் ஆய்
..., வொன் இணை
...வன்றது. இதன்
...ந்துத் தெரிவிக்
...யே ஆய்சன்
...தெரிவித்தார்.
...மான டைவிங்
... கலந்துகொள்ள
...ருந்து நாம் இங்கே வந்தி
.... ஏராளமான பயிற்சியை
...ண்டுள்ளோம். அனைத்து
...லும் தங்கத்தை வெல்வதே


சென் ஆய்சன்

எமது இலக்கு. சீனாவில் பதக்கப்பட்டியலில் டைவிங் பிரதான பங்களிப்பை வழங்கும் என்று உறுதியாக நம்புகிறோம் என சென் ஆய்சன் மேலும் தெரிவித்தார். (ம-ரி4)

# நிறைவேறாத கனவை நிறைவேற்ற வந்தேன்

*கோல்ப் ஜாம்பவான் நெகிழ்ச்சி*

ஒலிம்பிக்கில் கோல்ப் இணைக்கப்பட்டது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது என அமெரிக்காவைச் சேர்ந்த கோல்ப் ஜாம்பவானான ஆர்னோட் பல்மர் தெரிவித்தார்.

1904 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரின் பின்னர் நடப்பு ஒலிம்பிக் தொடரிலேயே கோல்ப் விளையாட்டு முதல் முறையாக இணைக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக் தொடரில் கோல்ப் இல்லாதமையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர் என்றால் அது பல்மராகத்தான் இருக்க முடியும். தற்போது 86 வயதாகும் பல்மர், 7 தடவைகள் உலகச் சம்பியன் பட்டங்களை வென்றவர். இவரது காலத்தில் ஒலிம்பிக் தொடரில் கோல்ப் இல்லையென்பதால் ஒலிம்பிக் தொடரில் பதக்கம் வெல்வதென்பது பல்மருக்கு நிறைவேறாத கனவாகவே இருந்தது. இந்த நிலையில் ரியோ ஒலிம்பிக் தொடரில் கோல்ப் விளையாட்டு இணைக்கப்பட்டமையை அடுத்து, ஒலிம்பிக்கில் பதக்கம் என்ற தனது நிறைவேறாத கனவை நிறைவேற்ற வந்துள்ளார் அந்த ஜாம்பவான். ஆனால், இந்தமுறை வீரராக வரவில்லை அமெரிக்க கோல்ப் அணியின் ஆலோசகராகவே வந்துள்ளார். எனது கனவை நிறைவேற்றவே இங்கு வந்துள்ளேன். கோல்ப் விளையாட்டில் அமெரிக்காவுக்கு ஓர் பதக்கம் கிடைப்பதில் உறுதியாக உள்ளோம் என பல்மர் மேலும் தெரிவித்தார். (ம-ரி4)






# முதல் ஆசியர்


ஒலிம்பிக் வரலாற்றில் ஒற்றைப் படகோட்டப் போட்டியில் ஆசியாவைச் சேர்ந்த வீரர் ஒருவர் முதல் முறையாக பதக்கம் வென்றுள்ள சம்பவம் ரியோவில் அரங்கேறியது.

நேற்று நடைபெற்ற படகோட்டப் போட்டியில் ஜப்பானைச் சேர்ந்த ரக்குயா ஹனேடா என்ற வீரர் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். நிர்ணயிக்கப்பட்ட இலக்கை ஒரு நிமிடம் 37 செக்கன்களில் கடந்தே ரக்குயா வெண்கலத்தைக் கைப்பற்றினார். இந்தப் பதக்கத்தின் மூலம் ஒற்றைப் படகோட்டப் போட்டியில் ஜப்பானில் மாத்திரமல்லாது, ஆசியாவிலேயே பதக்கம் வென்ற முதல் வீரராகவும் அவர் பெயரிடப்பட்டார். தங்கப்பதக்கத்தை பிரான்ஸின் கார்கட் சானட் கைப்பற்றினார். (ம-ரி4)

# பத்திரிகையாளர்களின் பஸ் மீது ரியோவில் துப்பாக்கிச் சூடு

ரியோ ஒலிம்பிக் தொடரில் செய்தி சேகரிப்புப் பணியில் ஈடுபட்டுவரும் பத்திரிகையாளர்கள் சென்ற பஸ் மீது துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அறியவருகிறது.

குறித்த பத்திரிகையாளர்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட பஸ்ஸில், செய்தி சேகரிப்புப் பணிக்காக ஒலிம்பிக் கிராமத்தை நோக்கிச் செல்கையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலில் எவரும் சாவடையவில்லையாயினும் கண்ணாடிகள் உடைந்து குத்தப்பட்டதில் 15 பேர் வரை காயமடைந்தனர்.




தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக ஒலிம்பிக் தொடர் நடை[illegible] [illegible] பொலிஸாரும் படை வீரர்களும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற நிலையிலும், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டமையானது பன்னாட்டு ஊடகங்களால் கோடிட்டுக் காட்டப்படுகிறது. பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம் குறித்த விடயத் துக்கு தனது அதிருப்தியை தெரிவித் ததையடுத்து பிரேஸில் அரசு ஒலிம்பிக் தொடருக்கான பாதுகாப்பை மேலும் அதிகரிப்பதாக அறிவித்தது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை சுவடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

## சிங்கம்

### மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம் வரை



நல்ல மருத்துவரை நாடிச் சென்று நலம் காண்பீர்கள். உடலில் பலம் சேர்ப்பீர்கள். தீர்த்த யாத்திரை செல்லும் வாய்ப்புகளும், தெய்வத் திருப்பணிகளுக்குச் செல்லும் வாய்ப்பும் அதிகரிக்கும். பகைவர்கள் இருந்தாலும், உங்களைப் பார்த்ததும் ஒளிந்துவிடுவர்.

இருண்ட வாழ்க்கை மாறி, இனிய வாழ்க்கை அமையும். ஒவ்வொரு வியாழக்கிழமையும் கோயிலுக்குச் சென்று குருவை வழிபட்டு வருவதோடு, அருள் தரும் குருவின் சந்நிதியில் ஐந்து நிமிடங்களாவது உட்கார்ந்திருப்பது நல்லது. அதுமட்டுமல்லாமல் குரு கவசம் பாடினால் கவலைகள் தீரும்.

**குரு பார்வை கொடுக்கும் பலன்கள்!**

நவக்கிரகங்களில் சுபகிரகம் என்று வர்ணிக்கப்படும் குருபகவான், உங்கள் ஜென்ம ராசியில் இருந்து இரண்டாம் இடத்துக்கு மாறுதலாகிவிட்டார். அங்ஙனம் மாறுதல் அடையும்பொழுது, அதன் பார்வை 6,8,10 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. மறைவிடம் எனப்படும் 6ஆம் இடத்தை குரு பார்ப்பதால், அது நிறைவிடமாகி உங்களுக்கு நிம்மதியை வழங்கப் போகிறது. எதிர்ப்பு, வியாதி, கடன் போன்றவற்றைக் குறிக்கும் 6ஆம் இடம் புனிதமடைகிறது. எனவே எதிரிகள் விலகுவர். இலாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். மாற்று வைத்தியத்தால் உடல்நலத்தைச் சீராக்கிக் கொள்வீர்கள். ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு அனைத்துக் காரியங்களையும் வெற்றியுடன் முடிக்கும் நேரம் இது.

8ஆம் இடத்தில் குரு பார்வை பதிவதால் இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு உருவாகும். தொழில் வளர்ச்சியில் தொல்லை தந்தவர்கள் விலகுவர். இடையூறு சக்திகள் அகலும். வங்கிச் சேமிப்பில் கரைந்த பணத்தை ஈடுகட்டுவீர்கள். கைமாற்றாகக் கொடுத்த தொகை வந்து சேரும். அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வரும் வாய்ப்பும், அதை அணிந்து அழகு பார்க்கும் வாய்ப்பும் உருவாகும். பழைய இடங்களை கொடுத்துவிட்டுப் புதிய இடம் வாங்குவீர்கள். 10ஆம் இடத்தை குரு பார்க்கும் பொழுது செய்யும் தொழிலில் இலாபம் கிடைக்கும். திடீர் வரவுகளும் வந்து சேரலாம். காரியங்களைக் கைகூட வைப்பது குருவின் பார்வைதான். எனவே வங்கிகளின் ஒத்துழைப்பும், செல்வந்தர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். தேசப்பற்றும், தெய்வப்பற்றும் மிக்க நீங்கள், தொழிலில் பற்று வைத்து தொகைகளைச் சேர்க்கும் நேரம் இது. கடந்த காலத்தைக் காட்டிலும் கணிசமான தொகை கைக்கு வந்து சேரும்.

குரு, சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை): எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். தொலைபேசி வாயிலாக நெஞ்சம் மகிழும் தகவல் வந்து சேரும். அரசியல் செல்வாக்கு மேலோங்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களால் ஆதாயம் கிடைக்கும். அதிக அளவில் யோகத்தை வழங்கும் நேரம் இது.

குரு, சந்திர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை): விரயங்கள் கூடும். விழிப்புணர்ச்சி அதிகம் தேவை. பயணங்கள் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசுபவர்கள் பாதை மாறிச் செல்வர்.

(தொடரும்)

சி.சக்திகிரீவன்

# திருமுருகாற்றுப்படையை ஓதி சிறைவாழ்வை உடைத்தெறிவோம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாக்காலத்தில் திருமுருகாற்றுப்படையை ஓதி தமிழர் தம் சிறைவாழ்வை உடைத்தெறிவோம். சிவபூஜையில் தவறியவர்களையும் முருக வழிபாடு காத்தருளும்.

சிவாகமங்கள் சிவபூஜா காரியத்தை விதந்து போற்றி அதற்கான விதிமுறைகளையும் கூறுகின்றன. அவற்றைப் பேணுவோர் இகபரப் பேற்றைப் பெறுவரென்பதும், அவர்களுடைய இனபந்துக்களும் சுற்றத்தாரும் சிவலோக வாழ்வை மறுமையில் பெறுவர் என்பதும் சிவாகமங்களின் முடிவு.

எனினும் இவ்வுயரிய பூஜா காரியத்தைப் பலர் தவற விட்டு விடுகிறார்கள். முன்னொருகாலத்தில் சிவபூஜை தவறிய தொளாயிரத்து தொன்னூற்றொன்பது பேரைக் 'கற்கிமுகி' எனும் பிரமராக்கதம் (பூதம்) ஒரு மலைக்குகையில் அடைத்து வைத்திருந்தது. ஏனெனில் சிவபூஜை தவறிய ஆயிரம் பேர் வந்ததும் அவர்களை உண்பதற்காகவே இந்த ஏற்பாடு. மதுரைக் கணக்கனார் மகன் நக்கீரரும் சிவ பூசையில் தவறியதால் மலைக்குகைச் சிறைக் கூண்டினுள் தள்ளிவிடப்பட்டார். இவர்களை உண்ணும் நேரம் வந்துவிட்டது என்ற மகிழ்வோடு கற்கிமுகி நீராடச் சென்றுவிட்டது. அப்போ அங்கிருந்த ஏனைய தொளாயிரத்து தொன்னூற்றொன்பது பேரும் நக்கீரரைப் பார்த்துக் கோபமடைந்து உம்மால் எங்கள் உயிர் போகப் போகிறது என்று தமது வரலாற்றைக் கூறினர். இதைக் கேட்ட நக்கீரர் முருகப்பெருமானைத் தியானித்துத் திருமுருகாற்றுப்படையைப் பாடினார். நீராடச் சென்ற பூதம் வேல்பட்டழிந்தது. சிறைக்குகை உடைந்தது. அனைவரும் விடுதலை பெற்றனர். எமக்கு துன்பங்கள் ஏற்படும் போது திருமுருகாற்றுப்படையைப் பாடிப் பரவின் அத்துன்பங்கள் இல்லாதொழியும் என்பது துணிவு.

திருமுருகாற்றுப்டை என்பது ஜீவன் முத்தர் ஒருவர் பேரின்பத்தை நாடி முருகக் கடவுளிடம் ஆற்றுப்படுத்துவதே. முருகப்பெருமான் சிறப்பாக எழுந்தருளிய திருத்தலங்களான திருப் பரங்குன்றம் திருசீரலைவாய் (திருச்செந்தூர்) ஆவினன் குடி (பழனி அடிவாரம்) திருவேரகம் (சுவாமிமலை) குன்று தோறாடல் (திருத்தணி) பழமுதிர்ச் சோலை என்பவை மீது பாடப்பட்டபெற்றவை. ஆறுபடை வீடெனப் போற்றப்படுபவையும் இவையே.

**திருப்பரங்குன்றம்**

இது சமயாச்சாரியர்களால் பாடப்பெற்ற 14 சிவஸ்தலங்களில் ஒன்றாகும். முருகப் பெருமான் சூரபன்மாவுடன் போர்புரிந்து வென்று அவனை ஆட்கொண்டு தேவசேனைகளுக்கெல்லா நல்வாழ்வளித்தபின், தேவர்களின் வேண்டுதல்களுக்கு இணங்க தன்னிடமிருந்து பிரிந்து இந்திராணி காவலில் தேவலோகத்தில் ஐராவதம் எனும் யானையினால் வளர்க்கப்பெற்ற தெய்வயானை என்னும் பெயரையுடைய அம்மையாரை மணம் புரிந்து எழுந்தருளிய தலமும் இதுவே.

**திருச்சீரலைவாய்ள**

எத்தனையோ யுகங்களாக கடலின் கரையில் இருந்து அலைகளால் மோதப்பட்டும் சிறிது கூட அழிவில்லாது இருக்கும் தலம்–முருகப் பெருமான் சூரபன்மாவைச் சங்கரித்த பின் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூசித்த தலமும் இதுவே.

**திருவாவினன் குடி( பழனி அடிவாரம்)**

பழனியின் அடிவாரத்தில் அமைந்துள்ளதால் பலர் திவாவினன் குடியையே பழனி என்று கூறுவதுமுண்டு. பழனி, திருவாவினன் குடி ஆகிய இந்தத் தலங்கள் மீதும் அருணகிரி நாதர் திருப்புகழ் பாடியதிலிருந்து இவ்வுண்மை நன்கு புலனாகும். இது பழனி மலை மீதுள்ள தலத்தைக் குறிக்கும்.

**திருவேரகம்**

இது சோழ நாட்டில் கும்பகோணத்துக்கு அண்மையிலுள்ள சுவாமிமலை என்பதாகும். இங்கே சிவபிரானுக்கு முருகப்பெருமான் பிரணவோபதேசம் செய்து சுவாமி நாதர் ஆனமை சிறப்பம்சமாகும். இத்தலம் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார்.



**குன்றுதோறாடல் (திருத்தணி)**

முருகப் பெருமான் சூரபன்மாவுடன் போர்புரிந்து அதனாலுண்டான கோபம் தணிந்து அமர்ந்த இடமே செருத்தணி திருத்தணியானது இங்கு முருகப் பெருமான் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்துப் பேறு பெற்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.மல்லிகா

# போதைக்கு எதிரான போராட்டத்தில்

## வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்

போதைப்பொருள் சமூகத்தை அழிக்கும் ஒரு கொலைகாரனைப்போன்றது. அனைத்து வகையான நோய்களுக்கும் முன்னோடியாக இருப்பது. இப்பாவனையை நாட்டினின்றும் முற்றாக ஒழிப்பதற்கு ஜனாதிபதியின் தேசிய போதைப்பொருள் ஒழிப்புச் செயற்றிட்டம் கைகொடுக்கின்றது. இந்த வகையில் போதைப்பொருள், புகைப்பொருள், மதுபானப் பாவனைகளுக்கெதிராக வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் கடந்த 27ஆம் திகதி சங்கானை பேருந்து நிலையத்தில் ஒருநாள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை மேற்கொண்டிருந்தனர். இப்போராட்டத்தினை வலி.மேற்கு-சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன் தொடக்கிவைத்தார்.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமானது சமாதானம், சகோதரத்துவம், நல்லொழுக்கம் என்பனவற்றைச் சமூகத்திற் கட்டியெழுப்புவதற்கு அரும்பாடுபட்டு வருகின்றது. இந்த மூன்றும் மலர வேண்டுமென்றால், புகைப்பொருள்மற்றும்போதைப்பொருள் பாவனை சமூகத்தில் இருக்கக் கூடாது. இதனைக் கருத்திற் கொண்டு, சமூக மட்டத்திலும் பாடசாலை மட்டங்களிலும் இது குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளில் சம்மேளனம் ஈடுபட்டு வருகின்றது.

இதேவேளை, போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவது என்ற நோக்கத்துடன் ஆண்டுதோறும் ஜூன் 26ஆம் திகதி சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சட்டவிரோத கடத்தலைத் தடுக்கும் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. அதேநேரம், போதைப்பொருள்களைப் பயன்படுத்துதல், போதைப்பொருள்களைக் கடத்துதல், போதைப்பொருள் விற்பனை ஆகியவற்றை ஒழிக்கக் கடுமையான சட்டங்கள் மூலம் அனைத்து நாடுகளும் பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகின்றன. ஆனாலும், இதன் பயன்பாடு அதிகரிக்கின்றதே தவிர குறையவில்லை. தினமும் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் உலகில் ஆங்காங்கே நடக்கின்றன. புது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போதைப்பொருள்களைக் கும்பல் கடத்துகிறது. இதற்கு இலங்கைத் தீவும் விதிவிலக்கல்ல.

இத்தினத்தில், இதுகுறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஊட்டுவதற்காக வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டங்களை நடத்தியும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீங்குகள் குறித்த துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்தும் அரும்பணியாற்றுகின்றது.

### சமூக அவலம்

உலகளவில் 15- 40 வயது வரையானோரே இந்தப் போதைப் பொருளுக்கு அதிகளவில் அடிமையாகின்றனர் என்று ஆய்வுகள்கூறுகின்றன. இவ்வாறுபோதைப் பொருளுக்கு அடிமையாவோர் தம்மை மாத்திரமன்றி, தாம் சார்ந்திருக்கும் குடும்பத்தையும் சீரழிக்கின்றனர். இதிலும் ஜீரணிக்க முடியாத விடயமென்னவென்றால், பாடசாலை மாணவர்கள் இதற்கு அடிமையாவதே. இவர்களுக்குப் போதிய விழிப்புணர்வு வழங்கி, இதனின்றும் அவர்களை மீட்டெடுக்காத பட்சத்தில் எமது சமூகம் அவலத்தின் உச்சிக்குச் சென்றுவிடும்.

இதனைக் கருத்திற்கொண்டு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் வடபிராந்தியத்தில் முன்னெடுத்துவரும் இப்பணியானது காலத்தின் தேவை கருதிய ஒன்று. பொருளாதார நெருக்கீடுகளின் மத்தியிலும் இவர்கள் இப்பணியினைத் தொடர்ந்து வருவது பாராட்டத்தக்க விடயம். இந்த நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களும் தம்மை அர்ப்பணித்துச் செயற்படுவதும் மெச்சத்தக்கது.

இப்பணியினை இன்று நேற்றல்ல, 1972 ஆம் ஆண்டிலிருந்தே இச்சம்மேளனம் மேற்கொண்டுவருகிறது. இதிலும், நாளைய சமூகத்தைத் தாங்கி நிற்கும் தூண்களான மாணவர்களை இலக்கு வைத்துப் பாடசாலைகளிலும் கிராம மட்டங்களில் வீட்டுத் தரிசிப்பை மேற்கொண்டும் சம்மேளனம் அளப்பரிய சேவை ஆற்றுகின்றது. போதைப் பொருள்ஒழிப்பு வாரத்தில், பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் இவர்களுடன் இணைந்து பணியாற்றுவது இவ்விடத்தில் சுட்டத்தக்கது.






> போதை என்பது ஒருவித நோய் என்று மனோவியல் மருத்துவர்கள் கூறுகின்றனர். மது, ஊக்க மருந்து, கஞ்சா, கொக்கேயின், புகையிலை, சிகரட் மற்றும் வலி நிவாரணிகள் அனைத்துமே போதையை ஏற்படுத்தக்கூடியவை. இதனால் எண்ணற்ற உடல் உபாதைகளுக்கு முகங்கொடுப்பதுடன், ஈற்றில் மரணத்தையும் விலை கொடுத்து வாங்குகின்றனர்.

மேலும், வேள்ட்விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் வலி.மேற்கு உட்பட யாழ். மாவட்டத்தில் ஏராளமான போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்வுகளைச் சம்மேளனம் கடந்த வருடங்களில் மேற்கொண்டு வந்தது. இன்றும் செய்து வருகின்றது. இந்த நிகழ்வுகளினூடாகச் சமூகத்தில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையும் இவ்விடத்தில் சுட்டத்தக்கது. சமூக நலன்கருதி இவர்கள் ஆற்றி வரும் இந்தப் பணி உண்மையில் பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

### ஆட்டம் காணும் ஆணிவேர்கள்

ஒரு குடும்பத்தை எடுத்தோமென்றால், அங்கே அதன் ஆணிவேராக ஆண்கள் தான் இருப்பர். அவர் குடும்பத் தலைவனாகவோ, மகனாகவோ, வேறு உறவாகவோ இருக்கலாம். இவர்கள் நன்றாக இருக்கும் வரை தான் அக்குடும்பமும் நலமாக இருக்கும். ஆனால், சமகாலத்தில் இனிய இல்லங்களைச் சீர்குலைக்கும் அரக்கனாக இந்தப் போதைப்பொருள் உள்ளமை வருத்தமளிக்கிறது. மதுபானம், மதுசாரம், கஞ்சா, ஹெரோயின், அபின் முதலான பானங்களுக்கும் சுருட்டு, பீடி, சிகரெட் போன்ற புகைப் பொருள்களுக்கும் அடிமையாகும் ஆண்களால் அவர்களின் அழகான இல்லங்கள் ஆட்டம் காண்கின்றன.

குடிப்பவர்கள் நடிப்பவர்கள் என்ற கற்பிதம் சமூகத்தில் இருந்தாலும், உண்மையில் ஹெரோயின் போன்ற போதைப் பொருள்களுக்கு அடிமையாவோர் தங்கள் நிலையை மறந்து தாம் செய்வது இன்னதென்று அறியாது செயற்படுகின்றனர். சிலவேளைகளில் தாம் செய்யும் தொழில்களை இழக்கவும் செய்கின்றனர். அதேபோன்று, மனைவி பிள்ளைகளை அடிப்பது, தகாத வார்த்தைகளால் அவர்களைப் பேசுவது உள்ளிட்ட அரங்கேற்றங்களையும் இல்லங்களில் நடத்துகின்றனர். இவர்களை இலக்கு வைத்தும், சம்மேளனம் தம் பணியினை மேற்கொண்டு வருகின்றது. இதில் வெற்றியும் கண்டுள்ளது.

### போதையும் ஒரு நோயே

போதை என்பது ஒருவித நோய் என்று மனோவியல் மருத்துவர்கள் கூறுகின்றனர். மது, ஊக்க மருந்து, கஞ்சா, கொக்கேயின், புகையிலை, சிகரெட் மற்றும் வலி நிவாரணிகள் அனைத்துமே போதையை ஏற்படுத்தக்கூடியவை. இதனால் எண்ணற்ற உடல் உபாதைகளுக்கு முகங்கொடுப்பதுடன், ஈற்றில் மரணத்தையும் விலை கொடுத்து வாங்குகின்றனர்.

மேற்குறிப்பிட்ட போதைப்பொருள்கள் இரசாயனம் சார்ந்தவை. இதேபோன்று இணையம் சார்ந்த போதையும் எம் சமூகத்தில் இன்று பரவலாக உள்ளமை துயரளிக்கிறது. இதற்கு அடிமையாவோரும் தம் எதிர்காலத்தைத் தொலைத்து, கேள்விக்குறியாக வாழ்ந்து வருகின்றனர். இதிலும், சமூக வலைத்தளங்களான முகநூல், டுவிட்டர், வைபர், வாட்ஸ்அப் போன்றன முற்று முழுதாக பாவனையாளர்களைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுடன், அவர்களை இயந்திர மனிதர்களாகவும் மாற்றிவிடுகின்றன. இவ்வாறான இணையப் போதைக்கு அடிமையாகும் நபர்கள், ஏதோ வேற்றுக் கிரகத்தில் வாழ்வது போன்ற உணர்வில் நடமாடுகின்றனர். மனிதப் பண்புகளைத் தொலைத்து, வாழ்வியல் நெறிகளை கலைத்து வாழ்கின்றனர். இதனால் அநேகமான குடும்பங்கள் மணமுறிவுகளுக்கு உட்பட்டு வருவது வெள்ளிடை மலை.

ஆதலால், இரசாயணப் போதைப்பொருள் பாவனைக்கெதிராகக் குரல்கொடுத்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அதேநேரம், இணையப் போதைக்கு எதிராகவும் குரல் கொடுத்து விழிப்புணர்வுகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவை கருதிய செயல். இதனையும் சமூக நலன்விரும்பிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று இவ்விடத்தில் குறிப்பிடுகிறேன்.

### *விருந்தினர் உரைகள் -*

***அ.சோதிநாதன்,*** *பிரதேச செயலர்,வலி. மேற்கு.*

போதைப்பொருள் பாவனையில் யாழ். மாவட்டம் முதலிடம் வகிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இது வருத்தமளிக்கும் விடயம். இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். இந்த விடயத்தில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் முனைப்புடன் செயற்படுவது பாராட்டத்தக்க ஒன்று- என்றார்.

***சுகாதார வைத்திய அதிகாரி, சங்கானை.***

போதைப்பொருள் பாவனையால் உடம்பில் பல நோய்கள் ஏற்படுகின்றன. இதனால் பல உடல் உறுப்புக்கள் பாதிக்கப்படுகின்றன. இவற்றைச் சமூகத்தில் விற்பனை செய்வோருக்கெதிராகக் கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இந்த நேரத்தில், வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்தை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்- என்றார்.

***ஆளுநர், வடமாகாணம்.***

போராட்டத்தில் பங்குபற்றியவர்களுக்குக் குளிர்பானம் வழங்கி வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மாலை 4 மணிக்கு நிகழ்வை நிறைவுசெய்து வைத்து உரையாற்றுகையில்,

போதைப்பொருள் பாவனையானது இன்றைய சமூகத்தில் ஒரு தொற்றுநோய் போன்று பரவி வருகின்றது. இதற்கெதிரான செயற்றிட்டங்களை ஜனாதிபதியின் போதைப்பொருள் ஒழிப்பு செயலணி நாடளாவிய ரீதியில் மேற்கொண்டு வருகின்றது. இது இன்றைய காலத்தின் கட்டாயம். இவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்- என்றார்.

**செ.குமாரசிங்கம்,** செயலாளர்,வ.பி.ந.சம்மேளனம்.

போருக்குப் பின்னரான இலங்கைத் தீவில் அதிகளவான குற்றச்செயல்கள் ஏற்பட்டு வருகின்றன. இதற்குக்காரணம்- அபரிமிதமான போதைப்பொருள் பாவனையே. வாள் வெட்டுச் சம்பவங்கள், கொலைகள், வன்புணர்வுகள், குடும்பப் பிரிவுகள் என்று அனைத்திற்கும் காரணமே இப்போதைப் பொருள் பாவனைதான் - என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வழிப்போக்கனின் குறும்புத்தனம்

இரண்டு நண்பர்கள் சேர்ந்து பயணம் செய்தார்கள். அப்போது ஒரு கோமுட்டியின் வீட்டுத் திண்ணையில் இருந்து இளைப்பாறினார்கள்.

அந்த வீட்டுக்காரனும் அவன் மனைவியும் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்திப் பிரியமாக இருந்தனர்.

வழிப் போக்கர்களில் ஒருவன். "அந்தத் தம்பதிகள் எவ்வளவு ஒற்றுமையாக இருக்கிறார்கள் பார்த்தாயா?" என்று வியந்து கூறினான்.

"அவர்களுடைய ஒற்றுமையை நான் வேறுபடுத்திக் காட்டுகிறேன் பார்!" என்று வீம்பாகச் சொன்னான் மற்றொருவன்.

உடனே அவன் ஞானியைப் போல் பேசத் தொடங்கினான். அவனுடைய பேச்சைக் கேட்டதும் கணவனும் மனைவியும் அவனை உபசரித்தனர்.

பிறகு கணவன் வெளியே போயிருந்த நேரத்தில் அவனுடைய மனைவியிடம் "அம்மா நீ நல்ல பதிவிரதை! ஐயோ! உத்தமியான உனக்கு, முன் பிறவியில் உப்புக் குறவனாயிருந்தவன் இப்போது கணவனாக வாய்த்திருக்கிறானே" என்று வருத்தத்தோடு சொன்னான் ஞானியைப் போல் பேசியவன்.

"அதை நான் எப்படி அறிந்து கொள்வது?" என்று அவள் கேட்டாள்.

"உன் கணவன் தூங்கும் போது அவன் காலை நக்கிப் பார் உப்புக் கரிக்கும்" என்றான் அவன். அவள் இரவு நேரத்துக்காகக் காத்திருந்தாள்.

மனைவி வீட்டினுள் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது கணவனிடம் "நீர் சாதுவான நல்ல மனிதர். முன் பிறவியில் நாயாக இருந்தவள் உமக்கு மனைவியாக வாய்த்திருக்கிறாளே; பரிதாபம்!" என்று வருத்தத்தோடு சொன்னான்.

"அதை எவ்வாறு நான் அறிந்து கொள்ள முடியும்?" என்று கேட்டான் கணவன்.

"இரவு தூங்குவது போல் நீ படுத்துக்கொள்; அவள் வந்து உம்முடைய காலை நக்குவாள்; பாரும்" என்றான்.

இரவு கணவன் படுத்திருந்தான். அவன் தூங்கி விட்டதாக எண்ணி அவன் காலை நக்கினாள் அவன் மனைவி.


அவன் உடன் "சீச்சி நாயே! என்று எட்டி உதைத்தான்" அவள் "உப்புக்காரன்" என்று பேசினாள். இருவருக்கும் சச்சரவு மூண்டது.



## வண்ணத்துப் பூச்சி



வட்டப்பூச்சி வட்டப்பூச்சி நீ
வண்ணத்துப் பூச்சி நீ
வண்டிலிருந்து வந்தவள் நீ
வண்ணத்துப் பூச்சி நீ
சட்டை நீயும் போடுவதில்லை
சாறி நீயும் கட்டுவதில்லை
அழகு மேனி உந்தன் மேனியிலே
உனக்கு அழகு தந்தது யாரோ
கொட்டும் மழையில் எங்கு
நீ வாழுகின்றாய்
குளிர்காலம் எங்கு
நீ ஓடுகின்றாய்
வட்டப்பூச்சி வட்டப்பூச்சி நீ
வண்ணத்துப் பூச்சி நீ





## வர்ணம் தீட்டுவோம் வாங்க...



## வரலாற்றில் இன்றைய தினம்

1675 - பிராங்கோ-டச் போர்; புனித ரோமானியப் பேரரசுப் படைகளால்பிரான்சியப்படைகள்தோற்கடிக்கப்பட்டன.

1920 - லத்வியா-சோவியத் அமைதி ஒப்பந்தத்தையடுத்து, லத்வியாவின் சுதந்திரத்துக்கான போர் முடிவுக்கு வந்தது.

1934 - அல்கற்றாஸ் தீவின் சமஷ்டி சிறைக்கு முதன்முதலாக சிவிலியன் சிறைக் கைதிகள் கொண்டு வரப்பட்டனர்.

1949 - பலஸ்தீன விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் 72 மற்றும் 73 ஆவது தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

1952 - ஜோர்தான் அரசராக ஹுசைன் பின் தலால் அறிவிக்கப்பட்டார்.

1959 - ரஷ்யாவின் இரண்டாவது பெரிய சர்வதேச விமானத் தளமான ஷெயர் மெரிவோ திறந்து வைக்கப்பட்டது.

1960 - சாட் நாடு சுதந்திரம் பெற்றது.

1968 - பிரித்தானிய புகையிரதப் பாதையில் கடைசித் தடைவையாக, நீராவிப் புகையிரதம் ஓடவிடப்பட்டது.

1972 - வியட்நாம் போர்: அமெரிக்காவின் கடைசி தரைத் தாக்குதல் அணியும் தென் வியட்நாமிலிருந்து, விலகிக் கொண்டது.

1992 - அரசியல் விமர்சகர் தயான் ஜயதிலக, கொப்பேகடுவ வின் இறுதிச் சடங்கின்போது நையப்புடைக்கப்பட்டார்.
- பிரேமாவுக்கு ஆதரவான பிக்குகள் மீதும் கனத்தையில் தாக்குதல்.

1995 - அரசின் தீர்வு யோசனை இராணுவத் தீர்வை நியாயப்படுத்தும் முகமூடி என விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாடு குறித்து விளக்கம்.

2003 - ஆப்கானிஸ்தானில் அமைதி காக்கும் படையாக நேட்டோ கட்டளைப் பொறுப்பேற்றது. 54 ஆண்டுகால வரலாற்றில் ஐரோப்பாவுக்கு வெளியே முதன் முதலாகத் தனது நடவடிக்கையை நேட்டோ பதிவு செய்தது.

2005 - எந்த எதிர்ப்பு வந்தாலும் பொதுக் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படும் என மகாவலியமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு. ஜே.வி.பியின் அச்சுறுத்தலுக்கு அடிபணியோம் எனவும் அறிவிப்பு.
- ஜனாதிபதி சந்திரிகாவின் சுயசரிதையை எழுதியவருக்கு 4கோடி ரூபா வழங்க அங்கீகரித்தது யார் என சபையில் ரவி கருணாநாயக்க கேள்வி.

2006 - எண்ணெய் தாங்கிக் கப்பல் M/T சோலர் 1, பிலிப்பைன்ஸ் நிக்ரொஸ் தீவுக்கு அப்பால் மூழ்கியதில் நாட்டின் மிக மோசமான எண்ணெய் கசிவு ஏற்பட்டது.
- மாவிலாற்றில் மோதல் நிலை தணிவு. சிவிலியன்கள் மீதான தாக்குதலின் தீவிரமும் குறைவு.
- பலாலி பெருந் தளம் பீது புலிகளின் விமானம் நொக்ட் வீச்சு. ஊடகங்களில் பரபரப்புத் தகவல்! அரசு தரப்பு மௌனம்!

2012 - ஈரான் டப்றிஷ்சில் ஏற்பட்ட இரட்டை நிலநடுக்கத்தில், 36 பேர் உயிரிழக்க 3000 பேர் வரை காயமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அ.அச்சுதன்

தேவர்களின் 'குரு' எனப் போற்றுதலுக்குரியவர், ஓர் இராசியில் ஓராண்டு இருப்பவர் 'வியாழபகவான்' இவர் சூரியனைச் சுற்றிவர (ஒரு முறை) சுமார் பன்னிரண்டு வருடங்கள் எடுத்துக்கொள்பவர். செல்வத்தின் அதிபதி, குழந்தைச் செல்வத்தின் காரகர்.

உயர் கல்வியைத் தருபவர், நீதிபதிகளை உருவாக்குபவர், வங்கி அதிகாரிகளை உருவாக்குபவர், பொருளாதார மேதையாக, நிதி மேலாண்மையாளராக, அமைச்சராக ஆவதற்கும் மூல காரணமானவர் குருபகவானே. எதிர்பாராத செல்வம், கப்பல்துறை, வாணிபம், அயல் நாட்டுத் தொடர்புடைய வியாபாரம், தங்கம், வைர வியாபாரம், வழக்கறிஞர், கமிசன், போதகர், மருத்துவம், ஆயுள் காப்பீட்டுக் கழகம், அற நிலையத்துறை, ஆகியவற்றை ஏற்படுத்தும் காரகர்.

நவக் கிரகங்களிலேயே நற்சுபக் கிரகம் என்ற பெயரைப் பெற்றவர், பெரியோரை மதிப்பவர், நீதிக்குத் தலை வணங்குபவர், கடமையை தவறாது செய்பவர், உண்மையையே பேசவைப்பவர். இவரது அனுகூலம் பெற்றவர்கள் ஆட்சி, உச்சம் அடைவார்கள், ஆட்சியுச்சம் அடைந்த ஜாத கர்களுக்கு குரு பகவானால் ஓரளவாவது இப்பேறு கிடைக்கும் என்று நம்பலாம். 'குரு' பாதிக்கப்படுமானால் சடங்கு சாஸ்திரங்களில் நம்பிக்கையற்றவர்களாகவும், மனம் போன போக்கிலேயே நடப்பவர்களாகவும், நாஸ்தீக வாதிகளாகவும், அதிக செலவாளிகளாகவும், சூதாட்டத்தில் தோல்வியடைந்தவர்களாகவும், குழந்தைகளால் கவலை பெறுபவர்களாகவும், பற்பல இழப்புக்களை எதிர்கொள்பவர்களாகவும் விளங்குவார்கள் என ஜோதிடக் கருத்தில் கூறப்பட்டுள்ளது.

குரு பகவான் கோசார ரீதியில் சஞ்சாரம் செய்யும்போது சுபஸ்தானங்களாக 2, 5, 7, 9, 11ஆம் இடங்கள் நோக்கப்படுகின்றன. இந்த ஸ்தானங்களில் குரு தங்கி நிற்கும் போது அந்த ஜாதகர்களுக்கு குரு பலம் ஏற்படுகின்றது. இதனால் மங்கல காரியங்கள் நிகழ வாய்ப்பு வரும். லக்கினம் எதுவானாலும் குரு தானிருக்கும் இடத்திலிருந்து 5-7-9ஆம் இடங்களைப் பார்வை செய்வார். மகரம், மீனம், இடபம் இராசியினருக்கு குரு பார்வைப் பாக்கியமுண்டு. இதனால் குரு பார்வையில் தோசங்கள் நீங்கி கோடி நன்மைகள் கைகூடி வரும் என்று கூறப்பட்டுள்ளது.

இப்பேர்ப்பட்ட 'குரு'வானவர் கடந்த ஒரு வருட காலமாக சிம்ம இராசியில் வாசம் செய்துவிட்டுத் தற்போது கன்னி இராசி வீட்டுக்கு இடம் மாறியுள்ளார். கன்னி இராசி வீடு குரு வுக்கு நட்பு வீடாகும்.

மேற்குறிப்பிட்ட சுழற்சியின் பயனாக அதிக மழை, விளைவு மிகுதி, நூல் புடைவை மலிவு, உப்பு, பருத்தி, நெய் குறைவு என்பன உண்டாம் என நாட்டு நடப்பில் எதிர்வு கூறியிருக்கின்றது யாழ்ப்பாணக் கொக்குவிலில் இருந்து வெளிவரும், வாக்கிய பஞ்சாங்கம். இதேவேளை - யாழ்ப்பாணம் மட்டுவிலில் இருந்து வெளிவரும் திருக்கணித பஞ்சாங்கக் கணிப்பில் 11ஆம் திகதியே குரு பகவான் நட்பு வீடான சிம்மத்திலிருந்து கன்னி இராசி வீட்டுக்கு இடம்மாறியுள்ளார். இந்தப் பஞ்சாங்கத்தில் கன்னி இராசி குருவுக்கு பகை வீடாகவுள்ளது. நாட்டு நடப்பு பலன்படி தேசம் விசேட நற்பலன்களை எதிர் கொள்ளக்கூடியதாக இருக்குமாம் என்றும் கீழ் குறிப்பிடும் இராசியில் ஜனனித்த ஜாதகர்களுக்கு வியாழ பகவானது தோசம் உண்டாகலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கன்னி, தனுசு, கும்பம், கடகம் ஆகிய இராசிகளைச் சார்ந்த உத்தரம் 2, 3, 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதம், மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம், அவிட்டம் 3 4 ஆம் பாதம் சதயம் பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதம், புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரக்காரர்கள் அவசியம் வியாழக்கிழமை விரதம் மேற்கொண்டு மஞ்சள் மலர் அல்லது முல்லைப் பூ, மஞ்சள் பட்டு, கடலை தானம் வழங்கி தட்சணாமூர்த்தி வழிபாடியற்றிவர குருதோசம் குறைவடையுமென்று கூறப்பட்டிருக்கின்றது.

நமது பகுதிகளில் பல ஆலயங்களில் நவக்கிரக கோயில்கள் உள்ளன. அங்கு சென்று பரிகாரங்களைச் செய்து பலன் பெறலாம். முடியுமானவர்கள் குருவின் தோத்திரமான

' குண மிகு வியாழ பகவானே
மனமுடன் வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பர குரு நேசா
கிரக தோசமின்றி கடாட்சித் தருள்வாய்'

என ஆகக் குறைந்தது ஒன்பது தடவையாவது மனமுருகித் துதிக்க குருவின் திருவருள் கூடிவரும். அல்லது குரு காயத்திரி மந்திரத்தை ஒன்பது முறை ஓதி இறைவனை வழிபாடு செய்தால் நிச்சயம் குருவால் உண்டாகும் அசுப பலன்கள் குறையும். குருவே போற்றி, குருவே சரணம், சரணம், சரணம், குரு பகவானே சரணம், குறைகள் தீரும். நம்புங்கள் குரு பகவான் நல்லதே நல்குவார்.



# வட மாகாணத்தில் வேண்டும் 'சின்தற்றிக்'

கால்பந்தாட்டம், துடுப்பாட்டம் போன்றவற்றில் மட்டுமல்லாமல் தேசியமட்ட தடகளப் போட்டிகளிலும் படிப்படியாக பிரதிநிதித்துவத்தைப்பெற ஆரம்பித்துள்ளது வடமாகாணம். ஆனால் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் போன்ற குறுந்தூர ஓட்டப்போட்டிகளில் தேசியத்தில் வடக்குக்குப் பதக்கம் கிடைப்பதென்பது மிக அரிதான விடயமாகவும் நிறைவேறாத கனவாகவும் உள்ளது.

உயரம்பாய்தல், கோலூன்றிப் பாய்தல், தடைதாண்டல் போன்றவற்றில் வடபகுதி வீர, வீராங்கனைகள் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிகித்துவம் செய்த கே.நெப்தலி ஜொய்சன், மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.அனித்தா இருவரும் கோலூன்றிப் பாய்தலில் கடந்த வருடம் பதக்கங்களை வேட்டையாடியமை தக்க சான்று என்றால் மிகையல்ல. ஆனால், குறுந்தூர ஓட்டங்களில் பதக்கங்கள் கிடைக்காமைக்கு என்ன காரணம் என்று அலசி ஆராய்ந்தால் பிரதான விடயமாக அமைவது சின்தற்றிக் (செயற்கை ஓடுதளம்) இல்லாதமை என்பது அம்பலமாகும்.

தேசியமட்டப் போட்டிகள் 'சின்தற்றிக்' ஓடு பாதையிலேயே நடைபெறுகின்றன. ஆனால், வடபகுதி வீர, வீராங்கனைகள் தமது பயிற்சிகளை கற்களுக்குள்ளும், புற்களுக்குள்ளுமே மேற்கொள்கின்றனர். அவர்களின் பயிற்சிக்கான வாய்ப்புக்கள் குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பயிற்சிகளை மேற்கொள்வதும் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடனான சூழ்நிலையில் தான். இதற்கு முன்னர் கண்ணால் கண்டிராத ஓர் அரங்கில் குறுந்தூர ஓட்டங்களில் வடக்கு வீர, வீராங்கனைகளின் கனவுகள் எவ்வாறு மெய்ப்படும்?

இதில் சிரிப்புக்குரிய விடயம் என்னவென்றால், சில வீர, வீராங்கனைகள் தேசியமட்ட போட்டிகளுக்காகச் செல்கின்றபோதுதான், 'சின்தற்றிக்' ஓடுதளங்கள் என்றால் என்ன என்று அறிந்து கொள்கிறார்கள். தமது போட்டிகளுக்கான நேரத்தில்தான் 'சின்தற்றிக்' ஒரு தளத்தில் கால் பதிக்கிறார்கள். இந்த நிலைமை மாற்றம் பெறவேண்டும். எமது வீர, வீராங்கனைகளுக்கான பிரதிநிதிகள் அரசின் கைக்கூலிகளாகவும் பத்திரிகைகளின் புகைப்படங்களுக்கு முகம் கொடுப்பவர்களாகவும் இராது, அவர்களின் தேவைகளை உயர்மட்டத்துக்கு எடுத்துச் சென்று, எடுத்துக்கூறி அவற்றை நிறைவேற்றவேண்டும். இந்திய அரசின் நிதி உதவியுடன் யாழ். துரையப்பா விளையாட்டரங்கு அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. வடிகால் அமைப்புக்கள், மின்னொளி வசதிகள், குளிரூட்டப்பட்ட அறைகள், புற்தரைகளின் பராமரிப்பு என்பன சிறப்பாக அமைந்துள்ளன. மைதானம் புனரமைத்துத் தரப்பட்டமை மிகமிகப் பாராட்டப்பட வேண்டியதொன்று. ஆனால், புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கும்போது பன்னாட்டுத் தரத்திலான மைதானமே அமைக்கப்படும் என்று அறிக்கை விடப்பட்டது. பிராதன கட்டுமானத்திட்டங்களில் ஒன்றாகச் சின்தற்றிக் குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போதுவரை துரையப்பாவில் 'சின்தற்றிக்' இல்லை.

பன்னாட்டுத் தடகளத் தொடர்களில் புற்களுக்குள்தான் குறுந்தூர ஓட்டம் நடைபெறுகிறதா? மைதானம் தரப்படும் போது முதுகை வளைத்து கரத்தைக் கூப்பி வாங்கிவிட்டார்கள் எம்மவர்கள். தடகளத்துக்குரிய மைதானம் என்ற வகையில், அந்த மைதானத்தில் ஏதாவது உள்ளதா? நீளம்பாய்தல், உயரம் பாய்தல் போன்றவற்றுக்கான பயிற்சியை வீட்டு முற்றங்களிலும் மேற்கொள்ள முடியும். இவ்வாறான ஓர் அரைகுறைப் புனரமைப்பு நடவடிக்கைக்கு இலங்கை -இந்தியா எனும் இரு நாட்டு அரசுகள் தலையிட வேண்டியதில்லையே.




...tion. noolaham... aavanaham...

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



**மேடம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள், புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள், ஆர்வத்துடன் படிப்பர்.

**இடபம்:** மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். அக்கம் பக்கத்தினருடன் இணக்கம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி இலக்கு முழுமையாகும். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்வு உண்டாகும்.

**மிதுனம்:** பொறுப்பை உணர்ந்து செயற்படுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். வருமானம் உயரும். அதிக விலையுள்ள பொருள்களை கவ னத்துடன் பாதுகாக்கவும்.

**கடகம்:** பிறருக்கு வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மாறுபட்ட சூழலால் பிரச்சினை உருவாகலாம். லாபம் சுமார். மனைவியின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும். உடல் நலனில் அக்கறை தேவை.

**சிங்கம்:** உடன்பிறந்தவர்களின் தேவைக்கு உதவுவீர்கள். உங்கள் மீதான சமூக மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில், மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். வருமானம் கூடும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**கன்னி:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபார நடைமுறை, சீராக இருக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** அன்றாட நிகழ்வுகள் இனிதாக அமையும். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். அரசியல்வாதிகளுக்கு. பதவி கிடைக்க யோகம் உண்டு.

**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. பெண்கள், ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** சுயநலம் கருதாமல் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப் பணி சிறப்பாக நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**மகரம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். கடந்த கால இனிய நிகழ்வை நண்பரிடம் பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். மனைவியின் அன்பை பெற்று மகிழ்வீர்கள்.

**கும்பம்:** அத்தியாவசியப் பணியை மறக்க நேரிடலாம், கவனம். தொழிலில், ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம். வாகன பயணத்தில் மிதவேகம் நல்லது.

**மீனம்:** விரக்தி மனப்பான்மை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், கூடுதல் பணிச்சுமை உருவாகும். லாபம் சுமார். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பாதுகாப்பு குறைந்த இடத்துக்குச் செல்ல வேண்டாம்.










வன்னி மகன் மணிகண்டன்

வாழ்வில் எவ்வளவு தடைகள் வந்தாலும் விடையாகி வந்துவிடுகிறாள் அன்னை.



# தலைகீழாகத் தொங்கும் நடிகை

திரிஷா தற்போது மோகினி என்ற படத்தில் நடித்து வருகிறார். கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள இந்தப் படத்தை மாதேஷ் இயக்கி வருகிறார். இவர் விஜய் நடிப்பில் வெளிவந்த மதுர படத்தை இயக்கியவர். இந்தப்படத்தில் திரிஷா, சமையல் கலை நிபுணராக நடிப்பது அனைவருக்கும் தெரிந்ததே.

இந்தப் படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு லண்டனில் நடந்து தற்போது முடிவடைந்துள்ளது. இந்நிலையில், அடுத்தக்கட்டப் படப்பிடிப்பை விரைவில் தாய்லாந்தில் தொடங்க விருக்கின்றனர். தாய்லாந்து படப்பிடிப்பில் திரிஷாவுக்கு சண்டைக் காட்சிகள் எல்லாம் உள்ளதாகக் கூறப்படுகிறது. உண்மையான சண்டை சாகச நடிகர்களுடன் கயிற்றில் தலைகீழாகத் தொங்கிய படியே இந்த சண்டைக் காட்சிகளைப் படமாக்க விருக்கிறார்களாம்.

இதற்காக தற்போது சென்னையில் திரிஷாவை தலைகீழாக தொங்கவிட்டு பயிற்சி கொடுத்து வருகிறார்களாம். டூப் போடாமல் இந்த சண்டைக்காட்சியில் நடிக்க திரிஷா முன்வந்ததாலேயே இந்த மாதிரியான பயிற்சிகளை அவருக்கு கொடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

**நீதிபதி:** இவ்வளவு கொலை நடக்குது... பொலிஸ் என்னதான் பண்ணிட்டிருந்தது?



ஹெல்மெட் போடாம வாறவங்ககிட்ட அபராதம் வாங்கிட்டு இருந்தோம் ஐயா!

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 6 | | | | |
| | 3 | | | | | 7 | 8 | |
| | 4 | 8 | | 2 | | | 6 | |
| 2 | | | 8 | 1 | | | 7 | |
| 5 | 9 | | | | | | | |
| 8 | | | 5 | | | 9 | | 1 |
| | | | 9 | | | | | |
| 4 | 5 | | | | | 6 | | |
| | | | | | | 4 | | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச்சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 4 | 7 | 5 | 9 | 1 | 6 | 3 |
| 5 | 9 | 1 | 3 | 8 | 6 | 4 | 7 | 2 |
| 6 | 7 | 3 | 1 | 4 | 2 | 8 | 5 | 9 |
| 1 | 5 | 9 | 4 | 6 | 7 | 2 | 3 | 8 |
| 8 | 6 | 7 | 2 | 3 | 1 | 9 | 4 | 5 |
| 4 | 3 | 2 | 8 | 9 | 5 | 7 | 1 | 6 |
| 9 | 1 | 6 | 5 | 7 | 8 | 3 | 2 | 4 |
| 3 | 2 | 5 | 9 | 1 | 4 | 6 | 8 | 7 |
| 7 | 4 | 8 | 6 | 2 | 3 | 5 | 9 | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 1000 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 600 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | – | – |
| சீலா | 300 | 400 | 400 | 600 | 500 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 500 | 450 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 350 | – | – | 450 | – | – |
| திரளி | 300 | 250 | 200 | 150 | 300 | 200 | 350 |
| நகரை | 250 | 350 | – | 250 | 400 | – | 370 |
| சூடை | 150 | 250 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | 300 | 400 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | 300 | 180 |
| மதனம் | 150 | 200 | 180 | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 70 | 80 | 200 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 500 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 400 | 300 | – |



# வாழைப்பூ கட்லெட்

### தேவையான பொருள்கள்

பெரிய வாழைப்பூ - 1
வெந்த உருளைக்கிழங்கு - 2
கடலை மாவு - 1 தேக்கரண்டி
பெரிய வெங்காயம் - 3
பச்சை மிளகாய் - 6
புளி - 1 சிறு உருண்டை
மிளகுத்தூள் - 1 தேக்கரண்டி
சீரகம் - 1 தேக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிது
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு


### செய்முறை:

வாழைப்பூவை ஒரு பாத்திரத்தில் அரிந்து போட்டு, புளியை தண்ணீர் விட்டுக் கரைத்து வாழைப்பூவை அரிந்து வைத்ததில் ஊற்றி நன்றாகக் கலக்கவேண்டும்.

மசித்த உருளைக் கிழங்கு, கடலைமா, நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், மிளகுத்தூள், கறிவேப்பிலை, சீரகம் முதலிய எல்லாவற்றையும் போட்டு நன்றாகப் பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக உருட்ட வேண்டும்.



சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டு காய்ந்ததும் உருண்டைகளைப் போட்டு வெந்ததும் எடுக்க வேண்டும். வாழைப்பூ கட்லெட் தயார்.



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 80 | 120 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 80 | 80 | 100 | 100 | 60–80 | 60 | 90 | 40 |
| கரட் | 100 | 120 | 120 | 160 | 120–140 | 120 | 110 | 120 |
| மரவள்ளி | 100 | 90 | 80 | 80 | 80–100 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 50 | 30 | 40 | 30 | 40–60 | 10 | 100 | 40 |
| பாகல் | 100 | 120 | 120 | 120 | 100–120 | 80 | 240 | 100 |
| கருணைக்கிழங்கு | 150 | 160 | 140 | – | 80–100 | 120 | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 85 | 100 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 80 | 80 | 70 | 80 | 90 | 60 |
| பூசணி | 70 | 60 | 80 | 80 | 60–70 | 80 | 70 | 90 |
| தக்காளி | 50 | 70 | 60 | 80 | 60–70 | 60 | 120 | 30 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 120 | 80–100 | 40 | 70 | 60 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 30 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 250 | 300 | 300 | 260 | 200 | 400 | 300 |
| புடோல் | 40 | 50 | 40 | 50 | 60 | 40 | 70 | 50 |
| கோவா | 100 | 100 | 120 | 140 | 120 | 160 | 90 | 100 |
| வெண்டி | 50 | 40 | 40 | 60 | 40–50 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 150 | 150 | 160 | 180 | 200–220 | 200 | 130 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 150 | 100–120 | 120 | 90 | 120 |
| தேங்காய் | 40 | 22 | 40 | 30 | 20–30 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 90–100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 80 | 122 | 100 | 100 | 100–120 | 120 | 120 | 80 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 160 | 220 | 160 | 180 | 240 | 200 | 130 |
| இராசவள்ளி | 160 | 200 | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 140 | 80 | 100–120 | 120 | 200 | 100 |



## காலத்துக்கு ஏற்ப உண்ண வேண்டிய உணவுகள்



கோடை காலத்தில் உடல் வெப்பம் அதிகமாக இருக்கும். இந்த நேரத்தில் பித்தம் நிறைந்த, காரம், புளிப்பு, எண்ணெய் போன்ற உணவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். இந்த உணவுகளால் பித்தமும், உடல் வெப்பமும் அதிகரிக்கும். இதனால், மூட்டுவலி, அரிப்பு, சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், முகத்தில் கட்டி, உடல் வலி போன்றவை ஏற்படும். கோடைக் காலத்தில், குளிர்ச்சி த்ரக்கூடிய உணவுகளான கேழ்வரகு, பச்சைப்பயறு, பாசிப்பருப்பு, நீர்க்காய்கள், கீரைகள், இளநீர், இஞ்சி ம்ற்றும் பச்சை மிளகாய் சேர்க்காத நீர்மோர் சாப்பிடலாம்.



குளிர் காலத்தில் செரிமான சக்தியின் ஆற்றல் அதிகமாக இருக்கும். பொங்கல், பூரி போன்ற எண்ணெய் நிறைந்த, செரிமானத்துக்கு நேரம் ஆகக்கூடிய உணவைச் சாப்பிட்டாலும் செரிக்கக்கூடிய ஆற்றல் உடலில் இருக்கும். நல்லெண்ணெய், பசு நெய் சேர்த்த உணவுகள் சாப்பிடலாம். இதனால் சரும வறட்சி இருக்காது. நீண்ட நேரத்துக்குப் பசிக்காத வகையில், நார்ச்சத்து நிறைந்த உணவுகளைச் சாப்பிடலாம்.

### நாளை

ஆடி-28
வெள்ளிக்கிழமை 12.08.2016
திதி: நவமி பி.ப.01.47 வரை
நட்சத்திரம்: அனுசம் மு.இ.07.57 வரை
[illegible]காலம்: 10.34-12.04 வரை
சுபநேரம்: 06.04-07.34 வரை
வரலக்ஷ்மி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புத்தம் புதிய
AVENGER
STREET 150

மிதமிஞ்சிடும் நம்பிக்கையுடன் சௌகரியமிக்க பயணத்தை அனுபவித்திடுங்கள்.



டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
PB270

75, ... 02. 0773-675508, 0777-668142, 0772-981010, 0114-700600 | 011 4 700 677 | info@dpmco.com | www.dpmco.com/www.dpg.lk

DPMC app google play store apple app store

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15வருடங்கள்

15 வருடங்கள் கடூழியச்சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 20 லட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டது.

தென்மராட்சியைச் சேர்ந்த குறித்த பெண், 2009ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் திகதி அவரது வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டு மைதானம் ஒன்றுக்கு அருகிலுள்ள பற்றைக்குள் 4 பேரால் கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கைதடியைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர். பாதிக்கப்பட்ட பெண்ணின் சாட்சியத்தின்படியும் ஏனைய விசாரணைகள் மூலமாகவும் குறித்த 4 பேரையும் சாவகச்சேரி நீதிவான் மன்றில் ஆரம்ப விசாரணைகள் நடத்தப்பட்டன.

அந்த வழக்கு சட்ட மா அதிபர் திணைக் களத்தினால் யாழ். மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது.

"பாதிக்கப்பட்ட இளம் பெண் வாய்பேச முடியாதவாராக இருந்தபோதும், தகவல்களை அவரால் பகிர்ந்து கொள்ள முடிந் ததை விசாரணை மூலமாக மன்று அவதானித்தது. பாதிக்கப்பட்ட இளம் பெண் எதிரிகள் 4 பேரையும் அவர்களது பெயர்களுடன் நேரடியாக அடையாளப்படுத்திச் சாட்சியமளித்தார். அவரை நிர்வாணமாக்கி வன்புர்ணர்நதுவிட்டு பின்னர் ஆடைகளை அணிவித்து அவரது வீட்டுக்கு அருகில் உள்ள பொதுமண்டபத்தில் விட்டுவிட்டு எதிரிகள் தப்பிச் சென்றுவிட்டனர். இளம் பெண்ணின் எதிர்காலத்தை எதிரிகள் நாசம் செய்துள்ளனர். இது அந்தப் பெண்ணின் குடும்பத்துக்கு சமூகத்தில் மதிப்புக் குறைவை ஏற்படுத்தக்கூடியதாக அமைகிறது" என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

இத்தகைய வழக்குகளைச் சாதாரண விடயமாகக் கருதமுடியாது என்று இந்திய உயர் நீதிமன்றம் முன்னர் தீர்ப்பளித்துள்ள வழக்கு ஒன்றையும் நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பில் சுட்டிக்காட்டினார்.

இந்த வழக்கில் எதிரிகள் நான்கு பேரும் குற்றம் புரிந்தமை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்தார்.

கைதடியைச்சேர்ந்தவர்களான தம்பிராசா ரஜனிகாந், பரமு தினேஸ்குமார், சிவலை கனகரட்ணம், நாகராசா ரகுநாதன் ஆகியோரே குற்றவாளிகள் என்று மேல்நீதிமன்றினால் நேற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டனர்.

குற்றத்துக்காக 4 பேருக்கும் தலா 15 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 4 பேரும் தலா 5 லட்சம் ரூபா வீதம் 20 லட்சம் ரூபாவை பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இழப்பீடாகச் செலுத்தவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது. இழப்பீடு செலுத்தத் தவறின் 4 பேரும் தலா 3 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும். நீதிமன்ற அபராதமாக தலா 25 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் தலா 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

குற்றவாளிகளின் மனைவிமார் மற்றும் உறவினர்கள் பாதிக்கப்பட்ட இளம் பெண்ணையோ அவரது குடும்பத்தினரையோ, அச்சுறுத்தவோ இடையூறு விளைவிக்கவோ கூடாது. அவர்கள் ஏதாவது முறைப்பாடு செய்தால் சாட்சிகளை மிரட்டிய குற்றச்சாட்டில் சாட்சிகள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்பாயும் என்று நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பை அறிவித்தார். (உ-வ-4)

## காணாமற்போனோர்

மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவரைவு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் நேற்று விரிவாக ஆராயப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், காணாமற்போனோர் விவகாரத்தைக் கையாள்வதற்கு தனிப்பணியகம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்த பின்னர், மேற்படி சட்டவரைவு முதலாம் வாசிப்புக்கென பிரதமரால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இன்று இரண்டாம் வாசிப்புமீதான விவாதம் ஆரம்பமாகி, நாளை வாக்கெடுப்பு இடம்பெற இருக்கின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நாளை வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் சிறப்புக் கூற்றொன்றை விடுக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## வித்தியா

சிவலோகநாதன் வித்தியா கடந்த வருடம் மே மாதம் 13ஆம் திகதி பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது, கடத்தப்பட்டுக் கூட்டு வன்புணர் வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அவரின் சடலம் பாழடைந்த வீட்டு வளாகத்துள் பற்றைகளுக்கு மத்தியில் மறுநாள் சடலமாக மீட்கப்பட்டது. இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் முதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினர். அதனைத் தொடர்ந்து சுவிஸ் குமார் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் ஊர்காவற் துறை நீதிவான் மன்றில் முற் படுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். சந்தேக நபர்கள் நீதிவான் மன்றினால் ஒரு வருடத்துக்கு மேலாக விளக்கமறியல் வைக்கப்பட்டனர். இதனால் அவர்களைப் பிணையில் விடுவிக்குமாறும் கோரப்பட்டது. எனினும் விளக்கமறியலை தொடர்ச்சியாக 3 மாதங்களுக்கு நீடிக்க அனுமதி தருமாறு யாழ். மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபர்திணைக் களத்தால் கோரப்பட்டது. அதன்படி கடந்த மே 8 ஆம் தவணை அவர்களுக்கான விளக்கமறியல் 3 மாதங்கள் நீடிக்கப்பட்டு வழக்கு நேற்று வரைஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. 9 சந்தேக நபர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி, வழக்குத் தொடர்பான பொலிஸாரின் விசாரணைகள் நிறைவடைந்து விட்டன. விசாரணை அறிக்கைகளை சட்ட மா அதிபர் திணைக்களம் பரிசீலிக்கிறது.

சந்தேகநபர்களின் விளக்கமறியலை நீடிக்குமாறு கோரி மன்றில் சமர்ப்பணம் செய்தார். இதன்போது 9 சந்தேகநபர்களில் 3 பேர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சரத் வெல்கம, குறித்த 3 பேரும் குற்றம் நடைபெறும்போது, கொழும்பில் நின்றனர். அதற்கான ஆதாரங்கள் சட்ட மா அதிபர் திணைக் களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே விளக்க மறியலில் வைக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. பிணை வழங்க வேண்டும் என்று சமர்ப்பணம் செய்தார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிபதி மா.இளஞ்செழியன், பொலிஸாரின் விசாரணை அறிக்கைகள் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் பரிசீலனையில் இருப்பதால், சந்தேகநபர்களைப் பிணையில் விடுவதனால் குழப்பம் ஏற்படும். சாட்சிகளுக்கு அச்சுறுத்தலாக அமையும். சாட்சிகள் சுதந்திரமாக இருக்க வேண்டும். விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டியது மேல் நீதிமன்றின் பொறுப்பு என்று சுட்டிக்காட்டினார். இதனால் சந்தேக நபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் நவம்பர் 9ஆம் திகதிவரை நீடித்து யாழ்.மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ-4)

## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் குப்பிளான் தெற்கு ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சிவலிங்கம் 10.08.2016 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - நன்னிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சேகரம்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் கனகமணியின் அன்புக் கணவரும் லிங்கனமலர், லிங்கனரூபன், லிங்கனவதனா, லிங்கனலதா, லிங்கனதாஸ் (அதிபர்), லிங்கனகீதா ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயசூரியன், சந்திரா, விக்கினேஸ்வரன், ரவீந்திரன், நிருத்திகா, ஜெயக்குமார் ஆகியோரின் மாமனாரும் கஜன்சிகா, தௌமிகா, லிபிசிகா, மிதுர்ஷன், வேனுஜன், அனிஸ்ரன், கோபி, பவித்திரன், காயர்த்தனா, சஞ்சய், சாருஜன், சஸ்வின், சுஜானன், ஆருஷா, ஆதர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஜான்வி, யஸ்மித் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.08.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குப்பிளான்தெற்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி மகேஸ்வரி இராசலிங்கம்



பிறப்பு: 10.07.1932
இறப்பு :08.08.2016

இருபாலையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு, மானிப்பாயை(மாவடி ஒழுங்கை) வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி இராசலிங்கம் கடந்த (08.08. 2016) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விசாகமுத்து-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் அருளானந்தன் (கனடா), சிவானந்தன் (டென்மார்க்), லோகானந்தன், தவமலர் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஷ்ணலீலா (கனடா), மாலினி (டென்மார்க்), கௌசலா (வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), இரவிச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் புவனேஸ்வரியின் அன்புச் சகோதரியும் சுஜித்தா.பப்சன்.கோபி, சிந்துஜா(கனடா), சதுர்திகா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரைசனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2016) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்

077 134 5908

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை சோமசுந்தரம்

(இளைப்பாறிய முகாமையாளர்-
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் -வவுனியா)



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணி, கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடங்களாகவும் கொண்ட செல்லத்துரை சோமசுந்தரம் 09.08.2016 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், தேவஞானியின் அன்புக் கணவரும், கஜந்தன், மேனகா ஆகியோரின் அன்புத் தந்தையும், உருத்திரரூபினி, ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும், Riya,Teesha ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னரத்தினம், பத்மநாதன், அருணாட்சலம், சரவணமுத்து, செல்வரத்தினம், ரங்கநாதன் மற்றும் யோகரத்தினம், சறோஜினிதேவி, கனகசுந்தரம், கமலாதேவி, ராஜதுரை, ஜெயதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சித்தன் கேணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர்,
சித்தன்கேணி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கஜந்தன் - 0094 7762 79776
மேனகா - 0094 7685 03334 (ஜே.3341) (13.18)

### திருமதி சிவஞானாம்பிகை (சந்திரா) லோகநாதன்



யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, விதானையார் வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானாம்பிகை லோகநாதன் 08.08.2016 திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவராசா - நவநீதம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இரத்தினம் தம்பதியரின் மருமகளும் சின்னத்துரை லோகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பிரசாந்தன் மற்றும் றம்மியா காலஞ்சென்ற நிருஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவஞானசோதி, சிவபாலன், சிவஞானஈஸ்வரி, சிவசிரோண்மணி, சிவபாலசறோஜினி, சிவானந்தநாதன், சிவநேசராசா, சிவபாலரெத்தினம், சிவதாசன், சிவஞானராசா, சிவயோகராணி, சிவஞானசுந்தரமூர்த்தி, சிவலிங்கம், சிவபாலகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகராசா, ஞானேந்திரராசா, பாலசுப்பிரமணியம், தேவநாதன், வாசுதேவன், இந்திரா, ரமணி, சுமதி, அமுதா, ஜெயந்தி, லோகேந்திரா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.08.2016 திங்கட் கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 16/3, விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சிவராசா சிவானந்தநாதன்
(நாதன் - சகோதரன்)

077 614 6434

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று வரை விளக்கமறியலில் தயா மாஸ்டர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் என்ற வேலாயுதம் தயாநிதிக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நேற்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தான் சுற்றவாளி என தெரிவித்ததையடுத்து, நிபந்தனையுடன் சுவுயபிணையில்செல்லஅவருக்கு நீதிமன்றம் அனுமதித்தது.

ஐந்து லட்சம் ரூபா காசுப்பிணையுடன், தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நான்கு அரச ஊழியர்களின் ஆள்பிணையில் செல்ல நீதிமன்றம் கட்டளையிட்டது.

எனினும், பிணையாளிகளை நீதிமன்றம் நேரில் பார்வையிட வேண்டும் எனத் தெரிவித்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், அந்தப் பிணையாளர்களை இன்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் முற்படுமாறு உத்தரவிட்டதுடன், அது வரையில் இந்த வழக்கின் எதிரியாகிய தயா மாஸ்டரை வவுனியா சிறைச்சாலையில், விளக்கமறியலில்வைக்குமாறுஉத்தரவிட்டார்.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்த பொதுமக்களை ராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரவிடாமல், தடுத்ததாக தயா மாஸ்டர் மீது குற்றம் சுமத்தி வவுனியா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் வரையில் வடக்கு மாகாணத்தை விட்டு தயா மாஸ்டர் வெளியில் செல்லக்கூடாது.ஒவ்வொரு நாளும் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் காலை 9 மணிக்கும், பகல் 12 மணிக்கும் இடையில் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையையும் வவுனியா மேல் நீதிமன்றம் விதித்தது. (வ-4)

## விக்கியுடன்

அமைச்சர்களான சுவாமிநாதன், ரிஷாத் பதியுதீன், பைசல் முஸ்தபா ஆகியோர் மீள்குடியேற்ற செயலணியில் அங்கம் வகிக்கின்றனர். மூன்று அமைச்சுகளின் செயலாளர்களும் இடம்பெற்றுள்ளனர். வடக்கு மாகாண பிரதம செயலாளரும் உள்வாங்கப்பட்டுள்ளார். பணிப்பாளர் ஒருவரை நியமிக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

மீள்குடியேற்றம் பற்றி வடக்கு மாகாண சபை ஆக்கபூர்வமாக செயற்பட்டு வருகின்றது. அதன் செயற்பாடுகளில் தலையிட நாம் விரும்பவில்லை. முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான சபையுடன் இணைந்து செயற்படவே விரும்புகின்றோம். முதலமைச்சருடன் கலந்துரையாடியே மேற்படி செயலணி முடிவுகளை எடுக்கும். இதற்கான பணிப்புரை விடுக்கப்படும்.

மீள்குடியேற்றப் பணிகள் பற்றி பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கையொன்றை விடுத்துள்ளது. இதற்குரிய நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. செயலணி தமது பணிகளை உரிய வகையில் முன்னெடுத்து வருகின்றது. வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதனுடன் இணைந்து செயற்பட முடியும்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் புத்தளத்தில் வாழ்கின்றனர். அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு எதிர்பார்க்கின்றனர். இதற்குரிய வழிவகைகள் செய்துகொடுக்கப்பட வேண்டும். அமைச்சரவை உபகுழுதான் செயலணி அமைத்துள்ளது. அதில் செயலாளர் உள்வாங்கப்பட்டுள்ளார். இந்தச் செயலணியில் முதலமைச்சர் இடம்பெறுவது பொருத்தமாக அமையாது – என்றார்.

அமைச்சர் சுவாமிநாதன், இது விடயத்தில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படவில்லை. மூன்று அமைச்சுகள் உள்ளடங்கும் வகையில் செயலணி அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு முதலமைச்சரோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களோ செயலணிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்க முடியும் – என்றார். (வ-5)

## 12போர் விமானங்கள்

கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது. விமானங்களை வழங்கும் ஆர்வம் கொண்ட விமான உற்பத்தியாளர்கள், உதவி உற்பத்தியாளர்கள், அதிகாரம் பொருந்திய அரச அதிகாரிகள் மூலம் விருப்பத்தின் அடிப்படையில் இலங்கை விமானப்படைக்காக பல்நோக்கு போர் விமானங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய ஆயுதங்களையும் கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சர் எனும் ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் கடற்பாதுகாப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு 8 தொடக்கம் 12 வரையான போர் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட வுள்ளன. தற்போது கையிருப்பில் உள்ளவை பயன்பாட்டுக் காலம் முடிவடைந்தவையாகும். புதியவற்றைக் கொள்வனவு செய்யவேண்டிய தேவையுள்ளது என அமைச்சர் தெரிவித்தார். (வ-5)

## எங்கள் நிலமும்

இருந்த காணியை அடையாளப்படுத்துகின்றார். இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறி கோரி பரவிப்பாஞ்சான் மக்கள் போராட்டங்கள் மேற்கொண்ட நிலையில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் அந்த காணிகளில் ஒரு பகுதி விடுவிக்கப்பட உள்ளதாக அறிவித்தார்.

உறுதியளித்தபடி காணிகள் விடுவிக்கப்படவில்லை என தெரிவித்த மக்கள் நேற்று குறித்த இடத்திற்குச் சென்று இராணுவ முகாம் அதிகாரியைச் சந்தித்து இந்த விடயம் தொடர்பாகக் கேட்டறிய முற்பட்டனர்.

இராணுவ அதிகாரி வெளியில் சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டதால் நீண்ட நேரம் காத்திருந்த மக்கள் அவரைச் சந்திக்காமலேயே வீடு திரும்பினர். (21,ரி3)

## பெற்ற குழந்தையை

கைவிடப்பட்டிருந்த நிலையில் கடந்த 7ஆம் திகதி அதிகாலை மீட்கப்பட்டது. அந்த வீட்டுக்கார இளைஞனே அந்தக் குழந்தையின் தந்தை என்று கைதான பெண் தெரிவிக்கிறார். அதனால் அவர்கள் இருவரும் டின்ஏ மாதிரிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். அவர்கள் விசாரணையிலுள்ளனர். விசாரணையின் பின்னர் மல்லாகம் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,109,101)

## நல்லூரில்

செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் புத்தளத்தைச் சேர்ந்த சிங்களவர்கள். முதலில் 2 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தியபோதே, ஏனையவர்கள் பற்றிய தகவல்களை அவர்கள் தெரிவித்தனர். அதனடிப் படையிலேயே 7 பேரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்படும்போது அவர்களிடமிருந்த பொருள்கள், பணம் எதுவும் மீட்கப்படவில்லை. எனினும் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருடிய குற்றச்சாட்டில் ஏற்கனவே 3 பெண்கள் உள்ளிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அந்தக் குடும்பமும் புத்தளத்தைச் சேர்ந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## அமரசேகரவின்

உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்தது. தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பின் தலைவர் குணதாச அமரசேகர தாக்கல் செய்த மனு ஒன்றைத் தள்ளுபடி செய்த பின்னர் தலைமை நீதியரசர் க. ஸ்ரீபவன் இதனை அறிவித்தார்.

போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு பன்னாட்டு நீதிபதிகளை அழைக்க அரசு இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். அரசு இதுவரை அவரின் கருத்தை நிராகரிக்கவில்லை.

எனவே, தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் கீழ் இது குறித்து தெளிவுபடுத்தும்படி அரசுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு உயர் நீதிமன்றில் மனு மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த மனு அழைக்கப்பட்ட போது, கருத்துக்களைத் தெரிவித்த அரசு தரப்பு வழக்கறிஞர், தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போதிலும், அந்தச் சட்டம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்தார்.

எனவே இந்த மனுவை முன்கொண்டு விசாரணை செய்ய முடியாதென்று கூறிய அரச தரப்பின் வழக்கறிஞர் அதனை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் மனுவை தள்ளுபடி செய்வதாக அறிவித்தனர். (வ-5)


## கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம் வரலட்சுமிக் காப்பு

நாளை (12.08.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு காப்புக்கட்ட விரும்பும் அடியார்கள் தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

பரிபாலன சபை

(சி/ 21367)(12.15)



## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி சர்வேஸ்வரி குணசிங்கம் அவர்களின் பாசமிகு தந்தை

**சீனியர் இரத்தினம்**

அவர்களின் மறைவையொட்டி துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
அச்சுவேலி.



## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நண்பி **சியாமளா** அவர்களின் அன்புச் சகோதரன்

**ஞானசோதி பிரகாஷ்**



அவர்களின் மறைவினால் மீளாத்துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா இறைவனடியில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கெ. பிரகாஸ் குடும்பம்
கங்கா போட்டோ & வீடியோ, கோண்டாவில் சந்தி.



## கண்ணீர் அஞ்சலி

**ஞானசோதி பிரகாஷ்**



அவர்கள் கடந்த 07.08.2016 அன்று பிரான்சில் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'நூஉ'
செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்
16/2, சீனியர்லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை தங்கராசா

(கணித ஆசான்)



கட்டுவன் மேற்கு நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தங்கராசா நேற்று (10.08. 2016) புதன்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் அன்னரத்தினத்தின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.08.2016) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாச்சிமார் கோயிலடி,
கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.



### திருமதி கனகம்மா கந்தசாமி

மணற்காடு அம்மன் கோயிலைப் பிறப்பிடமாகவும் காரைநகர், கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா கந்தசாமி நேற்று(10.08.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும், பேரம்பலம், காலஞ்சென்ற நடராசா மற்றும் திருநீலகண்டசிவம் ஆகியோரின் அன்புத் தாயும் சரஸ்வதி, சாந்தி ஆகியோரின் மாமியும், சசிகரன், நவகரன், வாகினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2016) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலகிரிமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்.

கருங்காலி,
காரைநகர்.

[illegible] நிலையம், யாழ்ப்பாணம்,
சிவம் ஸ்ரோர்ஸ்(ஆலடி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராளிகளின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுக் காலத்தில் தங்களுக்கு விச ஊசி ஏற்றப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைத்துள்ளனர். அவை தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றன.

மாகாண சுகாதார அமைச்சர்களின் மாநாட்டில், வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் இந்த விடயம் தொடர்பில் அறிக்கை கோரப்படவுள்ளது. உள்நாட்டு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய தேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பன்னாட்டு மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு பரிந்துரைத்துள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது. உள்நாட்டுப் பரிசோதனையில் நம்பிக்கை இழக்கும் பட்சத்தில் பன்னாட்டுப் பரிசோதனையை மேற்கொள்ள அரசு தயார் - என்றார் அமைச்சரவைப் பேச்சாளர்.

(வ-5)

## மரண அறிவித்தல்

### தங்கவேல் குழந்தைவேல் (ஆச்சாரி)

பிறப்பு 11 . 08 . 1945



இறப்பு 10 . 08 . 2016

கொழும்பைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் குழந்தைவேல் (ஆச்சாரி) நேற்று (10.08.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கவேல்-தாயம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரன் ஆச்சாரி-வள்ளியம்மா தம்பதிகளின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சங்கர், சசிகலா, சிறிதர், சங்கீதா(கனடா), விஜயன்(கனடா), ராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் அமுதா, ராகவன், சிந்தா, சிவகுமார்(கனடா).ஹேமா(கனடா) ஆகியோரின் மாமனாரும் விதுநிசா, தனுஷ், ஸ்ரீநமிதா, லக்கியா, விதுஷன், தர்ஷன், வினிசன், துஷாரா, விதுஷா, ஆஷா, தினேஸ், தீபிகா, விஷால், வினோத்,வினித்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2016) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பலாலி வீதி,**
**2ஆம் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**சங்கர் (மகன்)**
**077 8689505**

## மரண அறிவித்தல்

தோற்றம்:
வல்வெட்டித்துறை
**16.11.1954**



மறைவு:
திருச்சி
**06.08.2016**

### கதிரவேல்பிள்ளை (ஆறுமுகசாமி) அரிச்சந்திரபோஸ் (அரிச்சம்)

இலங்கை நெடியகாடு வல்வெட்டிதுறையை பிறப்பிடமாகவும் தற்போது திருச்சி KK நகரை வசிப்பிடமாகவும் கொண்ட **தீபாரம் டிரேடர்ஸ்** உரிமையாளருமான அரிச்சந்திரபோஸ் அவர்கள் 06.08.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் பொன்னுத்துரை கதிரவேல்பிள்ளை, சீதாலட்சுமி தம்பதிகளின் புதல்வரும் அமரர் கணேசமூர்த்தி சந்திரக்கண்டு தம்பதிகளின் மருமகனும் அமிர்தவதனா (தெய்வம்) அவர்களின் அன்புக் கணவரும், ஜெயதீபா அவர்களின் தகப்பனாரும், ரமணன் அவர்களின் மாமனாரும், அர்ச்சனா, அபிநயா, அஜந் ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் சுபாஸ்சந்திரபோஸ், அமரர் மலரோகினி அம்மா, காந்திமதி, சரச்சந்திரபோஸ், பத்மாவதி, அமரர் ஜெயச்சந்திரபோஸ், செல்வச்சந்திரபோஸ், இந்துமதி, ஞானச்சந்திரபோஸ், யோகச்சந்திரபோஸ், பானுமதி ஆகியோரின் சகோதரனும் ராசலட்சுமி, அமரர் அருமைசந்திரலிங்கம், முருகுப்பிள்ளை, தனலட்சுமி, விஜயகுமார், கீதா, செல்வரட்ணம், ஜெயந்தி, சுபாசினி, கிருஷ்ணகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11.08.2016 வியாழக்கிழமை காலை 10.30க்கு வீட்டில் இடம்பெற்று திருச்சி ஓயாமாரி மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை அறியத்தருகிறோம்.

தகவல்:
**மனைவி, மகள், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்**
**கைபேசி : 0091 90033 25819, 87603 10686**

## மரண அறிவித்தல்

### தம்பிஜயா மதியழகன்



மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பேர்மிங்கம் பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா மதியழகன் கடந்த (06.08. 2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா-பவளம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராஜா (K.K.S) மற்றும் மனோரஞ்சிதம் (கனடா) தம்பதிகளின் மருமகனும் ராதாவின் அன்புக் கணவரும் சௌமியாவின் ஆருயிர் தந்தையும் காலஞ்சென்ற திருநடராஜா மற்றும் கன்னிகா பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவபூசணி மற்றும் மயூரதாஸ், தேவராணி, தயாநிதி (பிரித்தானியா, யா/பெரியபுலம் மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற சத்தியபாலன் மற்றும் ராஜேஸ்வரி (யா/முத்துத்தம்பி மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியர்), செல்லத்துரை, மோகனராஜன் (பிரித்தானியா), குகன்(கனடா), சாந்தினி(பிரித்தானியா), ஜெயந்தினி(கனடா), மோகன்ராஜ்(கனடா), பரதன்(பிரித்தானியா), குமுதினி(கனடா), அமுதன்(கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அனுரதன், மயூரி, சிவானுகா, சாருகா, சாரங்கா, கேசிகா, கேசிகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தனுஜன், தனுஜா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2016) வியாழக்கிழமை பிரித்தானியாவில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கேணியடி,**
**கொக்குவில் மேற்கு.**


**தகவல்: மயூரதாஸ் (மயூர்-சகோதரன்)**
**077 7066160**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்ரிட் - செவில்லா இன்று பலப்பரீட்சை

ஐரோப்பிய கால்பந்தாட்ட சம்மேளனக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ரியல் மட்ரிட், செவில்லா அணிகள் இன்று மோதவுள்ளன.
ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை ரியல் மட்ரிட் கைப்பற்றியிருந்தது.
இதன் பின்னர் ரியல் மட்ரிட் களமிறங்கும் முதலாவது ஆட்டமாக இந்த ஆட்டம் அமைந்துள்ளமையால் எதிர்பார்ப்புக்கள் சற்று அதிகமாகவே எகிறியுள்ளன. (ம)


பயிற்சியில் மட்ரிட் வீரர் லூக்கா



# துவண்டுகிடந்த இந்தியாவை தூக்கி நிறுத்தினார் அஸ்வின்

தீவுகளுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் தொடரின் நேற்றுமுன்தின முதல் நாளில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் இந்தியா 234-5 என்றுள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியாவுக்கு ஆரம்ப வீரர்களாக தவான் மற்றும் லோகேஸ் ராகுல். ஒரே ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் தவான். அறிமுக வீரரான 19 வயதேயான ஜோசெப் தனது முதல் இலக்காக கோக்லியை வீழ்த்தினார். ராகுல், ரகானே இணை ஓரளவு தாக்குப் பிடித்தது. அரைச்சதம் கடந்தார் ராகுல். சரியாக 50 ஓட்டங்களை எடுத்திருந்த பொழுது சேஸின் பந்துப் பரிமாற்றத்தில் பிரீத்வைட்டிடம் பிடிகொடுத்து இருக்கைக்குத் திரும்பினார். அடுத்த சில நிமிடங்களில் ரகானேயின் ஆட்டமும் சேஸால் முடிவு கண்டது.
புஜாரா வெளியேற்றப்பட்டு விளையாடும் பதினொருவரில் உள்வாங்கப்பட்டிருந்தார் ரோகித் சர்மா. ஆனால், அவர் ஒற்றையிலக்கத்தை விட்டுத் தாண்டவில்லை. தற்போது இந்தியா 126-5. களத்தில் அஸ்வின், சகா இணை.
நீண்டு நிலைபெற்றது. டெஸ்ட் ஆட்டங்களுக்குரிய பாணியில் மிக நிதானமாக தீவுகளின் பந்துப் பரிமாற்றங்களை மிகவும் சோதித்தனர். இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. அரைச்சதம் கடந்தார் அஸ்வின். முதல் நாள் முடிவில் இந்தியா 234-5 என்றிருந்தது. (ம)

## இந்தியாவுக்கு எதிரான தொடர் மே.இ.தீவுகள் அணி அறிவிப்பு

இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடருக்கான கே.பிரீத்வைட் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகளின் அணி அறிவிக்கப்பட்டது.
இந்தியா, மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையே இந்த மாத இறுதியில் இரு ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடர் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான தீவுகளின் அணி நேற்று அறிவிக்கப்பட்டது.
கடந்த ஆறு வருடமாக தலைவராகச் செயற்பட்டுவந்த சமி, அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, பிரீத்வைட் புதிய தலைவராகக் குறிப்பிடப்பட்டார். ஒரு வீரராகவேனும் சமி அணியில் இடம்பெறவில்லை.
தீவுகளின் அணி - பிளெட்சர் (தலைவர்), ரசல், கார்லோஸ் பிரீத்வைட், கிறிஸ் கெய்ல், வெயின் பிராவோ, எவின் லெவிஸ், ஜேசன் கோல்டர், ஜோன்சன் சார்லஸ், பொலார்ட், லென்டில் சிம்மன்ஸ், சாமுவேல்ஸ், சாமுவெல் பத்ரி, சுனில் நரைன். (ம)



## சிங்கங்களுடன் செல்பி; ஜடேயாவுக்கு அபராதம்

இந்தியாவின் குஜராத் மாநில சரணாலயத்தில் சிங்கங்களுடன் செல்பி எடுத்த விவகாரத்தில் இந்திய கிரிக்கெட் வீரர் ரவீந்திர ஜடேயாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.
குஜராத் மானில கிர் சரணாலயத்துக்கு கடந்த ஜுன் 14 ஆம் திகதி தனது குடும்பத்தினருடன் சுற்றுலா சென்ற ரவீந்திர ஜடேயா, வாகனத்திலிருந்து இறங்கி சிங்கங்களுடன் செல்பி எடுத்துக்கொண்டார். கிர் காடுகளில் சுற்றுலாவிலிருக்கும் போது வாகனத்தை விட்டு இறங்கக் கூடாது என்பது சட்டம். எனவே ஜடேயா வனத்துறையின் சட்ட திட்டங்களை மீறியதாகத் தெரிவிக்கப்பட்டு, அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. தற்போது 20 ஆயிரம் ரூபாய்கள் (இந்திய மதிப்பில்) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ம)



# இங்கி. - பாக். இறுதி டெஸ்ட் இன்று

## கைப்பற்றுவோம் என்கிறார் ரூட்




இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டம் இங்கிலாந்தின் கெனிங்ரன் ஓவல் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.
முடிவடைந்த முதல் மூன்று டெஸ்ட் ஆட்டங்களில் முதலாவதில் பாகிஸ்தானும் ஏனைய இரண்டு ஆட்டங்களில் இங்கிலாந்தும் வெற்றிபெற்றன. இங்கிலாந்து 2:1 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது.
இன்று ஆரம்பமாகும் இந்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும், அது இங்கிலாந்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் குறைந்த பட்சம் தொடரை சமநிலைப்படுத்தயாவது கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்ற இக்கட்டான நிலைமை பாகிஸ்தானுக்கு உள்ளது.
"பாகிஸ்தான் எம்மிடமிருந்து தொடரைக் கைப்பற்றும் என்று கருதவில்லை. ஆட்டத்தை சமநிலையில் முடித்தாலேயே 2:1 என்று கிண்ணத்தை வெல்லக்கூடிய வாய்ப்பு எமக்கு உள்ளது. ஆனால் 3:1 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றவே விரும்புகிறோம். இறுதி டெஸ்ட்டிலும் பாகிஸ்தானை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை மிகையாகவே உள்ளது" என இங்கிலாந்தின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான ரூட் தெரிவித்தார்.
"இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி, நிச்சயம் தொடரை சமன் செய்வோம். வெற்றியுடன் தொடரை ஆரம்பித்ததைப்போல வெற்றியுடன் தொடரை நிறைவு செய்வோம்" என பாகிஸ்தானின் நட்சத்திரப் பந்துவீச்சாளரான ஆமிர் தெரிவித்தார்.
மொத்தத்தில் இந்த ஆட்டம் இங்கிலாந்து - பாகிஸ்தான் என இரு அணிகளுக்கு இடையிலான ஆட்டமாக மட்டுமல்லாமல், ஆமிர் வேகத்துக்கும் ரூட்டின் துடுப்பாட்டத்துக்கும் இடையிலான போட்டியாகவும் பார்க்கப்படுகிறது. (ம)

## சமநிலைப்படுத்துவோம் என்கிறார் ஆமிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதியின் கரப்பந்தாட்டத் தொடர்; இந்து இளைஞர், வளர்மதி சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 11
புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் இரண்டு பிரிவுகளாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், பி பிரிவில் வளர்மதி அணியும் கிண்ணங்களைக் கைப்பற்றின.

**இந்து இளைஞர் - கலைமதி**
புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த இறுதியாட்டங்கள் நடைபெற்றன. ஏ பிரிவு இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து கலைமதி அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் செற்றைக் கைப்பற்றியது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி. இரண்டாவது செற்றை 25:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது கலைமதி. ஆனால் மூன்றாவது, நான்காவது செற்கள் முறையே 25:20, 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞரின் வசமாக, முடிவில் அந்த அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. சிறந்த வீரராக ஆவரங்கால் இந்து இளைஞர் அணியின் எஸ். ஜெனகன், வளர்ந்து வரும் வீரராக அச்சுவேலி யுத் அணியின்.கு. வினிஸ்ரன் ஆகியோர் தெரிவாகினர்.

**வளர்மதி - இந்து இளைஞர்**
பி பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 25:20, 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது வளர்மதி. மூன்றாவது செற்றை 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி வளர்மதியின் நேர் செற் வாய்ப்பை தகர்த்தது இந்து இளைஞர் அணி. 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நான்காவது செற் வளர்மதியின் வசமாக முடிவில் அந்த அணி 3:1 என்ற செற் கணக்கில் சம்பியனானது. சிறந்த வீரனாக புத்தூர் வளர்மதி அணியின் சபேசன், வளர்ந்து வரும் வீரராக ஆவரங்கால் இந்து இளைஞர் அணியின் குபேரன் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)


வளர்மதி அணி


இந்து இளைஞர் அணி

## இன்றைய மோதல்கள்

கரணவாய், ஓக 11

**இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடர்**
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**பாரதி வி.கழக கால்பந்தாட்டம்**
பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**வொலிகிங்ஸின் கரப்பந்தாட்டம்**
கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து மல்லாகம் நியூவொரியஸ் விளையாட்டுக் கழகமும், இரவு 7.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் அணியும், இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் அணியும் மோதவுள்ளன. (ம-422-108)

## சைக்கிளோட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.11
அரியாலை சனசமூக நிலையத்தின் 67ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சைக்கிளோட்டப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.
ஆண்களுக்கான போட்டி 60 கிலோ மீற்றர் தூரமுடையதாகவும், பெண்களுக்கான போட்டி 15 கிலோமீற்றர் தூரமுடையதாகவும் நடைபெறும்.
பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் தமது பதிவுகளை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-23)

## விழிப்புலனற்றவர்களின் துடுப்பாட்டம் வடக்கை வீழ்த்தியது கிழக்கு அணி




யாழ்ப்பாணம் ஓக. 12
உயிரிழை நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் விழிப்புலனற்ற அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட துடுப்பாட்டத்தில் (ஓசைப் பந்துத் துடுப்பாட்டம்) வடக்கு மாகாண அணியை வீழ்த்தியது கிழக்கு மாகாண அணி.பரந்தன் இந்து மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இந்ந ஆட்டம் நடைபெற்றது. 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய வடக்கு அணி நிர்ணயிக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கதிசன் 47 ஓட்டங்களையும், சிவகுமார் 46 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிழக்கு விழிப்புலனற்றோர் அணியின் சார்பில் வில்சன், யதீஸ் இருவரும் தலா மூன்று இலக்குகளை வீழ்த்தினர். 268 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிழக்கு விழிப்புலனற்றோர் 29 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக அமல் 46 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மயூரன், கமிலஸ் இருவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சென்றலை நொறுக்கியது சென்றலைட்ஸ் கழகம்

இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென்றலைட்ஸ் அணி அபார வெற்றியைப் பதிவுசெய்தது.
சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து சென்றல் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 421 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கார்த்தீபன் 88 ஓட்டங்களை யும், நிரோசன் 75 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென்றல் அணியின் சார்பில் திருக்குமரன், சுவாதீஸ் இருவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.
422 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றல் அணி 64 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது: 64 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதனையடுத்து சென்றலைட்ஸ் அணி 357 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணியின் சார்பில் மயூரன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம-23)

# செரீனாவை வெளியேற்றினார் உக்ரைனின் ஸ்விட்டோலினா

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான செரீனா வில்லியம்ஸ், ரியோ ஒலிம்பிக் தொடரின் ரென்னிஸ் ஒற்றையர் ஆட்டங்களிலிருந்தும் அதிர்ச்சிகரமாக வெளியேற்றப்பட்டார். இரட்டையர் ஆட்டங்களில் செரீனா, வீனஸ் இணை ஏற்கனவே வெளியேற்றப்பட்டுவிட்டது. இந்த நிலையில் ஒற்றையர் பிரிவு ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸை எதிர்த்து உக்ரைனின் ஸ்விட்டோலினா மோதினார். முதலிரு செற்களையும் முறையே 6:4, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஸ்விட்டோலினா 2:0 என்ற நேர் செற் கணக்கில் செரீனாவை வெளியேற்றினார். ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஓர் அதிர்ச்சிச் சம்பவமாக இது பதிவாகியது. (ம)



# ஜூடோ அரையிறுதிப் போட்டியில் இலங்கை வீரர் நுவான் தர்மசேன

ரியோ ஒலிம்பிக் தொடரில் ஜூடோப் போட்டியில் 73 கிலோ எடைப்பிரிவில் இலங்கை வீரர் சாமர நுவான் தர்மசேன அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார். நுவான் தர்மசேன, தனது காலிறுதிச் சுற்றில் அமெரிக்க வீரரை வீழ்த்தியே அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். இவர் தனது அரையிறுதியில் ஜோர்ஜியா நாட்டு வீரருடன் மோதவுள்ளார்.

ஒலிம்பிக் தொடரில் ஜூடோப் போட்டியில் இலங்கை வீரர் ஒருவர் அரையிறுதிச் சுற்றுக்குத் தகுதிபெறுவது இதுவே முதல் தடவையாகும். (ம)






SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் தொழில்தேடுவோருக்கானது
ஷாம்சனின் நேரடி உரையாடற்பயிற்சி முலமான ஆங்கில பாடநெறி
சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் 13.08.2016 சனிக்கிழமை
மாலை 03.00 - 05.00
3 மாதங்களில நீங்கள் சுயமாக ஆங்கிலம் பேசுவதற்கான 100 வீத பிரக்டிகல் பேச்சுப்பயிற்சி
பாடப்புத்தகங்கள் சான்றிதழ், Video DVD, அனைத்தும் இலவசம்.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில சரவதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:
யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
இலவசம்: PHOTOCOPIES, படிததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...
செல்வோர் : யாழ். வவனி. பிற மாவட்டங்களைச் சேரந்த நூற்றுக கணக்கானோர் AF இல் படிக்கிறாரகள்.
ஆரம்பம்: 28.08.2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

## இலங்கை அணியின் பயிற்சியாளராக சமிந்த வாஸ்

இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான சமிந்த வாஸ் அந்த அணியின் வேகப்பந்து வீச்சு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவரான திலங்க சுமதிபால இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார். இலங்கை அணியில் வேகப் பந்துவீச்சு வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் அதைச் சரிசெய்யவே வாஸின் நியமனம் அமைந்துள்ளதாக சுமதிபால மேலும் தெரிவித்தார். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.